# தைலாப்பெட்டி



ஏ.பீர் முகம்மது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைலாப்பொட்டி

மண்ணின் மொழியில் மக்களின் கதைகள்

ஏ. பீர் முகம்மது
B.A. PGDE. Dip.in.Edu.Mng. Dip.in Psychology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைலாப்பொட்டி
சிறுகதைகள்
© ஏ. பீர் முகம்மது

பக்கங்கள்: 82
முதல் பதிப்பு: டிசம்பர் 2023

அட்டை: ASM.நஸீம்
அட்டைப்பட ஓவியம்: ரக்ஷானா ஷரிபுத்தீன் கோபிஹரன்
நூல் வடிவமைப்பு: சந்தோஷ் கொளஞ்சி

Thailapotti
Short Stories
© A.Peer Mohamed

Pages: 82
First Edtion: December 2023

Cover Design by: ASM Nazeem
Cover Drawing: Rakshana Sharifudden Gopiharan
Book Design by: Santhosh Kolanji

ISBN: 9786245816248

இந்திய விற்பனை உரிமை
Common folks
No: 9/2, Second floor, Sembudoss Street
Mannadi, Broadway, Chennai - 600001
TamilNadu, India.
whatsapp: +91 7550174762

கஸல் பதிப்பகம்
219, ஏ.கே.எம்.வீதி ஏறாவூர்
இலங்கை
+ 94 770807787
mail@ghazal.lk


Ghazal Publications
219, A.K.M Road, Eravur
Srilanka
+ 94 770807787
mail@ghazal.lk

website : www.ghazal.lk

விலை: இலங்கை ரூ. 470 ◇ இந்தியா ரூ. 100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்



பட்டய கட்டட கலைஞர்

எம். ஐ. எம். இஸ்மாயில்

அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மணம் பரப்பும் தைலாப்பொட்டி கதைகள்

கல்விப் புலத்திலும் படைப்புலகிலும் நன்கு அறியப்பட்டவராக காணப்படுபவர் ஏ.பீர் முகம்மது ஆவார். "கவிதை, கட்டுரை, சிறுகதை, திறன் நோக்கு, முஸ்லிம் அரசியல் என்று பல தளங்களில் என்னைத் தேட முடியும் " என்று அவரே ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருப்பார். மேலும் இவற்றைத் தாண்டும் தெளிந்த சிந்தனையும் காலத்தை உச்சரித்துக் கடக்கும் தீட்சண்ய பார்வையும் உரையாடல் நேர்த்தியும் கொண்டவராக இவரை நாம் அடையாளப்படுத்தலாம்.

'இலட்சியங்கள் நிறைவேறுகின்றன' எனும் முதற்சிறுகதையுடன் ஆரம்பித்த இவரது கதைப்பயணம் தைலாப்பொட்டி என்னும் சிறுகதைத் தொகுதிவரை நீண்டிருக்கின்றது. இந்த முயற்சியில் தவிர்க்கவியலாத இடையீடாக இவர் மேற்கொண்ட சோதனை முயற்சியே தைலாப் பொட்டியாகும். மண்ணின் மொழியில் மக்களின் கதைகள் என்ற பீடிகையுடன் இவர் தனது கதைகளை அறிமுகம் செய்து வைக்கின்றார். இந்த அறிமுகமே ஒட்டுமொத்த கதைகளினதும் பொருண்மையைப் படம் பிடித்துக் காட்டி விடுகின்றது.

மண்ணின் மொழியில் கதைகள் கேட்டுப் பழகிய சமூகத்தினர் நாமே. நமக்கு இருக்கும் செழுமையான வாய்மொழிக் கதை மரபு இதற்குத் தக்க சான்று. வாய்மொழிப் பாடல்களை ஆராய்ந்த அளவிற்கு வாய்மொழிக் கதைகளை நாம் பேசாது விட்டு விட்டோம். இதன் விளைவையும் அவசியத்தையும் தைலாப்பெட்டியின் வரவுடன் ஒருங்கே வைத்துப் பார்க்கத் தோன்றுகின்றது.

நவீன சிறுகதை வடிவம் ஆரம்பமாகி செழித்து வளர்ந்த காலங்களில் இருந்து இன்றுவரை மண்ணின் மொழிகளும் மக்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளும் பல கோணங்களில் சொல்லப்பட்டவைகள்தாம். ஆனால் மொழிகளுக்குள்ளும் மக்களுக்குள்ளும் பிடிபடாத கதைகள்தாம் எத்தனை! பிடிபட்டாலும் நிறங்கள் மாறி மாயாஜாலம் காட்டும் கோலங்கள்தான் எத்தனை !

கிழக்கிலங்கையின் முஸ்லிம் கிராமங்கள் அறுந்து வீழாத ரயில் பெட்டிகள் போன்ற தொடர்பினைக் கொண்டவை. இவர்களது பேச்சு மொழியும் பழக்க வழக்கங்களும்கூட தங்களுக்குள் குறைந்த பாகுபாடுகளையே பிரதிபலிப்பவை. நவீன சிந்தனைகள் இவற்றை உருக்குலைத்துப் போட்டாலும் எஞ்சிக் கிடக்கும் சரடுகளில் இருந்து உயிர் பெறக் காத்திருப்பவை.

இப்படித்தான் ஏ பீர்முகம்மது அவர்களின் தைலாப்பொட்டி கதைகளும் மீளுயிர்ப்புக் கொள்கின்றன. இக்கதைத் தொகுதியின் கதைமாந்தர்களும் சம்பவங்களும் இம்மண்ணிலிருந்தே பிறக்கின்றார்கள். வாழ்கின்றார்கள். மடிகின்றார்கள். ஆனால் அவர்களின் மொழியும் கதைகளும் அலைவுற்றபடியே இருக்கின்றன. அவற்றை கதைகளாக பீர்முகம்மது பத்திரப்படுத்தி இருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இன்றைய கதைகளின் முகங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. பாரம்பரிய கதை சொல்லல் முறையில் இருந்து பின் நவீனத்துவச் செல்நெறிவரை எத்தனையோ உருவ மாற்றங்களைக் கதைகளில் கடந்து விட்டோம். ஆனால் இதுதான் கதை வடிவம் என்று பிடித்து வைக்க முடியவில்லை. முடியும் வடிவங்களைப் பிடித்துக் கதை சொல்வதே உசிதம் என்று தோன்றுகிறது.

புழங்கு மொழியில் முழுக் கதையையும் சொல்வது எழுத்தாளன் ஏற்றுக் கொண்டுள்ள பெரும் சவால். இன்றைய நாட்களில் பழங்கால நினைவுகளை அசைபோடும் பீர்முகம்மது போன்ற அனுபவ பிராகிருதி ஒருவராலேதான் இது சாத்தியமாகும்.

முதலில் பேச்சு மொழியை (கிளை மொழி) முடிந்தவரை அப்படியே பயன்படுத்த வேண்டும். இதில் ஏகப்பட்ட பாடபேதங்களுடன் வரும் பேச்சு மொழி பற்றிய தெளிவினை கண்டடைய வேண்டும். குறிப்பாகப் பழங்கால பொருட்பெயர்கள். அவற்றுடன் தொடர்பான உட்கிளைப் பெயர்கள், பிறமொழிப் பெயர்கள் என்பவற்றை நன்கறிந்து கதை மொழிக்குள் சேர்க்க வேண்டும். வினைச்சொற்களையும் அவற்றின் விகற்பங்களையும் சமூகப் புழக்கத்தில் அவை கொண்டுள்ள நுணுக்க வேறுபாடுகளையும் அறிந்து கதை சொல்ல வேண்டும். இவ்வாறான மொழி விஞ்ஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தவனே இவ்வகையறாக் கதை சொல்லலில் வெற்றி அடைந்தவனாகின்றான்.

பொதுவாக கதைகளில் ஆங்காங்கே இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்களுக்குப் பின்னிணைப்பாக எழுத்து வடிவம் தரப்படுவதுண்டு. அப்படி ஒரு முயற்சி இவரது கதைகளுக்குள் சாத்தியமற்றுப் போகவே வாய்ப்புண்டு. குறிப்பாக தைலாப்பொட்டி என்னும் கதைக்குள் வெசகளம், சுறுக்கா, வங்கிசம், சொட்டு, சாப்பூடு, கணகாட்டு, புணிப்போடுதல், சக்கட்டு, சவுக்கம், பொணச்சிரித்தல், கொதரத்து, வேளவு, சாப்பு என்று நீளும் பேச்சு வழக்குப் பட்டியல் பெரிது. இப்படியாக ஒவ்வொரு கதைகளிலும் அள்ள அள்ளக் குறையாத அமிர்தமாக பேச்சுவழக்குச் சொற்களின் பெருக்கம் நமக்குக் கிடைக்கிறது.

இச்சொற்களைப் பயன்படுத்துவதில் உள்ள உச்சரிப்புத் தெளிவையும் தன் கதைகளின் ஊடே பீர்முகம்மது பேணியிருக்கிறார். ப்படித்தான், ப்ப, ல்லாத, ண்டெல்லாம், ம்மாக்கு, ன்னொரு என்பது ஒரு வகை என்றால் மற்றொரு வகையில் சுர்ரன், கலஞ்சி, பாப்பம், வெளங்கிச்சி, கெதில என்று எழுதுகிறார்.

இவை தவிர மரூஉ, மங்கலம், இடக்கரடக்கல், இணைமொழிகள், சமயப் புழங்குச் சொற்கள், பிரதேச தனித்துவ சொற்கள் என்பவற்றையெல்லாம் தனது கதை மொழிக்குள் கொண்டு வந்திருக்கிறார். இவரது கதைகளின் உயிரே கதை மொழி என்பதால் இவற்றை இன்னும் ஆழமாக ஆராயத் தோன்றுகின்றது.

அருகருகே வாழ்ந்து வரும் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கிடையேயும் பேச்சு வழக்கு பாட பேதங்கள் உண்டு என்பதை இவரது கதை மொழியில் இருந்து புரிந்து கொள்ளலாம். ஓர் ஊரில் 'பொண்டுகச் சட்டி' என்பதை இன்னொரு ஊரில் 'பொம்புளச் செட்டி' என்று வழங்குகின்றனர். மேலும் 'தல வாணி'யை 'தெலகாணி' என்றும் 'லாத்தா'வை 'ராத்தா' என்றும் 'மருதவண்டி'யை 'மருதோண்டி' என்றும் புரிந்து கொள்ளும் வழக்கு இக்கதைக் களப் பிரதேசங்களில் உண்டு.மொழியியல் நோக்கில் இக்கதைகளை நோக்குகின்றவர்களுக்கு இப்பாட பேதங்கள் பெருவிருந்தாய் அமையக்கூடும். இவ்வகையில் 'கிழக்கிலங்கை முஸ்லிம் வட்டாரச் சொல்லகராதி 'ஒன்றை ஆக்குவதற்கான சொற்களஞ்சியப் பட்டியலை இக்கதைகள் குறைவின்றித் தரக்கூடியன.

இவரது கதைகளின் தலைப்புக்கள் இழந்துபோன பண்பாட்டினை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீட்டுருவாக்கம் செய்யும் கைங்கரியத்தை முதலில் செய்து விடுகின்றன. 'தைலாப் பொட்டி' 'புள்ளக் கொழுக்கட்ட' 'சிலேட்டுப் பலக' 'கூப்பன் பொத்தகம்' 'புள்ளப் பூச்சி' 'பட்டக் கலியாணம்' 'பாய் யாவாரம் ' போன்றன இவ்வகையின. புதிய தலைமுறை இச்சொற்களுக்குப் பின்னாலுள்ள வரலாற்றை அறிந்து கொள்ளும் நோக்கிலும் பழைய தலைமுறை இரைமீட்டு மகிழும் நோக்கிலும் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் எச்சங்கள் இன்றும் சில கிராமங்களில் வழக்கில் இருந்தாலும் அவற்றின் வேர்களை கண்டுகொள்ளும் கூர்மையை கதைகள் தந்து விடுகின்றன.

'பட்டக் கலியாணம் ' மிகவும் சுவாரஸ்யமான கதை. ஊராரின் சடங்குகளுக்குப் போய் தான் அன்பளிப்பாக வைத்த பணத்தை மீளப் பெறுவதற்காக தென்னம்பிள்ளைக்கு 'பட்டக் கலியாணம்' நடத்தும் கண்காணியார் கங்காணி மனைவி ஆகியோரின் கதையே இது. கல்யாண நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் அருகில் இருந்து குறிப்பெடுத்தால்கூட சொல்ல முடியாத சொல் நேர்த்தியில் இக்கதை எழுதப்பட்டுள்ளது. கதையின் இடையில் வரும் ஊர் வரலாறுகூட கதைக்கு இடைஞ்சல் இல்லாமல் நகர்கின்றது. கதையின் முடிவு கதைக்குத் தரும் பலம் கிராமியம் பற்றிய தத்ரூபமான புரிதலாகும்.

"நீ வெச்ச காசெல்லாம் வந்திட்டா" கண்காணியாரு பொஞ்சாதியக் கேக்காரு.

"ரெண்டு பேரு வெரல்ல. பாப்பம்" ண்டு புரிசன்ட மொகத்தப் பாக்கா.

அந்தப் பார்வையில் உள்ள உணர்வுகளை பீர் முகம்மது எழுதவில்லை. எழுத வேண்டிய தேவையுமில்லை. ஆனால் நாம் அதனை பத்தாக நூறாக உணர்ந்து கொள்கிறோம்.

கதைகளில் இடம்பெறும் ஊர்களும் சம்பவங்களும் உறவுகளும் அழுத்தமான இடத்தை பிடித்து விடுகின்றன. புதுமையை நொந்து பழமையைப் போற்றும் பிடிவாதக் குணத்தையும் அவை வெளிப்படுத்துகின்றன. சமூக விமர்சனங்களைப் புறந்தள்ளும் தளத்தில் இயங்குகின்றன. கால மாற்றத்தை ஏற்கும் புரட்சியை செய்து விடுகின்றன. 'நோக்காடு' கதையில் பிள்ளை பெறுவதற்காக 'சீசர்' பண்ணுவதை "புது நாணயமான ஒரு சீசரு" என்று மனதிற்குள் நொந்து கொள்ளும் காசிம் காக்கா வருகின்றார். உம்மாவுக்கு பதிலாக குடும்பப் பாரம் சுமக்கும் மகளை 'மரக்கறிக் கெழவி' கூறுகின்றது. 'பொண்டுகச் சட்டி'யில் வரும் துசாராவான மம்மவக்கனுக்காக ஊர் காத்துக் கிடக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிலேட்டுப் பலக' யில் பாறூக் மாஸ்டர் சிலேட்டுப் பலகையையும் முஸ்தபாவையும் ஒருநாளும் மறக்க முடியாதவராகிறார்.

நினைவிலேற்றிக் கூறப்படும் கதைகளில் அந்நினைவுகள் ஓரிடத்தில் நில்லாது அலைந்து கொண்டிருக்கின்றன. பெரு நினைவுகள் கிளைகளாகப் பிரிந்து ஆழவேர் விடுகின்றன. சில நினைவுகள் தொன்மத்தைத் தேடும் பயணத்திலும் சில ஆன்மீகப் பயணத்திலும் இன்னுஞ்சில இருப்பை நிலைநிறுத்தும் பயணத்திலும் அலைவுறுகின்றன. இவற்றில் இஸ்லாமியப் பண்பாட்டினை விளக்கும் தொன்ம நினைவுகள் பெரும்பாலான கதைகளை ஆக்கிரமித்துள்ளன. திருமணச் சடங்குகள், பிள்ளை பெறல், இத்தா இருத்தல், வியாபாரம் செய்தல், குடும்ப வாழ்க்கை என்று இவை காட்சி ரூபம் கொள்கின்றன.

ஓரிரண்டு கதைகளில் நாம் வழக்கமாக எதிர்பார்க்கும் கதை இல்லை. அதனால் அவை விமர்சனச் சித்திரம் போன்ற தோற்ற மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. கதைகளில் சோதனை முயற்சிகளை மேற்கொள்ளும் பக்குவமும் திறன் நோக்கும் கூர்திறனும் கொண்ட கதாசிரியராக பீர் முகம்மது திகழ்வதால் இந்நிலை பொருட்படுத்தத் தக்கதன்று என நினைக்கிறேன்.

இந்த மண் பொதிந்து வைத்திருக்கும் ரகசியங்கள் அனந்தம். அதுபோல மண்ணின் மனிதர்களிடமும் ஏராளமான ரகசியங்கள் உண்டு. அள்ள அள்ளக் குறையாத ரகசியங்களின் வாசனை கலைந்து விடாமல் அவற்றைக் கதைகளாக மீட்டெடுப்பதில் ஏ.பீர் முகம்மது வெற்றி பெற்றிருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும். அவருக்கு எம் வாழ்த்துக்கள்.

**எம்.அப்துல் றஸாக்**

விரிவுரையாளர்

தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

ஒலுவில்.

*09.11.2023*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வியல் சிறுகதைகளுக்குத் திரும்புதல்

சிறுகதையில் சோதனை முயற்சி என்பது என்னைப் பொறுத்து சுகமானது. ரஸ்யாவின் சொலக்கோவ் எழுதிய மீன்கதையை இறைவனின் சித்தம் என்ற தலைப்பில் மறுவாசிப்புச் செய்து எழுதினேன். செங்கதிர் சஞ்சிகையில் 2012 பெப்ரவரியில் அது பிரசுரம் கண்டது.

மற்றொரு முயற்சியாக தமிழில் மிகவும் அரிதாகவே பயிலப்படு கின்ற ரிங்லோடன் உத்தியில் கதை சொல்லும் எத்தனம் என்னுள் விதையாகியது.

ஒரு பாத்திரத்தின் உரையாடல் மட்டுமே இவ்வுத்தியில் இடம் பெறும். அதனூடாகவே கதை நகரும்.

ஜெனிவாவுக்குப் போன ஜெமீந்தாரு என்ற எனது கதை இந்த உத்தியில் எழுந்தது.

மின்னூடகம் கொண்டிருந்த தாராள சுதந்திரம், தலைப்பு, உள்ளடக்கம், யாழ்ப்பாண பேச்சுவழக்கு போன்ற ஏதுக்களால் றறற.யசயபெயஅநெறள.உழஅ ஊடாக 08.09.2022 இல் ஜெமீந்தார் கதை வாசகனைச் சென்றடைந்தது.

தைலாப்பெட்டி என்ற இப்பேழையில் உள்ள சிறுகதைகள் வேறொரு சோதனை முயற்சி.

மண்ணின் மொழியில் மக்களின் கதைகளை வெளிக் கொணரும் எத்தனம்.

தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம் மக்களின் குறிப்பாக கரவாகு மண்ணின் பேச்சு வழக்கு மற்றும் அவர்களின் பண்பாட்டுப் பெரும் வாழ்வியல் என்பவற்றை உள்வாங்கி எழுதப்பட்ட பதின்மூன்று சிறுகதைகள் இத்தொகுதியில் அடக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02)

மூத்த எழுத்தாளர்களைக் கவனத்திற் கொள்ளாத இன்றைய தலைமுறையினருக்கு மொழி பெயர்ப்புக் கதைகளும் பாலியல் எழுத்துகளும் இணையவழி வாய்ப்புகளும் வழிகாட்டிகளாக அமைகின்றன. அவ்வாறானதொரு இலக்கிய வெளியில் நாம் நிற்கிறோம்.

கடந்த நூற்றாண்டின் ஆகப்பிந்திய தசாப்தத்தில் உரத்துப் பேசப்பட்ட பின்நவீனத்துவம் போன்ற இறக்குமதிக் கோட்பாடுகளை தீட்டு மனப்பான்மையோடு பார்க்கும் நிலை இன்று காணப்படுகின்றது.

ஐரோப்பிய லத்தீன் அமெரிக்க இலக்கியங்களைப் பின்தள்ளி மூன்றாம் உலக நாடுகளின் இலக்கியம் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறது.

புலம்பெயர் தமிழ் இலக்கியம் சமன் ஈழத்து இலக்கியம் என்ற முன்வைப்பு மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனை தலைகிளப்பிப் பார்க்கின்றது.

இவற்றையெல்லாம் ஒருசேரத் தொகுத்து நோக்கினால் செவ்வியல் சிறுகதைகளுக்குத் திரும்புதல் என்ற பிரேரணை விரைவில் அங்கீகாரம் பெறும் என விசுவாசிக்கலாம்.

(03)

எனது சிறுகதைக் குவியலிலிருந்து தென்கிழக்கு முஸ்லிம் களின் பேச்சு வழக்கினை புனைவு மொழியாகக் கொண்ட கதைகள் வேறாகி தொகுதியாகி உங்கள் வசம் வந்துள்ளது.

கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகைத்து.

தைலாப்பொட்டி, செவப்புக்கல் தோடு,நோக்காடு,சிலேட்டுப் பலக,கூப்பன் பொத்தகம், பட்டக் கலியாணம், பாய் யாவாரம், புள்ளக் கொழுக்கட்ட ஆகிய எட்டுக் கதைகளும் எம்மைக் கடந்துபோன காலத்தின் எச்சங்கள்.அவை பண்பாட்டுக் கோலம் காட்டும் தன்மையன.

ஸ்ரீ லங்கா எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியின் போது (2022) மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவியது. குழந்தைகளுக்கான பெனடோல் சிரப்பும் அதில் அகப்பட்டுக் கொண்டது. இப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக மொலப்பால் என்ற கதை எழுதப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர் மரணித்தால் முஸ்லிம் பெண்ணொருவரின் இத்தா காலம் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் என்பது முஸ்லிம்களுக்கு அப்பாலும் பலரும் தெரிந்த விடயம். கணவரின் இறப்பின்போது பெண்ணொருவர் கர்ப்பமாக இருந்தால் அவரின் இத்தா பிள்ளை பிரசவிக்கும் காலம்வரை நீளும் அல்லது சுருங்கும் என்பது முஸ்லிம் பெண்களைத் தவிர பலரும் அறியாதது. அவ்வாறான இத்தா காலம் பற்றி ஒலிபரப்புச் செய்வதே இரண்டு இத்தா என்ற கதையாகும்.

புள்ளப்பூச்சி என்ற இனம் அழிந்து கொண்டு வருகிறது. அதுபற்றிய விழிப்புணர்வுக்காக புள்ளப் பூச்சி கதை எழுதப்பட்டது.

பொண்டுகச்சட்டி என்ற சொல் எம்மைக் கடந்து தமிழ்நாட்டிலும் பயன்பாட்டில் உள்ளது.

திருநங்கை விவகாரம் ஸ்ரீ லங்காவில் பரவலாக இல்லாத போதிலும் பொண்டுகச் சட்டிகள் உள்ளனர். இக்கதை அதீத கற்பனை அல்ல என்பதை யூடியூப் எண்பிக்கும்.

மரக்கறிக் கெழவி என்ற கதை மரக்கறிகளினதும் அத்தொழில் செய்யும் ஒரு கிழவியினதும் முழுமைத்துவத்தைப் பேசும் நம் சமகால வாழ்வின் கதை.

சில கதைகளின் உள்ளீடு எமக்கு மட்டும் உரியதல்ல. யாழ்ப்பாணத்திலும் தைலாப் பெட்டி பாவனையில் இருந்துள்ளது. கூப்பன் புத்தகம் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டது. பொண்டுகச் சட்டி கதை தமிழ் நாட்டுக்கும் பொருந்தும். ஆனாலும் அனைத்துக் கதைகளினதும் கருவறை எமது மண்தான்.

கதைகள் வேறுபட்டாலும் அவை ஒவ்வொன்றினதும் உயிர் இழையாக மண்ணின் மொழி அமைந்துள்ளமையை வாசிக்கும்போது தெரிந்து கொள்ளலாம்.

'புனைவுத் தன்மை'யிலும் 'சொல்லும் வாண்மை' சற்றுத் தூக்கலாக இருப்பது செவ்வியல் சிறுகதைகளுக்குத் திரும்புவதற்கு உதவும் என்பது என் சித்தம்.

நவீன தொழில்நுட்பப் பிரசன்னமும் உலக மயமாக்கலும் காரணமாக விடுபட முடியாத ஏக்கங்கள் நிரம்பியதாகவே இன்றைய நமது வாழ்க்கை சமைந்து விடுகின்றது. எனவே நனவிடைதோய்ந்து மகிழவும் இக்கதைகள் உதவலாம்.

தொகுதி தொடர்பில் தனது குறிப்புகளை அணிந்துரையாகத் தந்த எம். அப்துல் றஸாக் (விரிவுரையாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் நூலினைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய கஸல் பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகள்.

செவ்வியல் சிறுகதைகளுக்குத் திரும்பும் வழியில் சந்திப்போம். இந்நூலினைச் சிறப்பாக வெளியிடும் கஸல் பதிப்பகத்தினருக்கும், ஸப்றிக்கும் எமது நன்றிகள்.


**ஏ.பீர் முகம்மது**

*510, ஆஸ்பத்திரி வீதி,*

*சாய்ந்தமருது – 7,*

*ஸ்ரீ லங்கா.*

*27-08-2023*

*076 749 8887.*

*077 175 1464*

*apeermohamed@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைகளின் அணிவகுப்பு

1. தைலாப்பெட்டி ........ 1

2. செவப்புக்கல் தோடு ........ 7

3. மொலப்பால் ........ 10

4. நோக்காடு ........ 14

5. ரெண்டு இத்தா ........ 19

6. சிலேட்டுப் பலக ........ 25

7. கூப்பன் பொத்தகம் ........ 29

8. மரக்கறிக் கெழவி ........ 34

9. பொண்டுகச் சட்டி ........ 38

10. புள்ளப் பூச்சி ........ 43

11. புள்ளக் கொழுக்கட்ட ........ 46

12. பாய் யாவாரம் ........ 52

13. பட்டக் கலியாணம் ........ 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைலாப்பொட்டி

வயசுபோன ஒரு எழுத்தாளன் தன்ர பழய பைல் கட்டப் பெரட்டிக் கிட்டிரிக்கான். அதுக்குள்ளயிருந்து அவனுக்கு ஒரு சிறுகத அகப்புட்டிச்சி. அது அவன் எழுதின கத. பைலுக்க மாறி வெச்சதால வெளியால அது ஒரு எடத்தயும் போகல்ல. எத்தினயோ தெரம் தேடியும் அவன்ட கைல அது கெடைக்கல்ல. முப்பத்தஞ்சி நாப்பது வரிசமா அசயாம இருந்துபோட்டு இப்ப அவன்ட கைல அது கெடச்சிரிக்கி.

தைலாப்பொட்டி ண்ட தலைப்புல மீரான்ட உதுமான் வாற அந்தக் கதயத்தான் நீங்க இப்ப வாசிக்கப் போறீங்க.

தாய்க்குச் சுகமில்ல ண்ட வெசகளம் கெடச்ச ஒடன சுறுக்கா வெளிக்கிட்டு கல்முன டவுனுக்கு வந்து ரெண்டு கட்டக்கி அங்கால இரிக்கிற சாஞ்சமருதுல இருபத்தாறாம் கட்டயடிய பஸ்ஸால எறங்கி தாயூட்டுக்கு வந்து சேந்தவன்தான் மீரான்ட உதுமான். நரச்ச தாடி. தலயில நடுவுல வழுக்க மொட்ட. 'வந்திட்டியா மன' ண்டு ஈனக் கொரல்ல கேட்டுப்போட்டு மனுசி கண்ண மூடிட்டா.

பாவம் உதுமான். தகப்பன்ட மொகத்தயும் கடசியா பாக்கக் கெடைக்கல்ல. அந்தக் கவலயோட வெளியூர்ல அவன்ட காலம் பொய்த்து. கடசிக் கட்டத்தில வந்து தாய பாத்ததால சொட்டு நிம்மதி.

உதுமான்ட ஒடம்புல ரெத்தம் கொதிக்கிற காலத்தில ஊர்ல இருந்த ஒரு புள்ளயோட அவன் தொடுப்பு வச்சிருந்தவன். தாலி கட்டாம தாயும் கண்டுமா அவள ஊட்ட கூட்டிக்கிட்டு வந்தவனாம். அவன்ட தகப்பன்காரன் கரவாப்பத்துப் போடியார் வங்கிசம். கணகாட்டான ஆள். ஒருக்கா அறுபதாமாண்டோ என்னயோ பெரிய எலெக்சன் அந்த வரிசத்தில ரெண்டு தெரம் நடந்தயாம். போன எலெக்சனுக்கு போளின்ல நிண்டு வோட்டுப் போட்டுட்டன்.

ரெண்டாந் தடவயா நான் வோட்டுப் போடமாட்டனெண்டு அந்த மனுசன் ஒத்தக் கால்ல நிண்டயாமெண்டு ஒரு கதயுமிரிக்கி. அவரு உதுமான ஊட்ட உட்டுத் தெரத்தயும் வெளியூர்ல போய் ஊர மறந்து குடும்பம் குட்டியா வாழ்ந்தவனெண்டு கௌவன் கெட்டயள் அவனப்பத்திக் கதைப்பாக.

அவன்ட தாய் கண்ண மூடி ண்டயோட மூணு நாள். சொந்தக்கார ஆக்களும் மெள்ள மெள்ள கலஞ்சி பொய்த்தாக. ன்னம் ரெண்டொரு நாள் போனா அவனும் தங்கச்சிர குடும்பமும்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சிக்கு ஒதவுறதுக்காக உதுமான் வாசலக் கூட்டிப் பெருக்கி குப்ப கூளங்களச் சேத்து சீலம் பாய்க்குள்ள அள்ளி ஒரு மூலயில வெச்சான். வாழமடல், தென்னோலக் கிடுகு, சாம்பிராணிக் குச்சி கொழுத்த மண் நெறப்பின தகரப் பேணி. இதுகளப்போல கொஞ்ச சாமான் கெடந்திச்சு. அதயும் பொறக்கி வேலி ஓரத்தில போட்டான். கழுவி வெயில்ல போட்ட கட்டிலத் தூக்கிட்டுப் போய் ஊட்டுக்க வெச்சான்.

தனியா பொம்புளயள் மட்டும் பரிமாறுறதுக்கெண்டு ஊட்டுல ஒரு அற இரிக்கிம். பொம்புளச் சாப்பூடு ண்டுதான் அந்த அறயச் செல்லுவாக. மகள்ர கவனிப்புல தான் அவன்ட தாய்க்காரி இருந்தவ. ப்ப அதுக்குள்ள ஒருத்தரும் ல்ல. அந்த அறைக்குள்ள தலவாணிய வெச்சிச் சுருட்டின ஒரு பாய்க்கட்டு செவர ஒட்டினாப்போல கெடந்திச்சு. அதுக்கு மேல ஒரு பழய பனஓல விசிறி. டோச்சி லைற்று ஒண்டும் இருந்திச்சி. ஒம்பதாம் நம்பருக்குள்ள கறுப்புப் பூன பாய்ர மூணு வெத்தி போட்ட லைற்று அது. புணிப்போட்ட சவ்வுப்பாய் ஒண்டு அசவுல தொங்கிச்சி. உறில தொங்கின மாதிரி ரெண்டு பான. ஒண்டுல சில்லறக் காசி கொஞ்சமும் மத்ததில தாள் காசி கொஞ்சமும் இருந்திச்சி. மூலயில ஒரு தைலாப்பொட்டி

பழய காலத்தில சாமான் சக்கட்டுகள பத்திரப்படுத்தி வெச்சிரிக்கிறதுக்காக எல்லா ஊட்டுலயும் தைலாப்பொட்டியொண்டு இரிக்கிறெண்டு ஆக்கள் கதைப்பாக. அவன் மூலயில பாத்தது தாய் பாவிச்ச தைலாப்பொட்டியத்தான்.

அந்தத் தைலாப்பொட்டி முதிர மரத்தில செஞ்சது. நீட்டுப்பாட்டுக்கு நாலு சாண். ரெண்டு சாண்ல அகலம். அகலப்பாட்டுக்கு ஏத்தாப்போல ஒசரம். தொறந்தா மூடி நிமிந்து அசயாம நிக்கிம். அதுக்காக பொட்டியும் மூடியும் சேந்திரிக்கிற ரெண்டு பக்கத்துக் கக்கத்திலயும் உருக்குத் தகட்டால முட்டுச் செஞ்சு பொணச்சிரிப்பாக. சின்னொரு கள்ளறையும் இரிக்கும்.

வாப்பா மௌத்தாகி ம்மா 'இத்தா'க் கடமையில பொம்பிளச் சாப்பூட்டுக்க இருந்த நேரம் அந்தப் பொட்டிக்கு மேல இருந்துக்கிட்டு ம்மாக்கிட்ட மனவருத்தப்பட்டுக் கதச்சது அவனுக்கு நெனப்பு வந்திச்சி.

பொட்டிய தொறந்து பாத்த அவனுக்கு அப்பதான் வெளங்கிச்சி தாய்ர ஒலகமே அந்தத் தைலாப்பொட்டிதானெண்டு.

மொதல்ல அவன்ட கண்ணில பட்டது உடுபொடவதான். சோமன் பொடவயொண்ட மடிச்சி வெச்சிருந்தா. லாம்பிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்ர மணமும் காக்கா முட்டர மணமும் கமகம ண்டு வீசிச்சி. கலியாணம், காச்சி, புதினமெண்டு வந்தா சோமன், பச்சவடம், முறி ண்ட பொடவகள அவ அந்தக் காலத்தில உடுத்துக்கிட்டுப் போறதாமெண்டும் காசிக்கார ஆக்கள் மட்டும்தான் ப்பிடி நெல்ல உடுப்புகள வெச்சிரிப்பாகளாமெண்டும் அவன் அந்தக் காலத்தில கேள்விப் பட்டுமிரிக்கான். பச்சவடம், முறியெல்லாம் ப்ப எங்கெண்டு தெரியா.

சோமன் பொடவயப் பாத்திட்டு தங்கச்சியக் கூப்பிட்டுக் காட்டினான். சாயம் போகாம ப்பயும் புதுசி மாதிரி இருந்திச்சி.

காஞ்சிபொரம் பட்டு, பெனாசிர்ப் பட்டு, காசிமீரு ண்டும் சும்மா நாள்ல திரும்பிப்பாரு, தேன்நெலவு, ண்டும் செல பொடவகள சும்மா நாள்ள அவ உடுத்தவ ண்டு தங்கச்சி வெளக்கினா.

அந்தப் பொடவகள் ஒண்டயும் பொட்டிக்க காணல்ல. ஆனா அவன்ட மனசுக்குள்ள அந்தப் பொடவகள் வந்து தாப்புக்காட்டிப் போட்டு போனது மொகத்தில வெளங்கிச்சி.

செவப்பு நெறத்தில பாவாட ஒண்டு பொட்டிக்க இருந்திச்சி. கால்மாட்டுல அதுக்கு வெள்ளயால ரேந்த புடிச்சிருந்திச்சி. அவட பாவாட எல்லாத்துக்கும் ரேந்த புடிச்சிரிக்குமிண்டு தங்கச்சிக்காரி அவனுக்கு தெரியப்படுத்தினா. பொலபொலெண்டு விடியக் கொள்ள ம்மா குளிச்சிட்டு மாதுளம் செடில செவப்புப் பாவாட ஒண்ட காயப் போர்ரத அவன் கனக்கத் தெரம் பாத்திரிக்கான். சீத்தத் துணில தச்ச பாவாட அது. ஞ்ச பொட்டிக்க இரிக்கிறது சாமுசி துணில தச்சது.

பளயகாட்டு ரெட்டமூட்டுச் சாரனொண்டும் சரிகப் பட்டு மடிப்புச் சாலுவ ஒண்டும் பொட்டிக்க இருந்திச்சி. வாப்பா பாவிச்ச உடுப்புப் பொட்டகத்த ப்ப தங்கச்சி பாவிக்கிறதால வாப்பாட சாரணயும் சாலுவயயும் பத்திரமா எடுத்து தைலாப் பொட்டிக்க ம்மா வெச்சிரிக்கா ண்டது வெளங்கிச்சி. தொப்பி போடாத முசிலிம் ஆக்கள் தலயில கட்ர பச்ச நெறச் சவுக்கமொண்டு சங்குப் படத்தோட பொட்டிர அடில சோக்கா மடிச்சாப்போல இருந்திச்சி.

கைப்பிரக் கட்டி வாற மஞ்சள் நெற சின்னப் பொட்டியொண்டும் தைலாப் பொட்டிக்க இருந்திச்சி. அந்தச் சின்னப் பொட்டிக்கயும் நாலஞ்சி சாமான் வெச்சிருந்தா.

வெள்ளியால செஞ்ச கால்ல போர்ர கரண ஒரு சோடி சீலயால சுத்தி அதுக்குள்ள இருந்திச்சி. எப்ப வெளிய போனாலும் அவட கால்ல கரண இரிக்கும். கண் குளித்தியா இரிக்கணுமெண்டதுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ கண்ணில சுறுமா அரச்சிப் போடுவா. அந்த சுறுமாக் கல் ஏழெட்டு தாளுக்க வெச்சிச் சுத்தினாப்போல இருந்திச்சி. பூட்டுசிக் கோருவ ஒண்டயும் கண்டான்.

சந்தணக்கட்ட ஒரு துண்டு பொட்டிர கள்ளறைக்குள்ள கெடந்திச்சி. காச்சல், தலயிடி, அம்மாள், கூவாக்கட்டு. ப்பிடி என்ன வருத்தம் வந்தாலும் கெணத்துக் கொட்டுல பன்னீர ஊத்தி சந்தணக் கட்டய அரச்சி வாற சந்தணக் கொழம்ப நெத்திலயும் நெஞ்சிலயும் பூசினா வருத்தம் இருந்த எடம் தெரியாம பறந்து போறத அவன் பல தடவ அநுபவத்தில கண்டிரிக்கான். ஆசுவத்திரிக்கிப் போய் மருந்தெடுக்கயும் காசிக்கி மருந்தெடுக்கயும் சனம் பழகினதால ப்ப ஒருத்தரும் சந்தணக் கட்டய வருத்தத்துக்கு பாவிக்கிறெல்ல. தேஞ்சி போய் மணம் மாறாம அந்த சந்தணக் கட்டய தைலாப் பொட்டிக்க கண்டது அவனுக்கு பெரிய புதுனமா இருந்திச்சு.

ரெண்டு மூணு பட்டுல நூல் சுத்தின மாதிரி தையல் ஊசி செருகின நூல்கட்ட ஒண்டும் பொட்டிக்க கெடந்திச்சி. குரும்பெட்டில தடிப்பான ஈக்கிலக் குத்தி நாலஞ்சி நூல் கட்டய ஒண்டுக்க மேல ஒண்டா அடுக்கி வெளயாடின அவனுக்கு பொட்டிக்க அந்த நூல் கட்டயக் கண்டு ல்லெண்ட சந்தோசம் வந்த மாதிரித் தெரிஞ்சிச்சி.

அறுணாக் கொடிக் கவுறு ஒரு கட்டு வெரல் தடிப்பத்தில வேறயா கெடந்திச்சு.

சின்னக் கீசா ஒண்டுக்க அரக்கூடு ஒண்டு இருந்திச்சி. பொறங்கை அளவுல பித்தளத் தகடொண்ட எடுத்து அதுல அறுவத்தி நாலு ல்லாட்டி நாப்பத்தொம்பது சதுரப் பொட்டியக் கீறி அதுக்குள்ள குர்ஆன் எழுத்து சிலத எழுதி பொறகு அத சுறுட்டி எடுத்து அறுணாக் கொடியால சுத்திக்கட்டி அரக்கூடு செஞ்சிரிப்பாக. செல ஆக்கள் அத கைல மொழங்கைக்கு மேல ல்லாட்டி இடுப்புல கட்டி இரிப்பாக. கழுத்துல தொங்கப் போட்டும் இரிப்பாக. பே பெசாசி ல்லாட்டி செய்த்தாண்ட பெரச்சின ஒண்டும் வெராமத்தான் அரக்கூடு கட்ர. சின்ன வயசில அவன்ட இடுப்புல ஒரு அரக்கூடு இருந்த. அத நெனச்சிப் பாத்தான்.

மக்காவுக்குப் போய் வெரக்கொள்ள தாய் கொண்டந்த அத்திர்க் கீசாக்குள்ள அடில கொஞ்சம் அத்திர் இருந்திச்சி. தொறந்து மோந்து பாத்தான். சொட்டு மணமும் போகல்ல. என்ன கொதரத்து ண்டு நெனச்சிக்கிட்டான்.

உதுமான்ட மனசில ஒட்டினெண்டா பொட்டிக்குள்ள இருந்த பொத்தகங்கள்தான். ‘சேவல் பாட்டு’, ‘பெரிய எழுத்து நல்லதங்காள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை', 'தலைப்பாத்திகா', 'வீட்டில் பன்னீர் செய்வது எப்படி' ண்டு பேர் எழுதின செல பொத்தகங்களயும் வேற செல பொத்தகங்களயும் கண்டான்.

சேவல் பாட்டுங்கிற பொத்தகத்த விரிச்சிப் பாத்தான்.

"தங்கத்தினால் சலங்கை கட்டி தரையில் விட்ட சேவல் தரையில் விட்ட சேவல் எந்தன் சேவல் போன இடம் எனக்குத் தெரியாதே எனக்குத் தெரியாதே" ண்ட பாட்டு மொதலாவதா இருந்திச்சி. அவனப் படுக்க வெய்க்கிறத்துக்காக எத்தின நாள்தான் ந்தப் பாட்ட அவ கொரலெடுத்துப் பாடினயாம் ண்டு ம்மா சென்னத நெனச்சி நெனச்சி மனசுக்குள்ள கொளறினான்.

பெரிய எழுத்து நல்லதங்காள் கதப் பொத்தகத்திர மட்டையில பொண்டுகள் ரெண்டு பேரு ஒரலுக்குள்ள ஒலக்கயால குத்துர படம் போட்டிருந்திச்சு. படத்தப் பாத்து அவன் மனசுக்குள்ள என்னயோ கதைக்கிற மாதிரி தெருஞ்சிச்சி.

தலப்பாத்தியாவில புதினம் ஒண்டிரிக்கி. பொம்புளயளுக்குத் தேவயான புத்திமதிய குர்ஆன் எழுத்தால தமிழ்ப் பாசயில எழுதினதுதான் தலப்பாத்தியா. அத வெள்ளிக்கெளம மசண்டயாகின ஒடன வெளக்குக் கொழுத்தி வெச்சி ஓதுவா. 'நீயும் சேந்து தலப்பாத்தியா ஓதுறது ண்டைக்கும் எண்ட கண்ணுக்கான் இரிக்கி' ண்டு தங்கச்சிக்கிட்டச் சென்னான்.

மத்தப் பொத்தகங்கள பொறகு பாப்பமெண்டு வேறயா எடுத்து வெச்சான்.

அதுல ஒரு பொத்தகத்துக்குள்ள படம் ஒண்டிருந்திச்சி. வாப்பாவும் ம்மாவும் இரிக்கிற படம் அது. முறுக்கு மீசயோட வாப்பா கதிரயில இரிக்காரு. தலயில துரிக்கித் தொப்பி. தோள்ள கர மடிச்ச சாலுவ. மொக்காடு போட்டுக்கிட்டு ம்மா பக்கத்தில நிக்கா. அவன் சின்னப்புள்ளயா இரிக்கக் கொள்ள ஊட்டுச் செவரில அந்தப் படம் தொங்கினது அவனுக்குத் தெரியும். பொறகு அத அவன் காணல்ல. ப்ப பாக்கிறது அந்தப் படந்தான். அத ஊட்ட கொண்டுபோய் வெய்க்கணும் ண்டு மனசிக்குள்ள நெனச்சிக்கிட்டான்.

வேளவு பொறுமதியான சாமானெல்லாம் ந்தத் தைலாப் பொட்டிக்க இருந்திரிக்கி ண்டத நெனச்சிப் பாத்தான். அந்தச் சாமானுக்குள்ள ம்மாட மொகம்தான் தெரிஞ்சிச்சி.

சாமான் எல்லாத்தயும் பழயபடி வெச்சி தைலாப் பொட்டிய மூடினான். அவனுக்கு தாய் தகப்பன நெனச்சி சலிப்பு வந்திச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கச் சீறி எறிஞ்சி போட்டு நெத்தில இருந்த வேர்வய கைவெரலால வழிச்சித் தொடச்சான். முதுகக் கொஞ்சம் நிமித்தினான். சாப்புக்க வந்து கதிரயில சாஞ்சான்.

வெளிப்பக்கத்துக் கதவுட அடிப்பக்கம் வெயிலும் மழயும் பட்டு எறந்து கொட்டிங்கப் பாக்கிறத கண்டுக்கிட்டான்.

தங்கச்சிய கூப்பிட்டு கதவுட அடி பழுதாகப் பாக்குது. ஒரு துண்டு முதிரப் பலகய வாங்கி அத எணக்கிறெல்லியா? ண்டு கேட்டான்.

தைலாப் பொட்டில இரிக்கிற முதிரப் பலகத் துண்டுகளக் களட்டி இனித்தான் கதவ எணக்கனும் ண்ட தங்கச்சிர கதயக் கேட்டு உதுமான்ட கண்ணில தண்ணி வெரத் தொடங்கிச்சி.

ப்பிடித்தான் தைலாப் பொட்டி ண்டஅந்தக் கத முடிஞ்சிச்சி

தைலாப் பொட்டியப் பத்தி ப்ப ஒருத்தரும் கதைக்கிறல்ல. எழுத்தாளன்ட நெலமயும் ப்பிடித்தான் ண்டு அத நெனச்சி அந்த எழுத்தாளன் ஒரு பெருமூச்சி விட்டான்.

சிறுகதை மஞ்சரி நவம்பர் 2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவப்புக்கல் தோடு

செய்னம்பு பெத்தா.

எண்பது வயசு தாண்டியும் ன்னமும் ஒசாராத்தான் இரிக்கா. கைல பொல்லில்ல. ஆர்ரயும் ஒதவி ல்லாம தனிய நடப்பா.

மோதின் பாங்கு பறியிறதுக்கு முந்தி கண்ண முழிச்சி படுத்த பாயில இருந்துக்கிட்டு வெத்தில இடிச்சிச் சப்புவா. மொதல் வேலயா அதத்தான் செய்வா.

வெத்தில சப்புறதப் பாக்க ரெண்டு கண்ணும் காணா? களுதாவள நீர்வெத்திலட காம்ப அடியால கிள்ளி எறிஞ்சி போட்டு நுனிய நோண்டுவா. பொறகு தொடயில ரெண்டு பக்கமும் வெத்திலய தொறச்சி எடுப்பா. கல்லாத்துக் கடயன் கொண்டாற செவப்புச் சுண்ணா ஒரு கீசாக்குள்ள இரிக்கும். அத வெரலால தொட்டு நீட்டுப்பாட்டுக்கு வெத்திலயில தடவுவா. நாறப்பாக்கு ஒரு பொளவும் கைப்பு ஒள்ளுப்பமும் சேத்து கையொரலுக்குள்ள பத்திரமா போட்டு இடிச்சா அதுல வாற ஓசயக் கேட்டு மத்தாக்கள் கண்ண முழிச்சிருவாக.

நெல்லா இடிச்சித் தொவச்சி துண்டு துணியொண்டும் ஒரலுக்குள்ள மிஞ்சாம கையப் போட்டு வெத்திலத் தொவயல தொளாவி எடுத்து வாய்க்குள்ள பத்திரமா வெச்சி போயில ஒரு துண்டயும் சேத்து சத்தம் வெராம சப்புவா. தலமாட்டுல இரிக்கிற செம்புப் படிக்கத்துக்க ராவய வெத்திலத் துப்பல் இரிக்கும். வெத்திலத் தூவானம் வெளிய தெறிக்காம அதுக்குள்ள பத்திரமா துப்புவா.

செம்புப் படிக்கத்தப்போல வெத்தில வட்டா கொடம் தேங்காண்ண வெளக்கு குத்துவெளக்கு தூக்குவெளக்கு பன்னீர்ச்செம்பு ஆலாத்திவட்டா ப்பிடி செம்புல செஞ்ச சாமான் கொஞ்சம் அவக்கிட்ட இருந்த. அதுல வட்டாவயும் படிக்கத்தயும் வெச்சிக்கிட்டு மத்தத அவட ஒரேயொரு மகள் வாழ்க்கப்பட்ட ஒடன தாயாதிச் சொத்தெண்டு செல்லி அவக்குக் குடுத்திட்டா.

ப்ப அவக்கிட்ட ஒண்டும் கெடயா. வெத்தில வட்டா படிக்கம் ஒரு கட்டுப்பொட்டி இதுகளோட அவட காலம் கழியிது.

நக நட்டுகளும் ல்ல. ஆனா கட்டுப்பொட்டிக்குள்ள செவப்புக் கல்லு வெச்ச தோடு ஒரு சோடி இரிக்கி. அதுர கததான் பெரிய கத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்னம்பு பெத்தா போடிர வெள்ளச்சிர தத்தி. போடிர செய்னம்பு ண்டா எல்லாருக்கும் தெரியும். பன்னெண்டு வயசில கலியாணம் முடிச்சவ. மாப்புளயும் கொஞ்சம் வசதிக்கார ஆளு. அவகளுக்கு கண்ணே கண்ணுண்டு ஒரேயொரு பொம்புளப் புள்ள. அந்தப் புள்ள அம்பத்தேழாம் வருசம் பொறந்தயாம். அவ பொறந்த வருசந்தான் எல்லா எடத்திலயும் பெரிய வெள்ளம் வந்தெண்டு பெத்தா வெளக்கமெல்லாம் தெருவா.

பத்துப்பன்னென்டு நாளா பேயாப் பெருமழ பேஞ்சயாம். இடுப்புக்கு மேல வெள்ளம் வந்தயாம். ஊட்டுக்குள்ள தண்ணி ஏறினதால ரெண்டு மாத்தய கொழந்தப் புள்ளய தூக்கிட்டு தார் ரோட்டு வட்டைக்க அவகிட சொந்தக்காரராள்ர மெத்த ஊட்ல போய் இருந்தயாம். அரசால கூப்பன் பொத்தகத்துக்கு பிச்சாட்டரிசி கோதம்ப மாவு சீனி பருப்பு மீன்டின்னெல்லாம் சும்மா குடுத்தயாமெண்டு செய்னம்பு பெத்தா அடிக்கடி கதைக்கிற.

மொதல் புள்ள பொம்புளயா பொறந்த ஒடன வாப்பாக்காரன் புள்ளக்கி தங்கத்தில செஞ்சி இடுப்புல கட்ர அலமாடியும் கழுத்துக்கு ஒரு செயினும் அதோட மனுசிக்கு செவப்புக்கல்லு வெச்ச தோடு ஒரு சோடியும் வாங்கிட்டு வந்தாரு. என்ர ஞாபகமா ந்தத் தோட்டுச் சோடிய வெச்சிக்கணுமெண்டு மனுசிர கைல குடுத்தாராம். என்ன கயிட்டம் வந்தாலும் தோட வித்திரப்போடா ஒண்ட உசிரு போறவரைக்கும் ஒனக்கிட்டத்தான் இரிக்கணும் ண்டாராம். மனுசன் பொஞ்சாதில நெல்ல கெட்டியாத்தான் இருந்திருக்காரு.

மகள்ர கலியாணம் நடந்து ரெண்டு வரிசத்தில ஒரு பேத்திப் புள்ளயும் கண்டு போட்டு மனுசன் ஒலகத்த உட்டுப் பொய்த்தாரு. பாவம் செய்னம்பு பெத்தா. புரிசனத் திண்டவ. அதால அவக்கிட்ட இருந்த நகநட்டெல்லாத்தயும் மகளுக்குக் குடுத்துப்போட்டு வெள்ளப் பொடவயும் தோட்டுச் சோடியுமா ஒரு அறைக்குள்ள போய் கட்டுப்பொட்டியோட அடங்கிட்டா.

நீ போட்டிருந்த செவப்புத் தோடு எங்கெண்டு மகள் ஒருநாள் கேட்டா. அப்பதான்தான் செவப்புக்கல் தோடுர கதய மகளுக்கிட்ட காதுக்க ஒதினா.

செய்னம்பு பெத்தா அந்த மகளப்பத்தி அடிக்கடி நெனச்சிக் கதைப்பா. ஒரேயொரு மகள்.அதுவும் பொம்புளப் புள்ள. பொத்திப் பொத்தி வளத்திருக்காபோல. அந்தப் புள்ள வசதியான எடத்தில கலியாணம் முடிச்சி குடும்பமும் குட்டியுமா சந்தோசமாத்தான் இருந்திச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மகளுக்கு மூணு புள்ளகள். மொதல்லயும் கடசிலயும் பொம்புள. நடுவுல ஒரு பொடியன். மொதல்ல பொறந்த பொம்புளப் புள்ள படிச்சி சோதின பாசு பண்ணி அன்னா ன்னா தொழில் எடுக்க இருக்கக் கொள்ள வெளிநாட்டுல ஒழச்சிக்கிட்டு வந்த ஒருத்தன் விரும்பினதால அவனுக்குக் கட்டிக் குடுத்தெயாமெண்ட வெசயம் ஊருக்க தெரியும். மத்த ரெண்டு புள்ளைகளும் சொந்தத்துக்க நல்ல எடத்துல கலியாணம் முடிச்சாக.

ஒருநாள் டக்கிண்டாப்போல நெஞ்சு வலி வந்து அவடமகள் கொஞ்ச நேத்தயால கண்ண மூடிட்டா. அப்ப அவக்கு அறுபது வயசி முடிஞ்சி அறுபத்தொண்டு தோங்கின ண்டு செல்லி மகள நெனச்சி என்னேரமும் பெத்தா கொளறுவா. பொறகு மூத்த பேத்திர ஊட்ட வந்து மொடங்கிட்டா.

செவப்புக் கல் தோட்ட நான் கண்ண மூடின பொறகு அவதான் எடுக்க இருந்த. அவ எனக்கி முந்திப் பொய்த்தா ண்டு நெனச்சி நெனச்சி பாக்கிறதும் அத ஆக்களுக்கிட்ட கதைக்கிறதுமா மனுசிர காலம் கழிஞ்சிட்டு. தோடு இனி மூத்த பேத்திக்குத்தான் ண்டு நெனச்சிக்கிட்டா.

மூத்த பேத்தியும் பெத்தாவ நெல்லாக் கவனிக்கிற. அவ புள்ள குட்டிக்காரி. மூத்தது பொம்புளப் புள்ள. மத்தது மூணும் பொடியனுகள். அஞ்சாவது புள்ளய ஆசுவத்திரில பெத்து ண்டயோட மூணுநாள். ப்பயும் வாட்டுலதான் இரிக்கா.

பன்னீர்க்கொடம் ஒடஞ்சி குறிகண்ட ஒடன ஆசுவத்திரிக்குக் கொண்டு போனதாம்.

தாயும் புள்ளயும் ன்னமும் ஊட்ட வெரல்ல. தாய்க்கு தொடந்து துவால எறைக்கிதாம். புள்ளயும் கண்ணாடிப் பொட்டிக்க இரிக்காம். அதால டாக்குத்தரு டிக்கட்டு வெட்டல்லயாம். மனுசி சோறு கறி தின்னாம மூணு நாளா கைட்டப்பர்ரா.

செவப்புத் தோட்டப் பத்தியெல்லாம் அவ ப்ப யோசிக்கல்ல. தாயும் புள்ளயும் உசிரோட பத்திரமா ஊட்ட வெரனும் ண்டு நேத்திக்கடன் வெச்சிப்போட்டு குந்திக்கிட்டு கொளறிக் கொளறி இரிக்கா.

பேத்திர மூத்த பொம்புளப் புள்ள பெத்தாட கட்டுப்பொட்டிக்கி மேல ஏறி வெளயாடுது.

ஒரு காகம் வேலில இருந்துக்கிட்டு ஒரே கத்துவயாக் கத்துது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொலப்பால்

காசிக்கி மருந்து குடுக்கிற டாக்குத்தர்ர ஊடு. அங்க வெறாந்தயில கெடக்கிற றப்பர்க் கதிரயில வருத்தக்காற ஆக்கள் வந்து இரிப்பாக.

அவக ஒவ்வொரு ஆளா உள்ளுக்க போய் டாக்குத்தருக்கிட்ட வருத்தத்தச் செல்லி துண்டு எழுதி வாங்கிட்டு வந்து ஓடலிக்கிட்டக் குடுத்து மருந்த வாங்கிட்டு வெளிய போவாக.

ண்டக்கி ரெண்டாந் தடவயா மருந்தெடுக்க வந்து வெறாந்தயில வண்டிக்கார அகமனும் அவன்ட மனுசியும் றப்பர் கதிரயில கவலயோட இரிக்காக. மனுசிர மடில அவட ரெண்டர வயசிக் கொழந்தப் புள்ள.

கொஞ்ச நேத்தயால முந்தியும் புள்ளக்கிக் காச்சலெண்டு ரெண்டுபேரும் மருந்தெடுக்க வந்தவக.

புள்ளய சோதிச்சி நிறுத்துப் பாத்து கடயில பெனடோல் பாணி வாங்கிக் குடுங்க ண்டு சென்ன டாக்குத்தரு துண்டுல மருந்து எழுதிக் குடுத்தாரு.

மருந்தெடுத்திட்டுப் போனவங்க ப்ப ஏன் ன்னொருக்கா டாக்குத்தரச் சந்திக்க புள்ளயோட வந்திரிக்காக?.

அதுல ஒரு வெசயம் இரிக்கி.

உள்ளுக்க போன ஆள் வெளியால வாறவரைக்கும் அவக காத்திரிக்காக.

அந்த நேரமாப் பாத்து அகமன்ட மனுசிர மனசில ண்டக்கி நடந்த வெசயமெல்லாம் நெனப்புக்கு வருகுது.

அகமன்ட மனுசி ஊட்டுல இருந்து நாலூட்டுக்கு அங்கால இரிக்கிற அவட மச்சிர ஊட்ட ஒரு தென்னம்பாள எடுக்கப் போனவ.

அங்க ஒரு தென்ன மரம் நிக்கி. கொஞ்ச நாளக்கி முந்திண்டா ஒவ்வொரு ஊட்டுலயும் ஒரு தென்ன மரமாச்சிம் நிக்கிம். ஒரு ஊட்டுல ஒரு தென்னமரம் இருந்தாப் போதும். புள்ள மாதிரி ஒழச்சித் தரும். அதாலதான் தென்னம்புள்ள ண்டு அத செல்ர. இப்ப ஊடு வாசல்கள்ல அந்த மரமெல்லாம் ல்ல. அதுகளத் தறிச்சிப் போட்டு ஊடு கட்டிட்டாக. ப்பிடியான வேலகளாலதான் மனுசனுக்கு வேளவு பெரச்சினையும் வந்திரிக்கி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுல என்னயோ பெரச்சினயாம். வங்குரோட்டுப் புடிச்சிட்டாம். சாமானுகளுக்குச் செரியான தட்டுப்பாடு. லாம்பெண்ண ல்ல. பெற்றோளுக்குப் போளின். கேசிக்கி ஆன வெல. கொள்ளிக்கிக் காசி. கோதம்ப மாவு அரிசி கறி சாமானுகள கண்ணிலயும் காணல்ல.பெரிய்ய பெரச்சின. பசியும் பட்டினியும்தான் மிஞ்சிரிக்கி. கைட்டமெண்டா கணக்கில்ல. மனுசனுகளப் போட்டுப் பொணாரு புடுங்குது. ராச்சாப்பாட்டுக்கு என்ன செய்ர ண்டு வெளங்குதில்ல.

அவக்கு யோசின புடிச்சிட்டு. ராவயப்பாட்டுக்கு பிளேண்டித் தண்ணியாவது வெச்சிக் குடிக்கலாமெண்டு அடுப்புக்க வைக்க தென்னம் பாள ஒண்டிருந்தா தா மச்சி ண்டு கேட்டுத்தான் அவ அங்க போன.

கதயோடக் கதயா புள்ளக்கி காச்சல் வந்து ண்டக்கிப் பின்னேரமா மூணுமணி மட்டுல டாக்குத்தருக்கிட்ட போய் மருந்தெடுத்தெண்டும் சென்னா.

அவரு துண்டுல எழுதித் தந்த பாணி மருந்து ஒரு கடயிலயும் ல்ல. மத்தச் சாமானுகளப்போல மருந்துக்கும் பெரிய தட்டுப்பாடாம் ண்டு ஆக்கள் கதைக்காக. ராவைக்கு புள்ளட நெலம என்னமோ எவடமோண்டு பயமா இருந்திச்சி. டாக்குத்தருக்கிட்ட திரும்பப் போய் ஒரு கடயிலயும் அந்த மருந்து ல்லெண்டு செல்லி வேற துண்டு எழுதி வாங்கனுமெண்டு மச்சிக்கிட்டச் சென்னா.

மச்சி எல்லாத்தயும் கேட்டுக்கிருந்தா.

அன்னேரம் அவட மகளும் இருந்தா.அவ பள்ளிக் கொடத்துல படிப்பிக்கிற டீச்சரு. அவக்கும் தாய்ப்பால் குடிக்கிற சின்னப்புள்ள ஒண்டு இரிக்கி. அவ சென்னா பெரியாக்கள் குடிக்கிற பெனடோல் குளிச ஒண்ட பாக்குவெட்டியால அரச்சி அந்தத் தூள நாலு பங்காப் பிரிச்சி ஒரு பங்க மொலப்பால்ல கரச்சி புள்ளக்கிக் குடுங்க. அதுவும் பெனடோல் பாணிதான் ண்டு சென்னா.

பொறகு மச்சி கதைக்கத் தோங்கினா.

அந்தக் காலத்தில என்ன வருத்தமெண்டாலும் பரிசாரிமாருக்கிட்ட போய் குளிச மருந்து எடுப்பாக. அவரு கோரோசனயில செஞ்ச குளிச தெருவாரு .செல குளிசகள மொலப்பால்ல கரச்சி சாப்பாட்டுக்குப் பொறகு மூணு தெயாலம் குடிங்க ண்டு செல்லித் தெருவாரு. செலத தேன்ல கொழச்சிக் குடிக்கச் செல்லுவாரு. என்னயாச்சிம் செடி கொடி மூலி மருந்து எலயப் பிச்சிக்கிட்டு வந்து சாறு புழிஞ்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிக்கத் தெருவாரு. ப்பிடியெல்லாம் செஞ்சிதான் என்ட புள்ளகள்ர வருத்தம் வாதயெல்லாம் லேசாகின. ப்ப ஆரும் பரிசாரிக்கிட்டப் போறதுமில்ல. மொலப்பால்ல குளிசய கரச்சிக் குடிக்கிறயுமில்ல. காலம் எப்படியெல்லாம் மாறிப் பொய்த்தெண்டு மச்சி கவலப்பட்டா.

என்ட மகள் செல்ராப்போல பெனடோல குடு ண்டு சென்னா.

வேலி ஓரத்தில தென்னம்பாள இரிக்கி தேவயான அளவுக்கு எடுத்துக்கிட்டுப் போ ண்டும் சென்னா.

தென்னம்பாள பூக்கனெட்டி ஓலமட்ட தேங்காமட்ட பன்னாட பழங்கிடுகு தென்னோல செரட்ட எல்லாம் அடுக்கி வெச்சிருந்தா.

ரெண்டு பாளய எடுத்துக்கிட்டு ஊட்ட வந்தவ டீச்சரு சென்ன வெசயத்த புரிசனுக்கிட்ட சென்னா.

டாக்குத்தருக்கிட்ட வேற மருந்து எழுதிக் கேப்பம். ல்லாட்டி பெரிய பெனடோல மொலப்பால்ல கரச்சிக் குடுக்க கேட்டுப் பாப்பம் ண்டு அகமன் சென்ன ஒடன புள்ளயத் தூக்கிட்டு ரெண்டு பேரும் டாக்குத்தருக்கிட்ட வந்தாக.

அப்பிடி வந்த ஆக்கள்தான் ப்ப வெறாந்தயில இருந்து உள்ளுக்குப் போன வருத்தக்கார ஆள் வெளியால வாறவரைக்கும் காத்திரிக்காக.

ரெண்டுபேரும் டாக்குத்தர்ர அறைக்குள்ள போனாக. ஒரு கடயிலயும் பாணி மருந்தில்ல ண்ட வெசயத்த அகமன் சென்னாரு. மொலப்பால் வெசயத்த பொஞ்சாதி சென்னா. டாக்குத்தருக்கு வெசயம் வெளங்கிட்டு.

அவரு ஒடன ஒத்துக்கல்ல. ரெண்டு மூணு மருந்துக் கடைக்கி டெலிபோன் பண்ணி வெசாரிச்சாரு. பாணி மருந்து ஒரு கடயிலயும் ல்ல.

டாக்குத்தரு ஒருக்கா யோசிச்சாரு. அந்தக் காலத்தில இருந்து பரிசாரிமாரு குளிசய மொலப்பால்ல கரச்சிக் கொடுக்கச் சென்னத காதால எத்தின தெரம் அவரு கேட்டிருப்பாரு ண்ட சங்கதியெல்லாம் அவர்ர மனசில ஒவ்வொண்டா ஓடிச்சோ என்னயோ? ன்னொருக்கா புள்ளய தெராசில நிறுத்துப் பாத்தாரு.

ஒரு நாளக்கி மூணு தெரம் பெரிய பெனடோல மொலப்பால்ல கரச்சி நீங்க சென்ன மாதிரி குடுங்க ண்டு சென்னாரு.

ஊட்ட வந்து புள்ளய வெச்சிப்போட்டு ஒரே ஓட்டமா மச்சிர ஊட்ட போய் வெசயத்தச் சென்னா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டீச்சருக்கிட்ட மொலப்பால் ஒள்ளுப்பம் பீச்சித் தரக் கேட்டா.

புள்ள ப்பான் குடிச்ச. கொஞ்சம் சொணங்கி வாங்கெண்டு டீச்சரு சென்னா.

பொறகு வாறனெண்டு செல்லிப் போட்டு அவ ஒடன ஊட்ட வந்திட்டா.

நேரம் மசண்டயாகிட்டு.

மச்சிக்காரி சுக்கிரியான் கொழுக்கில மொலப்பால் ஒள்ளுப்பம் கொண்டந்து அகமன்ட பொண்டிக்கிட்டக் குடுத்தா.

புள்ள மொலப்பால்ல கரச்ச பெனடோலக் குடிச்சிட்டு நிம்மதியாத் தூங்குது.

தென்னம்பாளய பத்த வெச்சி தேத்தண்ணி போடத் தயாராகிறா வண்டிக்கார அகமன்ட மனுசி.

ஞானம் அக்டோபர் 2022 (269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்காடு

சில்லறக் கட காசிம் காக்கா பொஞ்சாதி கண்ண மூடின பொறகு மகள்ர ஊட்டுலதான் இருந்த. அங்க புள்ளகுட்டிகள் கூட. அதால மூத்த பேத்திர ஊட்டுக்கு வந்து அவர்ர காலம் கழியிது. பேத்தி ப்ப புள்ளத்தாச்சி. அவக்குப் பொறந்த ரெண்டு புள்ளகளும் தக்கல்ல. ஊட்டுச் செறப்புக்கு புள்ள ல்லெண்டு கவலயோட இருந்தா. அஞ்சி வரிசத்துக்குப் பொறகு ப்ப புள்ள தரிச்சிரிக்கா. வகுத்தில நெற மாசம்.

வலி கண்ட ஒடன சொணங்காம வாட்டுக்குக் கொண்டாங்க ண்டு டாக்குத்தரு சென்னயாம்.

அவரு பொம்புளகள் புள்ளப் பொர்ர வெசயத்தப் பாக்கிற டாக்குத்தரு. புள்ள உண்டாகினதில இருந்து அஞ்சி மாசமா அவருக்கிட்டத்தான் மாசம் தவறாம சோதிக்கப் போறவ.

ண்டைக்கி பொலபொலெண்டு விடியக்கிட்டவா ஈரம் படுகுதாமெண்டு அவவ கார்ல ஏத்திக்கிட்டு டாக்குத்தரு வெரச்செென்ன பெறவெட்டு ஆசுவத்திரிக்கி கொண்டு பொய்த்தாக. அவட புரிசனும் தாயும் கூடப் போறாக. காசிம் காக்கா ண்டைக்கி அந்த ஊட்டுல தனிய இரிக்காரு

மத்தப் பேத்தி அவருக்கு காலயில சாப்பிர்ரதுக்கு ஊட்டுல இருந்து தண்ணிச்சோறு கொண்டந்து குடுத்தா. புள்ள ன்னங் கெடைக்கல்லியாம். பின்னேரம் சீசர் செஞ்சிதான் புள்ள எடுக்கிறயாம் ண்டத்தயும் செல்லிட்டுப் போனா. அத நெனச்சி அவரு கவலயோட இரிக்காரு.

தனிய இரிக்கிறதால அவர்ர மனசுக்குள்ள பழசெல்லாம் ஒண்டுக்குப் பின்னால ஒண்டா வெரத் தோங்கிச்சி. அதுல அவர்ர மகள் பொறந்த வெசயம் கொள்ளயா வந்திச்சி.அந்த மகள்தான் ப்ப புள்ளத்தாச்சியோட ஆசுவத்திரி வாட்டுல நிக்கா.

ஆசுவத்திரில நிக்கிற அவர்ர மகளுக்கு இப்ப அம்பத்தொரு வயசி. நம்முட நாட்டுல சேகுவெராக் கொழப்பம் நடந்த வரிசந்தான் அவ பொறந்த.

அவ கெடைக்கிறதுக்கு ரெண்டு மூணு நாளக்கி முந்தி மருத்துவிச்சி ஊட்ட வந்ததும் அவக்கு சந்தோசமா பால்பேணியால மூணு சுண்டு அரிசியும் தேங்கா ஒண்டும் அவர்ர மனுசி நெறஞ்ச வகுத்தோட இருந்து குடுத்தனுப்பினதும் அவருக்கு ஞாபகத்தில வந்திச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவிச்சி வந்து போய் அடுத்த நாளே மனுசிக்கி இடுப்புவலி தோங்கிச்சி. வெசகளம் கெடச்ச ஒடன மருத்துவிச்சியும் வந்திட்டா. இடுப்பு வலி கூடிக்கிட்டு வந்திச்சி.

மசண்டைக்குள்ள புள்ள பொறந்திருமெண்டு அவ சென்னது அவருக்கு நெனப்பில வந்திச்சி.

மருத்துவிச்சி புள்ளத்தாச்சிக்கி கருக்கல் காச்சிக் குடுக்கத் தோங்கினா.

நாலஞ்சி பல்லு தோல் உரிச்ச வெள்ளப்பூடு, உலுவாஅரிசி ஒரு புடி, மொளகு, ஒரு துண்டு வேருக்கொம்பு ன்னம் ரெண்டொரு சாமானுகளும் சேத்து இடிச்சி தண்ணிய கொஞ்சமா உட்டு கொதிக்க வெச்சி பொறகு அத சீலத் துண்டுக்க வெச்சி வடிச்சி சாயத்தக் குடிக்கக் குடுத்தா. குடிச்சிக் கொஞ்ச நேத்தயால நோக்காடு எழும்பிச்சி. பொறகு ஒரத்திச்சி. அன்னேரம் அவர்ர மனுசி பட்ட பாட்ட பாக்க ஏலா.

ண்டைக்கி அத நெனச்சிப் பாத்தாரு.

மருத்துவிச்சி புள்ள பொறக்கிற அறய ஒழுங்கு பண்ணினா. உடுக்கிற ஒயில் பொடவ ஒண்ட எடுத்து ஒரு தொங்கல்ல தொண்டு மாதிரி முடிச்சிப்போட்டு அத மோட்டு வளையோட அறிக்கயாக் கட்டச் சென்னா. பொடவய வளைக்கி மேலால எடுத்து மத்தத் தொங்கல நெலத்தில படாம ஒரு மொழம் ஒசரத்தில தொங்கப் போட்டா. கெணத்தடில இருந்து சாடயா குருத்துமண் ஒரு பொட்டிக்க எடுத்துவரச் செல்லி நடு ஊட்டுக்குள்ள கொட்டிப் பரப்பினா. அதுக்கு மேல நெல்லுக்காய வெய்க்கிற படங்கு ஒரு துண்ட மடிச்சிப் போட்டா. பொறகு பாய விரிச்சா. அறயில ஒரு மூலைக்க அரிக்கன் லாம்ப கொழுத்தி வெச்சா. காசிம் காக்காவக் கூப்பிட்டு டோச்சி லைற்றும் புது பெலட்டின் ஒண்டும் கேட்டாவாம்.

டோச்சி லைற்று ஒண்டு அவருக்கிட்ட இருந்த. அதக் குடுத்தாரு. லைற்ற அடிச்சிப் பாத்தா. நெல்ல வெளிச்சமா இருந்திச்சி.

செவனக் கொளக்கு பெலட்டின் அவர்ர கடயில இருந்த. பச்சக் கலர்ல ஏழு ங்கிற எலக்கம் போட்ட பெலட்டின்.அதயும் கொண்டந்து குடுத்தாரு.

ஒண்டும் எழுதாம பெலட்டினுக்கு உள்ளுக்கு எண்ண பூசின தாள் இரிக்கும். தாள்ச் சுத்தினாப்போல பெலட்டின் இரிக்கும். ஒறயக் களட்டி எறிஞ்சி போட்டு எண்ண பூசின தாளோட பெலட்டின பத்திரமா ஒரு எடத்தில வெச்சா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளயோட ஒட்டி வாற பொக்கணிக் கொடிய பெலட்டால கவனமா அறுத்து வேறாக்கிறயாம். ப்பயும் நம்முட ஓடம்பில இரிக்கிற பொக்கணி அந்தக் கொடி வெட்டின எடந்தான்.

இதெல்லாம் ப்பெண்டாப்போல அப்பிடியே அவர்ர மனசில ஓடிச்சி.

செவனக் கொளக்கு பெலட்டின் ப்ப வாறெல்ல ண்டத யோசிச்சிப் பாக்காரு. மொகத்தத் தடவுறாரு. தாடி மீசயெல்லாம் வளந்து கெடந்திச்சி. அதுகளப்பத்தி அவரு ப்ப யோசிக்கிறெல்ல. பேத்திப்புள்ள ஆபத்து ஒண்டுமில்லாம ஆசுவத்திரில இருந்து வந்திரனும் அதான் அவர்ர கவல.

திருப்பித் திருப்பி பழய நெனப்பு வந்துக்கிட்டு இருந்திச்சி. நோக்காட்டு வேதனயால மனுசி கெடந்து துடிச்சது அவர்ர கண்ணுக்க வந்திச்சி.

மருத்துவிச்சி காசிம் காக்காவ வெட்டல போகச் சென்னயாம்.

வெறாந்தயில ஒரு தொங்கல்ல அரச் செவரு இருந்த. அதுர மேல் பகுதி ஆனக்கிடுகால மறச்சிரிக்கும்.அங்க ஒரு சாக்குக் கட்டில் கெடந்த. அவரு வெட்டல வந்து அந்த சாக்குக் கட்டில்ல இருந்தாராம். அறைக்குள்ள மருத்துவிச்சிக்கி ஒதவியா அவர்ர மனுசிர தாய்க்காரியும் ன்னம் ரெண்டொரு பொம்புளகளும் இருந்தயாம்.

மருத்துவிச்சி புள்ளத்தாச்சிய கைல புடிச்சி எழுப்பிக்கிட்டு வந்து விரிச்சிருந்த பாய்க்கு மேல படுக்கவெச்சிரிப்பாபோல

எழும்பு புள்ள. வளயில தொங்குற பொடவயப் புடிச்சிக்கிட்டு உன்னி உன்னி எழும்பு புள்ள ண்ட சத்தம் வெறாந்தைக்க இரிக்கிற அவர்ர காதுக்க அடிக்கடி கேட்டிச்சி.

சொட்டு நேத்தயால அறைக்குள்ள கொழந்தப்புள்ள ஒண்டு கத்துற சத்தம் கேட்டிச்சி. ஒரு பொம்புள கதவத் தொறந்து அவருக்கிட்ட பொம்புளப் புள்ள ண்டு சிரிச்சிக்கிட்டுச் சென்னா. குசினிக்க இருந்த ஒரு பொம்புள ஓடியந்து அவக்கிட்ட மாக்கொடி உழுந்திட்டா ண்டு கேட்டா. ஓம் ண்டு செல்லிப் போட்டு கதவப் பூட்டிட்டா. மா உழுந்தா பயமில்ல ண்டு செல்லிக்கிட்டு அவ குசினிக்க திரும்பிப் பொய்த்தா.

ப்பிடி ஒவ்வொண்டா நெனப்புல வந்துக்கிட்டே இருந்திச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராப்பட்டதால மருத்துவிச்சி அவிசிர அவிசிரமா வேலகள முடிச்சிக்கிட்டு புள்ளய கழுவிக் குடுத்திட்டு வெளிக்கிட்டுப் போனா. நிண்ட பொம்புளகள் மத்த மத்த வேலகளப் பாத்தாக.

காசிம் காக்கா அறைக்குள்ள போய் புள்ளயப் பாத்தாரு. புள்ளட ரெண்டு காதுக்கயும் ஓதி ஊதினாரு. மனுசியப் பாத்தாரு.

மனுசி அவரப் பாத்தது சிரிச்சது எல்லாம் ப்பயும் அவர்ர கண்ணுக்கான் இரிக்காம்.

அடுத்த நாள் விடிய வெளிப்பக்கத்து கதவு நெலயில வேப்பங் கொத்து கட்டிருந்திச்சி. உள்ளுட்டுக் கதவடிய காவலுக்கு இரும்பு அலவாங்கு கெடந்திச்சி. தமுளாக்கள் இரிக்கிற பக்கத்து ஊருக்கு ஒரு ஆம்பிளய அனுப்பி சாராயம் விக்கிற கடயில வெரண்டி வாங்கிட்டு வரச் சென்னாக. புள்ளப் பெத்தம்மாமாரு வெரண்டி குடிச்சா பச்ச ஒடம்புல வேதின வெளங்க மாட்டாதாம்.

இதெல்லாம் அவருக்கு ஞாபகம் வந்திச்சி.

கொஞ்ச நேத்தயால மருத்துவிச்சியும் வந்தா. அவக்கு ரெண்டு கொத்து அரிசி, உரிச்ச தேங்கா ஒண்டு, கோழிமுட்ட, வாழப்பழம் ஒரு சீப்பு, ஒர்ராத்தல் சீனி, தேயிலத்தூள் பக்கெட்டு, ஒரு பகழி வெத்தில, சுருள் பாக்கு, கைப்பு, காசி எல்லாம் குடுத்தாக.

ரெண்டொரு நாளக்கி ஒருக்கா மருத்துவிச்சி வந்து தாய் புள்ளயப் பாத்திட்டுப் போவா.

புள்ள கெடச்ச செவ்வாக்கெழம. செவ்வாயோடச் செவ்வா எட்டு. பொதன், வெயாழன், வெள்ளி போனா சனிக்கெழம பன்னெண்டு எடுக்கிற ண்டு மனுசி அவக்கிட்டச் சென்னா. பன்னெண்டுக்கு மருத்துவிச்சிம்மாக்குக் குடுக்க சுங்கோடிப் பொடவ ஒண்டு வாங்கணும் மறந்திராதீங்க ண்டு புரிசனுக்கிட்டச் சென்னா.

செய்யது பீடி குடிச்ச காசிம் காக்கா புள்ளப் பொறந்த சந்தோசத்தில திறிலோசிச் சிக்கிரெட்டுப் குடிக்கார்ரா ண்டு ஆக்கள் அவரப் பகிடி பண்ணினயாம் அதுவும் நெனப்பு வந்திச்சி.

மகள் பொறந்த வெசயத்த மனசில நெனச்சி நெனச்சி அவர்ர அண்டய பகல் பொழுது கழிஞ்சிட்டு.

அந்த மகள்தான் ப்ப ஆசுவத்திரில புள்ளத்தாச்சியோட நிக்கா.

புடிச்சோறு திண்டாரு. ஒரு மொடரு தண்ணியும் குடிச்சாரு. சாப்பிட்டுட்டு சொட்டுக் கெழியனுமெண்டு நெனச்சாரு. இனி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேரங் காணா. ராவக்கி தனிய படுக்க வேணாம் ண்டு ரெண்டு பேரப் புள்ளகள் வந்தானுகள். ஆசுவத்திரில என்ன நடந்த ண்டு கேட்டா அவனுகளுக்கு ஒண்டும் தெரியாதாம். போண பாத்துக்கிட்டுப் படுக்கானுகள்.

பொழுது விடிஞ்சிச்சி.

கேத்தடிய காரொண்டு வந்து நிக்கிற சத்தம் கேட்டிச்சி. தாயயும் புள்ளயயும் ஆசுவத்திரில உட்டுப் போட்டு கார்ல இருந்து அவர்ர மகள் எறங்கிட்டு வாறா. நேத்து ராவு சீசர் பண்ணி புள்ள கெடச்செண்டும் நாளக்கிப் பாத்துத்தான் டாக்குத்தரு டிக்கட்டு வெட்டுவாரு ண்டும் சென்னா. நேத்து முழுக்க அவர்ர மனசில ஊட்டுல அவ பொறந்த படந்தான் ஓடின ண்டு அவக்குத் தெரியா.

சீசர் பண்ணின ண்ட செல்லக் கேட்ட ஒடன புதுநாணயமான ஒரு சீசரு ண்டு கோவத்தக் காட்டாம மனசிக்குள்ள நெனச்சிக்கிட்டாரு.

அவர்ர கண்ணுல இருந்து சொட்டுத் தண்ணி வந்திச்சி.

ஞானம் ஜனவரி 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெண்டு இத்தா

சீனத்தும்மா றசீன் மாஸ்டருக்கு வாண்டு இருபத்தஞ்சி வரிசம். தலயில ப்பான் ரெண்டொரு வெள்ளமுடி தெரியிது. அவக்கு தலப்புள்ள பொம்புள.இருபது வயசில ஒரு பொடியனும் இரிக்கான். அவ கொஞ்சம் அடக்கமானவ. புரிசன கேள்வி கணக்குக் கேட்டு கணகாட்டுப் படுத்தமாட்டா.

றசீன் மாஸ்டருக்கு எளம் வயசில வாத்தி வேல கெடச்ச. ஊர்ல அவர எல்லாருக்கும் தெரியும். காணி பூமியெல்லாம் இரிக்கி. ஊட்டுக்காரிய நெல்லா வெச்சிக்கிருந்தாரு.

வேளவு நாளும் ஊர்லதான் படிப்பிச்ச. சும்மா இருந்தாப்போல வாங்காமம் ஊருக்கு மாத்தம் கெடச்சி மாறிப் போனாரு.

சின்னொரு பள்ளிக் கொடம். இருபது கட்டத் தூரம். இரிக்கிற படுக்கிற எல்லாம் பள்ளிக் கொடத்து அறயில தான்.

அவரோட ன்னமொரு மாஸ்டரும் கூட இரிக்கிறயாம். ராவயில கதிர மேசய ஒழுங்கு பண்ணி வகுப்பறயில படுத்துத் தூங்குவாங்க. ஒரு ஊட்டுல சாப்பாடு. பகல் சாப்பாட பள்ளில படிக்கிற சின்னப் பொடியன் போய் எடுத்துக்கிட்டு வருவான். ராவயில அந்த ஊட்டுல போய் சாப்புடுவாக.

றசீன் மாஸ்டரு கெழமைக்கு ஒருக்கா தப்பாம ஊருக்கு வருவாரு. எப்பிடியும் சனி ஞாயித்துக்கெழம ஊர்ல நிப்பாரு.

“அங்க கரண்டு ல்ல. ராப்பட்டா குப்பி வெளக்குத்தான் பத்த வெய்க்கிற. டோச்சி லைற்ற புடிச்சிக்கிட்டுத்தான் ராச்சாப்பாட்டுக்குப் போற வாற. பள்ளிக் கொடத்து வளவுக்க கப்பி போட்ட கெணறு ஒண்டு இரிக்கி. அதுலதான் தண்ணி வாக்கிற. தெலாந்து வாளில அள்ளிப் பழகின நமக்கு கப்பிக் கெணறு கொஞ்சம் கைட்டம்”

மனுசிக்கிட்ட மனந் தொறந்து கதைப்பாரு.

ஊட்டுல நிக்கிற ரெண்டு நாளும் நல்ல சாப்பாடு. சந்தோசமா புள்ளகளோட பொழுது கழியும். திங்கக் கெழம விடியச்சாமம் ஒடன கண்ண முழிச்சி தலயில குளிச்சி வெளிக்கிட்டு வாங்காமத்துக்குப் பொயித்துருவாரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பிடி ஒரு வரிசம் மட்டுல கழிஞ்சிச்சி. கெழமைக்கு ஒருக்கா வாறது கொறஞ்சி ரெண்டு மூணு கெழமைக்கு ஒருக்காத்தான் வருவாரு.

ஊட்ட வாற செல பொண்டுகள்ர கதயும் சீனத்தும்மாட காதுக்க வேற சாங்கமா வந்து ஏறிச்சி.

றசீன் மாஸ்டரு வாங்காமத்தில ரெண்டாங் கலியாணம் முடிச்சயாமெண்டு ஊருக்குள்ள அரசல் பொரசலா கதைக்கிறதும் அவக்குத் தெரிய வந்திச்சி.

"ஏன் நீங்க போன கெழம வெரல்ல" பொஞ்சாதி கேட்டா. "பெரயாணம் செய்ர ப்பயெல்லாம் கைட்டமா இரிக்கி" ப்பிடித்தான் வெளக்கம் சென்னாரு.

வந்தாலும் ஞாயித்துக் கெழம சாய்ந்தரம் பொய்த்திருவாரு.

அதப் பத்தி ஒருநாள் கேட்டா.

"மின்னெண்டா திங்கக் கெழம விடியத்தான் போற இப்ப ஞாயித்துக் கெழம...." ண்டு இழுத்தா.

அதுக்கும் வேற வெளக்கம் வெச்சிருந்தாரு.

"பள்ளிக் கொடத்தில வேல கொள்ள. காலத்தால வெளிக்கிட்டுப் போனா வேளைக்கி பள்ளிக்கிப் போக ஏலாமக் கெடக்கு"

என்ன இருந்தாலும் பொஞ்சாதிக்கு வெளங்காமலா போகும்?

எத்தின நாளக்கி அடக்கி அடக்கி வெச்சிக்கிரிக்கிற.

கெழம லீவில ஒருநாள் ஊட்ட வந்தவருக்கிட்ட தந்திரமாக் கேட்டா.

"ஊருக்குள்ள ப்பிடியொரு கத இரிக்கி. நான் நம்பல்ல..."

"பச்சப் பொய். சனங்கள்ர கதய நம்பப்பொடா. வேணுமெண்டு கத கட்டுங்கள்"

அவரு ஒரே டோக்கா மறுத்தாரு. அவவும் நம்பிட்டா. ஆனா ஊருக்குள்ள கத பெலமா இருந்திச்சி.

பொறகு ஒருநாள் வெசயத்தச் செல்லி சத்தியம் கேட்டா.

மனுசன் ஒரு மாதிரியா ஒத்துக்கிட்டாரு.

"ப்பிடியான நெலமயில ரெண்டு கலியாணம் செய்யலாமெண்டு நம்முட இசுலாம் மார்க்கம் செல்லுது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் சென்னாரு.

மனுசி கத்திக் கொளறி அண்டு ராவெல்லாம் நித்திர இல்லாமக் கெடந்தா.என்ன செய்ர. தலயெழுத்து. அத ஆரால மாத்த ஏலும் ண்டு நெனச்சி அவட காலம் கழிஞ்சிட்டு.

றசீன் மாஸ்டரு ஒரு வரிசத்தால ஊருக்கு மாறி வந்தாரு. பக்கத்து ஊர்ல வாடகைக்கு ஊடு எடுத்து வாங்காமத்துப் பொஞ்சாதியக் கொண்டந்து வெச்சாரு. மாறி மாறி ரெண்டு ஊட்டுலயும் தங்குவாரு.

நாலு மாத்தைக்கி முந்தி சீனத்தும்மாட ஊட்ட நிக்கக் கொள்ள சொகமில்லாம வந்து றசீன் மாஸ்டரு ஒடனயே உசிர உட்டுட்டாரு.

குளிப்பாட்டி மையத்தத் தூக்கிட்டுப் போய் பள்ளில மையத்துத் தொழுக தொழுதிட்டு அடக்கம் செஞ்சாக.

ப்ப ரெண்டு பொம்புளகளும் இத்தாவுல இரிக்காக

சீனத்தும்மாட தம்பிக்காரன் வந்து இத்தாவேலி ண்ட பேரில ரெண்டுமூணு கிடுகுகள கொழுவத் தோங்கினான்.

முந்தின காலத்தில இத்தா வேலி கட்ர பெரிய வேல. எல்லார்ர ஊட்டயும் சுத்தி கிடுகு வேலிதான் இரிக்கும். ரோட்டோரத்து கிடுகு வேலியோடச் சேத்து பறன் காலப் போல ஒசரமான ரெண்டு கம்ப நாட்டி கிடுகு வேலிக்கு மேல ன்னொரு வேலி கட்டுவாக. பெலமான வேலியா ல்லாம சும்மா கிடுகுகள கொழுவிக் கொழுவி உடுவாக. இத்தா வேலி ண்டு அதச் செல்ர.

அதப் பாக்கிற சனங்களுக்கு இத்தா ஊடு ண்டு தெரிஞ்சிரும். மரியாத குடுத்துப் போவாக. சுன்னத்து மாப்புளய கார்ல ஏத்திக்கிட்டு பீக்கர்ல பாட்டுப் போட்டுக்கிட்டு போக மாட்டாக. கலியாண மாப்புள ஊர்வலமெல்லாம் வேற ரோட்டாலதான் போகும். ஊட்டுல ரேடியோ இருந்தா அத இத்தா முடியிர வெரைக்கும் போடமாட்டாக.

ப்ப காலம் மாறிப் போச்சி. இத்தா வேலி கட்ர ல்ல. ரோட்டுல சத்தம் போட்டு பீக்கரக் கட்டி சாமான் விப்பானுகள்.

சீனத்தும்மாட இத்தா ஊட்டுக்கு பொண்டுகள் வந்துகிட்டு இருந்தாக. அவ பூணாரம் போடாம வெள்ளப் பொடவய உடுத்து முதுகில தலவாணியொண்ட செவரோட முட்டுக் குடுத்து ரெண்டு காலயும் நீட்டி ஒரு காலுக்கு மேல ன்னொரு காலப் பின்னிப் போட்டு கவலயோட பொண்டுகளோட கதச்சிக்கிருந்தா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்கா அவவப் பாக்க வந்த நெருக்கமான ஒரு பொம்புளக்கிட்ட அவ ப்பிடிச் சென்னயாம்.

"நெஞ்சிக்க வலிக்கிது ண்டு சென்னாரு. ஒடன எண்ட சீதேவி கண்ண மூடிட்டாரு. ரெண்டு பொஞ்சாதியயும் சமனாக் கவனிச்சாருதான். புள்ளகளுக்கும் ஒரு கொறயும் வெய்க்கல்ல. வாங்காமத்துக்காறிய எண்ட ஊட்ட கூட்டிக்கரத் தோங்கினாரு. ஆனா நான் உடல்ல. நானும் அவட ஊட்ட ஒருநாளும் போகல்ல. போகயும் மாட்டன்."

ண்டயோட றசீன் மாஸ்டரு மௌத்தாகி நாலு மாசமும் பத்து நாளும்.

சாமத்துல நேரத்தோட எழும்பி குளிச்சி ஒழுவெடுத்து வெள்ள ஒயில் பொடவய உடுத்து தொழுது குர்ஆன ஓதி ஊட்டுக்கார ஆளுக்கு அல்லாஹ்கிட்ட துஆக் கேட்டு வெட்டல வந்தா.

சீனத்தும்மாட இத்தாக் கடம முடிஞ்சி. இத்தா செறப்பா முடிஞ்சிட்டு ண்டு அவட மனம் சந்தோசப்பட்டிச்சி.

இத்தாவுல இரிக்கக் கொள்ள நடந்த செல வெசயங்கள நெனச்சிப் பாத்தா.

சீனத்தும்மாட ஒடன் பொறந்த தம்பிக்கி வாண்ட அவட மதினி ஒருக்கா அவவ இத்தா ஊட்டுக்க பாக்க வந்த. மௌத்துக்கு நிண்டு போனவ அடிக்கடி அவவப் பாக்க வருவா. ப்பிடித்தான் ஒருக்கா வந்தா. அன்னேரம் தம்பிரபொண்டி எசாக்காரி. ரெண்டு மாசம். அவவ உள்ளுக்கு அறைக்க வெர உடல்ல.

இத்தா இரிக்கிற ஆக்கள எசாக்காரிகள் பாக்கப் பொடா ண்டு செல்லுவாக. இத்தாச் சட்டத்துக்கு அது பொளயாம். வகுத்தில இரிக்கிற புள்ள ஆம்புளப் புள்ளயா இருந்தா இத்தா முறிஞ்சிருமாம். அதாலதான் அவட மதினியப் பாக்க உடல்ல.

ஓதிப்படிச்ச ஒலமாக்கள் ந்த வெசயத்த ஒத்துக்கிற ல்ல. நானும் எத்தினயோ தெரம் எண்ட காதால கேட்டிரிக்கன்.இசுலாத்துல ல்லாததெல்லாம் இஞ்சான் குடியிரிக்கி ண்டு செல்லிப்போட்டு மதினி கோவிச்சிக்கிட்டுப் பொய்த்தா.

மொதல்ல அந்த மதினியத்தான் போய்ப் பாக்கணும் ண்டு சீனத்தும்மா நெனச்சிக்கிட்டா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இத்தா முடிஞ்ச ஒடன பொறம்பான ஆம்புளய மொதலாவதா பாக்கிறதுக்குத்தான் பாத்தியா ஓத ஓதிப் படிச்ச லெப்பயக் கூப்பிர்ர.” புள்ளகளுக்குச் சென்னா.

மகனுக்கிட்ட “ ண்டயோட ஈரா முடியிது. வாப்பாக்கு சொர்க்கம் கெடைக்க துஆக் கேட்டு பாத்தியா ஓதனும். நீங்க போய் லெப்பய வெரச் செல்லுங்க.”

லெப்பைக்கி வெசகளம் செல்லிட்டு மகன் வந்தான். அவன வெரக்கொள்ள மணக்குச்சி ஒரு பக்கட்டும் கல்க்கண்டும் ஞ்சி விசுக்கத்தும் வாழப்பழம் ஒரு சீப்பும் வாங்கிட்டு வந்தான்

சீனத்தும்மா இத்தாவுல இருந்து வெளிய வந்ததக் கேள்விப்பட்டு அவவ பாக்க சொந்தக்கார ஆக்கள் அல்லயல்கார ஆக்கள் தெரிஞ்ச ஆக்கள் ண்டு பல பொண்டுகள் வந்து வந்து போனாக.

அவகளோட ராவு கனவுல புரிசன் வந்தத கதச்சிக்கிட்டு இருந்தா.

செல பொம்புளகள் சீனத்தும்மாட காதுக்க ஒரு வெசயத்தப் போட்டாக.

“ஒங்குட ஊட்டுக்கார ஆளுக்கு வாங்காமத்துப் பொம்புள ரெண்டாந் தாரமா வாண்டவ. மாஸ்டரு கண்ண மூடக் கொள்ள அவக்கு மாசம். அவவும் இத்தா இரிக்கா. நாலு மாசமும் பத்து நாளும் ண்ட கணக்கு புள்ளத்தாச்சிமாருக்கு ல்ல. புள்ள பொறக்கிற வரைக்கும் புள்ளத்தாச்சிக்கு இத்தாக் கணக்கு இரிக்கும். அதால அவட இத்தா முடிய ன்னம் ரெண்டு மூணு மாசமாவது போகும். ஒங்கிட இத்தா முடிஞ்சி. பழய கோவத்த உட்டுட்டு நீங்க அவவப் பாக்கப் போறது நெல்லது.”

ஆரு என்ன செல்லியும் சீனத்தும்மா எணங்கல்ல.

“என்ட ஒடம்புல உசிரு இரிக்கிர வெரைக்கும் அவள்ள வாசல்ல காலடியும் பட மாட்டா” சறமும் மறமுமா நடக்காது ண்டு செல்லிட்டா.

லெப்பையும் மோதினும் வந்தாக. எல்லாம் முடிஞ்ச பொறகு சீனத்தும்மாக்கிட்ட லெப்ப ஒரு கேள்வி கேட்டாரு.

“கபுராளிர ரெண்டாம் பொஞ்சாதி இத்தா இரிக்கா. பாக்கப் போகல்லியா”

போக மாட்டன் ண்டு மொகத்தால குறிப்புக் காட்டினா.

அன்னேரம் அவரு ஒரு வெசயம் சென்னாரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தா கடம உரிய மொறயா ஒழுங்கா நெறவேறனும். அது மறுமயில புரிசனுக்கு ஒதவும். இத்தாவுல இரிக்கிற பொஞ்சாதிமார்ர கைலதான் அது இரிக்கி. ரெண்டு பொஞ்சாதியயும் சமமா கவனிக்கிற ஆம்புளதான் ரெண்டாவது முடிக்கலாம் ண்டு நம்முட மார்க்கம் செல்லுது. ஒங்க ரெண்டு பேரயும் அவரு சமமா கவனிச்சிருக்காரு ண்டு வெளங்குது. புரிசன்ட நலவுக்காக நீங்க அவ இத்தாவுல இரிக்கக் கொள்ள போய் ஒருக்கா பாக்கிற நெல்லம்"

லெப்ப சென்னாரு

சீனத்தும்மா ஒண்டும் செல்லெல்ல.

அண்டு அசறுக்குப் பொறகு மகளக் கூட்டிக்கிட்டு சீனத்தும்மா வாங்காமத்துப் பொம்புள இத்தா ஊட்டுக்குப் பொய்த்துக்கிட்டிரிக்கா.

இத்தா ஊடு கிட்ட வெரக் கொள்ள "புரிசன் உசிரோட இருந்த. அன்னேரம் ஒறவு தேவல்ல. ப்ப என்னத்துக்கு அவ வரணும்" ண்டு ரெண்டாம் பொஞ்சாதி நெனப்பாவோ? ண்டு சீனத்தும்மாட மனம் கொளம்பத் தோங்குது.

சிறுகதை மஞ்சரி அக்டோபர் 2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலேட்டுப் பலக

பாறுக்கு மாஸ்டர்ர மகள் தன்ர புள்ளய நேசரிக்கு அனுப்ப ஒழுங்கு பண்ணிக்கிட்டு இரிக்கா. புள்ளட பொத்தக பேக்குக்குள்ள ஒத்த றூள் கொப்பி சித்திரக் கொப்பி பென்சில் கலர்ப் பொட்டி நூடுள்ஸ் வெச்ச சின்ன டப்பா தண்ணிப் போத்தல் எல்லாத்தயும் அடஞ்சா. பேக்கிட ரெண்டு பட்டிக்குள்ளாளயும் புள்ளட ரெண்டு கையயும் ஒட்டி தோளுக்கு மேலால பட்டிய எடுத்து பேக்க முதுகோடச் சேத்து கொழுவினா. பொடியன் பேக்கச் செமந்துக்கிட்டு நேசரிக்கிப் பொய்த்துக்கிட்டு இரிக்கான்.

பாறுக்கு மாஸ்டரு ஊட்டுல சும்மாதான் இரிக்காரு. அதால ஒவ்வொரு நாளும் பேரன நேசரிக்கிக் கூட்டிக்கிப் போற அவருதான். ண்டக்கிம் பொடியனோட நேசரிக்கிப் பொய்த்துக்கிட்டு இரிக்காரு. ஓஎல் ஏஎல் சோதினயெல்லாம் நெல்லாப் பாசி பண்ணின ஒரு பொம்புளப்புள்ள அரசாங்க வேல கெடைக்காததால நேசரி ஒண்டு போட்டு டீச்சரா அங்க வேல பாக்கா. வகுப்பறயில படம் கொஞ்சம் ஒட்டிரிக்கி. மாமரத்துக்குக் கீழ பொடியனுகள் நாலஞ்சி பேரு வெளயாடிக்கிரிக்கானுகள். கொஞ்சம் தள்ளி ரெண்டு பொம்புளப் புள்ளகள் அதப் பாத்துக்கிட்டு இரிக்கிதுகள். பாறுக்கு மாஸ்டரு பேரன உள்ளுக்க உடாம கைல புடிச்சிக்கிட்டு கேத்தடிய நிக்காரு. டீச்சரு ன்னம் வெரல்லியாம்.

அங்க ன்னொரு ஆள் நிண்டாரு. அவருக்கு நடுத்தர வயசிரிக்கும். மகன நேசரிக்குக் கூட்டிக்கிட்டு வந்தவரு. மாஸ்டருக்கு அவரத் தெரியா. ஆனா அவருக்கு பாறுக்கு மாஸ்டர நெல்லாத் தெரியிம் அவரோட மாஸ்டரு கதச்சாரு.

ஒங்குட காலத்தில ப்பிடி நேசரி இருந்தயா ண்டு பாறுக்கு மாஸ்டரு கேட்டாரு ஓமெண்டு சென்னாரு. அதக் கேட்ட பாறுக்கு மாஸ்டரு அவர்ர காலத்தில நேசரி இரிக்கல்லயாம். பள்ளிக்கொடத்தில அரிவரி வகுப்புத்தான் இருந்த. அரிவரி பாசி பண்ணினா மொதலாம் வகுப்பு ண்டு வெளக்கம் குடுத்தாரு.

அன்னேரம் டீச்சரு வந்திட்டா. ரெண்டு பேரும் புள்ளகள அவக்கிட்ட பாரம் குடுட்திட்டு வெளியேறினாக. கதச்சிக் கதச்சி கதட ருசில ரெண்டு பேரும் பாறுக்கு மாஸ்டர்ர ஊட்ட வந்து சேந்திட்டாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளக் கூப்பிட்டு ரெண்டு தேத்தண்ணி தா ண்டு கேட்டாரு. நாங்க படிச்ச காலத்தில அரிவரி வகுப்பு மொதலாம் வகுப்பிலயெல்லாம் சிலேட்டும் குச்சியும்தான் பாவிச்ச. ஆனா ப்ப நேசரிப் புள்ளகள் கொப்பி பென்சிலெல்லாம் பாவிக்கிதுகள் ண்டு வந்தவருக்கிட்டச் சென்னாரு.

அந்தக் காலத்தில படிக்கிற புள்ளகள் கொண்டுபோற சிலேட்டுப் பலகய நீங்க கண்டிரிக்கீங்களா ண்டு கேட்டாரு. அவரு ல்லெண்டு பதில் சென்னாரு. சிலேட்டுப் பலகயப் பத்தி அவருக்கு வெளங்கப்படுத்தினாரு.

கொப்பிர அளவுக்கு ஒரு சொட்டுப் பெரிசா எழுத்துக் கொப்பியப்போல நீள் சதுரமா இரிக்கும். கல்லுத் தூளால செஞ்சது. கறுப்புக் கலரு. கீழ உழுந்தா ஒடயும்.

சிலேட்ர நாலு பக்கத்திலயும் செலாக பொருத்தி இரிக்கும். அந்த செலாகய நாங்க சிலேட்டு மட்ட ண்டுதான் செல்ர. சிலேட்டு மட்ட ஒண்டோட ஒண்டு பொருத்திக்கிட்டு சிலேட்ட புடிச்சிக்கிட்டிரிக்கும். மட்டய லேசா கையால களட்டலாம். செல புள்ளகள் வகுப்புல சிலேட்டு மட்டய களற்றதும் பூட்ரதுமா இரிப்பானுகள்.

பழய அஞ்சி சதக் காசி நாலு மூலயும் மழுங்கின மாதிரி சற்சதுரமா இரிக்கிம். அப்பிடி சிலேட்டுப் பலகட நாலு மூலயும் மொன மழுங்கி இரிக்கும். ரெண்டு தெரிப்பா சிலேட்டுகள் இருந்திச்சி. ஒண்டு பெரிசி. மத்தது ஒள்ளுப்பம் சின்னது.

சிலேட்டில ரெண்டு பக்கத்திலயும் குச்சியால எழுதலாம். செல ஆக்கள் குச்சிய சிலேட்டுப் பென்சில் ண்டும் செல்ர. நாம பாவிக்கிற பென்சிலவிட குச்சி தடிப்புக் கொறய. ஒசரமும் கொறய. குச்சிர ஒசரத்தில அரவாசிக்கி தாள் சுத்தி இரிக்கும். எழுத எழுத குச்சிர நீட்டம் கொறஞ்சி வரும். தாள்ர மட்டம் வந்தா அதுக்குப் பொறகு குச்சியால எழுதுற கஸ்டம். சிலேட்டு கறுப்பா இருந்தாலும் குச்சியால எழுதினா எழுத்து வெள்ளயா தெரியும். பவுடர் மாதிரி தூள் தெரியும்.

வெளங்கிச்சா ண்டு கேட்டாரு. ஓமெண்டு பதில் சென்னாரு

சிலேட்டில எழுதினா கையால அழிச்சிப்போட்டு திருப்பியும் எழுதலாம். மாக்குச்சியால எழுதினா அழிக்கிற லேசி. கல்லுக் குச்சியால எழுதினா அழிக்கிற கொஞ்சம் கைட்டம். குச்சி வாங்கினா மாக்குச்சியா ண்டு பாத்துத்தான் வாங்குற. செல புள்ளகள் நாக்கில துப்பணிய எடுத்து வெரலால தொட்டு சிலேட்டில இரிக்கிற எழுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பானுகள். நானெல்லாம் வகுப்புக்கு எதுக்க நிக்கிற மல்லிக மரத்தில பூவ ஆஞ்சி அதாலதான் அழிக்கிற.

மகள் நன்னாரி போட்ட தேத்தண்ணி கொண்டந்து குடுத்தா. ரெண்டு பேரும் குடிச்சாக. வந்தவரு வாய உசுப்பாம கேட்டுக்கிட்டு இருந்தாரு. கனநாளக்கிப் பொறகு மாஸ்டருக்கு கதச்சிரிக்க ஒரு ஆள் கெடச்சிட்டு. சிலேட்டுப் பலகட சாட்டுல வெளக்கம் வெளக்கமா குடுத்துக்கிட்டு இருந்தாரு.

கல்முன டவுண்ல மணமகள் பொத்தகசால ஒண்டு இருந்த. அதுக்கிட்டால நெல்ல பொத்தகக் கட நாகூரார்ர பொத்தகக் கடதான். அது நம்முட ஊர்ல இருந்த. ஆனா மணமகளவிடக் கொஞ்சம் சின்னது. நாகூரார்ர பொத்தகக் கட நம்முட ஊர்ல எங்க இருந்தெண்டு தெரியுமா? ண்டு கேட்டாரு. அவரு தெரியா ண்டு பதில் சென்னாரு.

ப்ப அந்தப் பொத்தகக் கட ல்ல. கலியாண ரோட்டுல மாமிர புரிசன்ட சந்திக்கும் ஆவிசாட சந்திக்கும் எடயிலதான் இருந்த. ப்ப அந்த மூலக்குத்துல ஒரு மரத் தளபாடக் கட இரிக்கி. அதுக்குப் பக்கத்திலதான் பொத்தகக் கட இருந்தெண்டு வெளக்கினாரு.

அந்தக் காலத்தில பெரிய சிலேட்டு முப்பது சதம். சின்ன சிலேட்டு இருபத்தஞ்சி சதம். குச்சி ரெண்டு சதம். ல்லாட்டி மூணு சதம்.

அரிவரி படிக்கிற காலத்தில பாலபோதினி வாசிப்புப் பொத்தகத்த அம்பத்தஞ்சி சதத்துக்கும் சிலேட்டுப் பலகயும் குச்சியும் இருபத்தஞ்சி சதத்துக்கும் எங்கிட வாப்பா நாகூரார்ர கடயில எனக்கி வாங்கித் தந்தது ப்பயும் ஞாபகத்தில இரிக்கி. சிலேட்டும் குச்சியும் சில்லறக் கடயிலயும் விக்கிற. ஆனா பொத்தங்கள பொத்தகக் கடயில மட்டும்தான் வாங்கலாம் ண்டு சென்னாரு.

வகுப்புல பொடியனுகள் சண்ட புடிச்சா சிலேட்டுப் பலகயால தலயில அடிப்பானுகள். எங்கிட வகுப்புல முஸ்தவா ண்ட பொடியன் படிச்ச. என்னேரமும் அவன்ட மூக்கால சளி வழிஞ்சி வாய்க்குள்ள பூரும். புள்ளகள் அவன மூக்கோடி முஸ்தவா ண்டு பட்டப் பேரு செல்லிப் பகிடி பண்ணுவானுகள்.

மாஸ்டர்ர கதய மத்தவரு மிச்சம் கவனமா வாய மூடிக்கிட்டுக் கேட்டுக்கிட்டிருந்தாரு.

நாங்க படிக்கிற காலத்தில எடவேளப் பாடத்தில சாப்பிர்ரதுக்கு வணிசியும் குடிக்கிறதுக்கு பாலும் கெடைக்கும். தகாநாயக்கா ண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி மந்திரி நாடு முழுக்க இதக் குடுத்ததால அவர ஆக்கள் வணிசி மாமா ண்டு செல்ர. அஞ்சாம் வகுப்புப் படிக்கிற ரெண்டு பெரிய புள்ளகள் எங்கிட வகுப்புக்கு வணிசி கொண்டந்து பகிருவானுகள். ஒருக்கா வணிசி பகிரக் கொள்ள பக்கத்தில இருந்தவன் என்னயோ சென்னயாமெண்டு மூக்கோடி முஸ்தவா சிலேட்டுப் பலகயால சென்னவன்ட தலயில அடிச்சிப் போட்டான். பொடியன்ட தலயில கொஞ்சம் பொடச்சிருந்திச்சி. வகுப்பு டீச்சரு முஸ்தவாவக் கூப்பிட்டு மொழங்காலல நிப்பாட்டினா.

சிலேட்டு மட்டயால புள்ளகள் அடிபுடிப்பட்டதால பொறகு காட்போட்டால கறுப்பு சிலேட்டு வந்திச்சி. வளச்சி சிலேட்டு மட்ட இல்ல. உழுந்தா ஒடயயும் மாட்டா.

கறிபுளி வாங்குற நேரம் வந்திச்சி. பாறுக்கு மாஸ்டரு கதைக்கிறத நிப்பாட்டினாரு

ப்ப ஆருக்கிட்டயும் பழய சிலேட்டுப் பலக இரிக்குமா ண்டு வந்தவரு வாயத் தொறந்து ஒரு கேள்வி கேட்டாரு. ஓம். எங்கிட மூத்த காக்கா பழய சாமான் சக்கட்டுகள பத்திரப் படுத்தி வெய்க்கிற. அவரு ஒரு தடவ தமுள் நாட்டுக்கு பேசப் போன. ஒரு கடயில சிலேட்டுப் பலகயக் கண்டு வாங்கிட்டு வந்தாரு. அவர்ர பொத்தக அலுமாரிக்கி மேல ப்பயும் அது இரிக்கி. ண்டு சென்னாரு.

நம்முட நாட்டுல வெள்ளக்காரன்ட காலத்திலயும் சிலேட்டுப் பாவன இருந்த. ப்ப அது நிண்டுபோய் கன காலம். ஆனா இந்தியாவுல தமுள் நாட்டுல கிட்டத்தில வெரயும் சிலேட்டுப் பாவன இருந்த. ப்பயும் இரிக்கா ல்லியாண்டு எனக்கித் தெரியா. எம்ஜிஆரு பெரியாளா வந்தோடன படிக்கிற புள்ளகளுக்கு ஒணவுத் திட்டம் கொண்டந்து சாப்பாடு குடுத்தாரு. புள்ளகள் ஊட்டுல இருந்து சாப்பாட்டுப் பிலேட்டு எடுத்துக்கிட்டுப் போவாங்க. தமுள் நாட்டு ஆக்கள் நெல்லாப் பேசுவாக. பைல சிலேட்டு கைல பிலேட்டு ண்டு பேசின. அதச் செல்லி சிலேட்டுப் பலகட கதய முடிச்சாரு.

எங்கிட வாப்பா ஒங்களோட ஒண்டாப் படிச்சயாமெண்டு எடைக்கெட செல்லுவாரு ண்டத்த பாறுக்கு மாஸ்டருக்கிட்டச் செல்லி மத்தவரு போக எழும்பினாரு. ஆரு ஒங்குட வாப்பா ண்டு கேட்டாரு. முஸ்தவா ண்டு செல்லிக்கிட்டு அவரு வெளிய போனாரு.

பாறுக்கு மாஸ்டரு சிலேட்டுப் பலகயயும் முஸ்தவாவயும் ஒருநாளும் மறக்கமாட்டாரு.

ஜீவநதி ஏப்ரல் 2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூப்பன் பொத்தகம்

மீராலெவ்வப் போடியாரு பேப்பர் வாசிக்கிறது ஒரு கல. அதப் பாக்கிறதுக்கு சோட்டயா இரிக்கிம்.

றாக்கைல பத்திரமா இரிக்கிற கண்ணாடிய எடுத்துக்கிட்டு வந்து மான்தோல் விரிச்ச சாய்மனக் கதிரயில வசதியா சாஞ்சி பொட்டிய தொறந்து கண்ணாடிய கவனமா வெட்டல எடுப்பாரு. சாறன்ட தொங்கலால கண்ணாடி ரெண்டயும் கண்ணாடிக்கும் நோகாம கைக்கும் நோகாம லேசா தொறைப்பாரு. கண்ணாடிய மொகத்தில போட்டு ஒருக்கா நிமிந்து பாப்பாரு. இனி வாசிக்கலாம் ண்டு அவர்ர மனம் செல்லும். அப்ப வாசிக்கத் தோங்குவாரு.

பேப்பர வாசிக்கத் தோங்கினா கிட்ட ஆரும் நிக்கப்பொடா. ஒவ்வொரு பக்கமா ஒவ்வொரு எழுத்தா வாசிப்பாரு. மனசிக்குள்ளால வாசிக்காரா சத்தம்போட்டு வாசிக்காரா ண்டு தெரியாத அளவுக்கு சின்னொரு சத்தம் கேக்கும். வெளயாட்டு வெசயத்தயும் வசுக்கோப்பு நடிக்கிறவள் அரவாசி உரியானோட இரிக்கிற படம் போட்ட பக்கத்தயும் உட்டுட்டு மத்தபடி ஒவ்வொரு எழுத்தயும் வாசிச்சிப் போட்டுத்தான் முடிப்பாரு. பேப்பர்ல முக்காவாசி துப்பணியால நலஞ்சிரிக்கும். பேப்பர வாசிச்சி முடிச்சா பகல் சாப்பாட்டுக்கு செரியா இரிக்கும்.

ண்டைக்கி காலத்தால வெளிய போனவரு வெரக்கொள்ள ஒரு பேப்பர் எடுத்துக்கிட்டு வந்து வாசிக்கத் தோங்கினாரு.

வாசிச்சிக்கிட்டுப் போகக்கொள்ள இந்தியாவுல வெவசாயிகள் கச்சயோட நிண்டு போராட்டம் செய்ர படமும் செய்தியும் போட்டிருந்ததக் கண்டுட்டாரு. படத்த நெல்லாப் பாத்தாரு.

கொஞ்ச நாளக்கி முந்தி வெவசாயிகள் எல்லாரும் ஒண்டு சேந்து இந்தியாவுல போராட்டம் செஞ்சாக. ரேடியோவில டீவிலயெல்லாம் அதப் பத்தித்தான் கதச்சாக. பேப்பரெல்லாம் வெவசாயிகள் வெயிலுக்க வெறும் மேலோட கச்சயோட நிக்கிற படத்தத்தான் போட்டிச்சி.

அதெல்லாம் அவருக்கு ஞாபகம் வந்திச்சி.

ப்ப பெரச்சின முடிஞ்சிதாம்.

ன்னொருக்கா அந்தப் படத்த போட்டிரிக்கானுகள்போல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதப் பாத்தொடன அவருக்கு வேறொரு வெசயம் மூளைக்க ஏறிச்சி.

ப்ப நம்முட நாட்டுல செரியான ஒணவுப் பஞ்சம் வந்திரிக்கி. முந்தியொருக்கா ப்படியான பஞ்சமொண்டு வந்த நேரத்திலதான் வெள்ளக்கார கவுண்மெந்து மக்களுக்குக் கூப்பன் பொத்தகம் குடுத்த. குஞ்சி குறுமான் புள்ள குட்டி பெரியாள் சின்னாள் ண்டு பாராம எல்லாருக்கும் கூப்பன் பொத்தகம் கெடச்ச. எல்லாருக்கும் சாமான் கெடச்சிச்சி.

ப்ப கூப்பன் பொத்தகமும் ல்ல. கூப்பன் கடயும் ல்ல. கூப்பன ல்லத்தாக்கிப் போட்டு கொஞ்சச் சனங்கள ஏழச் சனங்களாக் கணக்குப் போட்டு ஜனசவிய ண்டு சாமான் குடுத்தாக. பொறகு ஜனசவிய மாறி ப்ப சமுத்தி வந்திரிக்கி.

ண்டைய பேப்பர்ல வந்த வெவசாயிகள்ர படத்தப் பாத்தோடன அவருக்கு இதெல்லாம் ஒண்டுக்குப் பின்னால ஒண்டா ஞாபகம் வந்திச்சி.

அந்த நேரமாப் பாத்து கேத்தடில ஆரோ கூப்பிர்ர சத்தம் கேட்டிச்சி. பேப்பர கைல வெச்சிக்கிருந்தாப்போல தலய கெழுச்சி கேத்துப் பக்கம் பாத்தாரு

புளியர்ர மகன் நிக்கான்.

புளியர்ர தத்தி ண்டா ஊர்ல எல்லாருக்கும் தெரியும். புளியருக்கு ஏழெட்டு ஆம்புளப் புள்ளகள். அதுல ஒருவன்தான் ன்னா போடியார்ர ஊட்ட வந்து நிக்கிறவன். போடியார்ர பழய கூட்டாளி. செரியான கரப்பத்தான் பூச்சி. எல்லா எடத்திலயும் நிப்பான். அவனுக்குத் தெரியாத வெசயம் ஊர்ல ஒண்டுமில்ல. ஊருக்குள்ள போட்டுக் கோழியொண்டு களவு போனதில இருந்து வளஞ்ச வட்ட கெழல் கண்டத்துக்க ஆன வந்து அழிச்சாட்டியம் பண்ணயும் கரண்டு வேலி போட்ட வெசயம் வெர அவனுக்குத் தெரியும்.

காலமில்லாக் காலம் என்ன ந்தப் பக்கமெண்டு செல்லி அவன உள்ள கூப்பிட்டாரு.

கம்புக்கட்டுக்க பேப்பரும் கைல மீன் கோருவயுமா நீங்க வந்ததக் கண்டன். கன நாளாக் கதைக்கல்ல பேசல்ல. ஒங்களக் கண்டு கதைக்கிற வேலயும் ஒண்டு இருந்திச்சி. அதான் வந்தன். காலயில எங்க போன ண்டு கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தெழும்பி கொளக்கட்டுக்குப் போனதில இருந்து பேப்பர வாங்கிட்டு ஊட்ட வந்தது வெரைக்கும் ஒவ்வொண்டாச் செல்லத் தோங்கினாரு.

காலத்தால சூரியன் தலயக் கெளப்பி பொழுது விடியிற நேரம். பச்சத் தண்ணியால வாயக் கொப்பளிச்சி பொஞ்சாதி தந்த ஞ்சி போட்ட தேயிலயக் குடிச்சிக்கிட்டிருந்தன். அன்னேரமாப் பாத்து வயல்காரன் வந்து சேந்தான். அவனுக்கிட்ட மூணு மூட வெத நெல்லு எடுத்து கொளத்தில எளகப் போடு. நான் கொஞ்சம் சொணங்கி வாறனெண்டு சென்னன்.

தண்ணிச்சோறு திண்டுட்டு கொளத்தங்கரப் பக்கம் போனன்.

கொஞ்சம் தள்ளி மத்தக் கரயில அத்தாங்கு போட்டு ஒருவன் மீன் புடிச்சிக்கிட்டிருந்தான். கறிப்பாட்டுக்கு என்னயும் பாப்பமெண்டு அந்தப் பக்கம் போனாப்போல கொக்கிசான் மீன் நாலஞ்சி கெடந்திச்சி. அத வெலயக் கேட்டு வாங்கி ஆத்து வாழ நாரால கோருத்து எடுத்துக்கிட்டு ஊட்ட வந்தன்.

வெரக்கொள்ள வாசிக்கிறதுக்கு பேப்பர் ஒண்டும் வாங்கிட்டு வந்தன். அதத்தான் நீ கண்டிரிக்காய்.

போடியார்த்தனத்த தள்ளி வெச்சிட்டு பழய கூட்டாளித்தனம் முன்னுக்காயிச்சி. மனந்தொறந்து ரெண்டு பேரும் கதச்சாக.

பேப்பர்ல என்ன கெடக்கெண்டு புளியர்ர மகன் கேட்டான்.

பேப்பர்லெண்டா நம்முட நாட்டு வெசயம் பெரிசா ஒண்டுமில்ல.

இந்தியாவுல வெவசாயிகள் கச்சயோட நிண்டு போராட்டம் செய்ர படத்த ண்டய பேப்பர்ல போட்டிருக்கானுகள். அத பாத்தோடன எனக்கி நம்முட நாட்டுல அந்தக் காலத்தில பாவிச்ச கூப்பன் பொத்தகம்தான் நெனப்பு வந்திச்சி.

ப்ப கூப்பன் பொத்தகம் பாவனயில ல்ல. ஒனக்கு கூப்பன் பொத்தகம் ஞாபகம் இரிக்கா ண்டு கூட்டாளியக் கேட்டாரு.

புளியர்ர மகனுக்கிட்ட இருந்து வெளக்கம் வரத் தோங்கிச்சி.

பொத்தகமெண்டா நாம வாசிக்கிற மாதிரிப் பொத்தகமில்ல போடியார். பென்சில்ர ஒசரம் இரிக்கிம். மட்டய ரெண்டா மடிச்சாப்போல பொத்தகம். நாலு பக்கம். ஒணவுப் பங்கீட்டு அட்ட ண்டு மொதல் பக்கத்தில அச்சடிச்சிரிக்கும். அதுர கடசிப் பக்கத்தில ஒரு வெவசாயிர படம் போட்டிரிக்கிம். கச்ச கட்டின வெவசாயி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பொட்டியோட நிண்டு வயலுக்க நெல்லு வெதைக்கிற படம். அந்தப் படத்தயும் பேப்பர்ல கெடக்கிற படத்தயும் பாத்துத்தான் ஒங்களுக்குக் கூப்பன் பொத்தகம் ஞாபகம் வந்திரிக்கிம்.

புளியர்ர மகன்ட கதயக் கேட்டு போடியாருக்குச் செரியான சந்தோசம். போடியார்ர சந்தோசத்தப் பாத்து கூட்டாளிக்கும் சந்தோசம். கூப்பன் பொத்தகம் உசிரு பொழச்சி வந்துக்கிருந்திச்சி

போடியார் ன்னம் கொஞ்சம் கேளுங்க. கூப்பன் பொத்தகம் மூணு தெரிப்பா இரிக்கிம். கொழந்தக் கூப்பன் புள்ளக் கூப்பன் சாதாரண கூப்பன். மூணும் மூணு கலர்ல இரிக்கிம், நான் செல்ற வெசயம் செரியா பொழயா?

தலையால ஓமெண்டு சென்ன போடியாரு கூப்பன் பொத்தகம் பத்தி வேற செல வெசயம் சென்னாரு.

நீ செல்றது சரி. கூப்பன் பொத்தகத்தில உள்ளுக்கு முத்திர மாதிரி ஒண்டு ரெண்டு மூணு ண்ட எலக்கம் போட்டிரிக்கும். கெழமைக்கு ஒருக்கா கூப்பன் கடயில கொண்டு போய் எல்லாக் கூப்பனயும் குடுத்தா ஒவ்வொரு கூப்பன்லயும் ஒரு புள்ளிய வெட்டி எடுத்துக்கிட்டு கூப்பன்கட மெனெச்சரு சாமான் தெருவான். அரிசி பருப்பு கறுத்தச் சீனி பயறு கடலக்கொட்ட மாசி ஆன மார்க்கு நெருப்பொட்டி உடுப்புக் கழுவுற சன்லைட்டுக் கட்டி ப்பிடி தேவயான சாமானுகள் கெடைக்கிம்.

சாமானுகள செரியா நிறுத்துத் தெரயும் மாட்டானுகள். ஒள்ளுப்பம் புடிச்சிக்கிட்டுத்தான் தெருவானுகள்.

கூப்பனுக்குக் கெடைக்கிற பிச்சாட்டரிசிய நம்முட சனம் பெரிசா சாப்பிட மாட்டா. அந்த அரிசிய வேணாண்டு செல்லிப் போட்டு அதுக்குப் பதிலா வேற சாமானுகள வாங்குவாக.

போடியாரு இதுகளச் செல்லி முடிச்சிட்டு ன்னொரு வெசயமும் சென்னாரு. கூப்பன் பொத்தகத்த வெச்சி கொஞ்சப் பேரு காசி ஒழச்சானுகள். கூப்பன்கட மெனச்சர்மாரு ஊர்ல பெரிய பணக்காரனெண்டு ஒலாத்தினானுகள். எல்லாம் ஏழச் சனத்திரயச் சொரண்டி குறுக்கு வழியால ஒழச்ச பணம். நெல்லாரிக்க மாட்டானுகள்.

ன்னொரு கதயும் இரிக்கிண்டு புளியர்ர மகன் சென்னான்.

செல பொம்புளயள் கூப்பன் புடிப்பாக. கூப்பன் புடிக்கிறெண்டா ஏழச் சனங்களுக்கிட்டருந்து கூப்பன் பொத்தகத்த மொத்தமா வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கூப்பனுக்கும் கொஞ்சம் கொறச்சிக் காசி குடுப்பாக. பொறகு கூப்பன் புள்ளிய வெட்டி ஒட்டி மெனச்சருக்கிட்டக் குடுத்து லாவம் வெச்சிக் காசி வாங்குவாக. ல்லாட்டி சாமான வாங்கி அத யாவாரிமாருக்குக் குடுத்து காசி ஒழப்பாக. கூப்பன் புடிச்சி அஞ்சி கொமரக் கரயேத்தின கதயும் இரிக்கி.

கூப்பன் கதய உடு என்னயோ கதைக்கிற வெசயம் இரிக்கிண்டு சென்னாய்லா. என்னெண்டு செல்லன்.

போடியாரு ஆவலோட கேட்டாரு.

ஒண்டுமில்ல போடியார். ஒங்களுக்கும் சமுத்தி முத்திர கெடைக்கிதாம். போடியாருக்கு என்னடா சமுத்தி ண்டு ஊருக்குள்ள அரசல் பொரசலா ஒரு கத இரிக்கி. ஊரான் ஒங்களுக்கு ஏசுறான். சமுத்திக் கத மெய்யாண்டு கேக்கத்தான் வந்தனான்.

கதச்சி முடியிர நேரமாப் பாத்து அவன்ட பக்கட்டுக்க இருந்து போண் மணியடிச்சிச்சி. காதுக்க போண வெச்சிக்கிட்டு கதச்சிக் கதச்சி வெளிய போனவன் கேத்தடிய நிண்டு போடியார் நான் அவிசிரமாப் போகணும்.பொறகு ஒரு நாளக்கி வாறனெண்டு செல்லிக்கிட்டு எங்கயோ பறந்து போறான். சாலுவய ஒதறி தோள்ள போட்ட போடியாரு யாரயோ சந்திக்கக் கௌம்புறாரு.

வாசல்ல படுத்துக் கெடந்த கறுத்தப் பூன தலய ஒசத்திப் பாக்குது.

ஞானம் ஒகஸ்ட் 2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிக் கெழவி

**தொ**ழில்ல இருந்து அவரு வெலகி பென்சன் எடுத்து செரியா ஆறு மாசம். பொலபொலெண்டு பொழுது விடியக் கொள்ள எழும்பி வாயக் கொப்பிளிச்சி தேத்தண்ணிய குடிக்கிறதோட அவர்ர அண்டய வேலவெட்டி தோங்கிரும். பால்காரன் வந்து கூப்பிட்டோடன ஓடிப்போய் போத்தலக் குடுத்து பால் வாங்குவாரு. போத்தல ஒசத்திப் பாப்பாரு. ஒருநூல் தடிப்புல பால் கொறஞ்சாலும் கேட்டு வாங்காம உடமாட்டாரு. நறுவிசான மனுசன்.

அப்படிப்பட்ட மனுசன்ட மனசில ப்ப ஒரு கவல. ஆறுமாசமா ஒருநாளும் உடாம நாட்டு மரக்கறி எடுத்துக்கிட்டு ஊட்ட வாற மரக்கறிக் கெழவி அஞ்சாறு நாளா வெரல்ல. என்னமோ எவடமோண்டு யோசிக்காரு.

பஸ்ஸில்லெண்டு ஒருநாள் வெரல்ல. மறுகா ஆரோ காலஞ்செண்டெண்டு ன்னொரு நாள் வெரல்ல. மத்தும்படி ஒவ்வொரு நாளும் வந்த மனுசி. ப்ப அஞ்சாறு நாளா வெரல்ல. அது அவர்ர மனசப் போட்டுக் கொடயுது. வேறொண்டுமில்ல.

அவர்ர புள்ளகளும் பொஞ்சாதியும் பள்ளிக்குப் பொய்த்திருங்கள். ஊட்டுல அவரு தனிய. அவருதான் குசினிக்குள்ள போய் சொளக எடுத்துக்கிட்டு வந்து வெறாந்தயில வெச்சி மரக்கறி, லெக்கறி சாமானுகள வாங்குவாரு. சனி ஞாயித்துக்கெழமயெண்டா அவர்ர பொஞ்சாதியும் வந்து நிண்டு தேவயானத வாங்குவா. அவவும் மரக்கறிக் கெழவி வெரல்லெண்டு கவலப்பட்டாவாம்.

மரக்கறிகள ஒரு பெரிய பயள பேக்கில போட்டு தலயில செமந்துக்கிட்டு ஒரு கையால அத புடிச்ச மாதிரி மத்தக் கைல சின்ன பேக்க தூக்கிட்டு கெழவி வெருவா.

பெரிய பேக்குக்குள்ள பொன்னாங்காணி லெக்கறிய அரவாசிக்கு அடஞ்சிருப்பா. காக்கிலோ பயத்தங்காவ நடுவால மடிச்சி வாழ நாரால கட்டின கட்டு ஒண்டுரெண்டும் கீரக்கட்டு நாலஞ்சும் பீக்கங்காயும் அந்த பேக்குக்குள்ள கெடக்கும். செலநேரத்தில வாழப்பூவும் இரிக்கும்.

கைபேக்குக்குள்ள கத்தரிக்கா பாதிச் செரக்கா, வெண்டிக்கா, பாவக்கா இரிக்கும். அகத்திக் கீரயும் முருங்கக்கா கட்டும் இரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு மூண்டு துண்டா ஒடச்ச மாதிரி பொடலங்கா கெடக்கும். நசியாம பத்திரமா தக்காளிக்கா கொஞ்சம் ஒரு பேக்கிலயும் ரெண்டு மூணு புடி மணியவர வேறொரு பேக்கிலயும் இரிக்கும்.

ஊட்டயும் தோட்டம் போட்டு அஞ்சாறு மரக்கறி வெச்சிரிக்காவாம். மத்த மரக்கறிகள ஊருக்குள்ள போய் வாங்கி வாறயாம். மாம்பாஞ்சான், முல்ல, முசுட்ட, குறிஞ்சாபோல லெக்கறிகள கெடச்ச நாள்ள மட்டும் கொண்டருவா.

மொடக்கொத்தான் துண்டொண்ட வேலியோரத்தில பதிச்சிங்கண்டா கெதியா வேலில படரும். கை காலுகள் தூக்கொண்ணாத மாதிரி இருக்கிறதுக்கெல்லாம் அதக் கறியாக்கிச் சாப்பிட்டா நல்லமெண்டு செல்லுவா. சளிய வெட்றதுக்கு தூதுவள நல்லதாம். ப்பிடியெல்லாம் அவ சென்னது அவருக்கு நெனப்பு வந்திச்சி.

வல்லாரய அரிஞ்சி சின்னவெங்காயத்த பொடிப் பொடியா நறுக்கி பச்ச கொச்சிக்காய நீளப்பாட்டில கீறி எலுமிச்சம் சாற கொஞ்சம் சுள்ளுண்டாப்போல ஊத்தி மாசித் தூளயும் போட்டு கையால பெரட்டி எடுத்தா சாப்பாட்ட ஒரு புடி புடிக்கலாமெண்டவ. சின்னப் புள்ளயள் வல்லார சாப்பிட்டா நெல்லாப் படிப்பு வெருமாம். ஞாபக சத்தி கூடுமாம் ண்டெல்லாம் அவ சென்னது அவருக்கு ஞாபகத்தில இரிக்கி.

கல்லாத்துக் கூனி ஒரு டப்பாக்குள்ள கொண்டருவா. கூனி போட்ட தெராய்ச் சுண்டல் ல்லெண்ட மாதிரி ருசியா இரிக்குமாம். மச்சம் மாமிசம் போட்டு முருங்க லெக்கறியச் சுண்டினா ஒரு வாய்ச் சோறு கூடயாப் புடிக்குமாம் ண்டெல்லாம் அவட அநுபவத்தக் கதப்பா.

அவரு சந்தயில மரக்கறி வாங்கினா கரட்டு, லீசி, கோவா, நோக்கூழ் ண்டு தேவயப் பொறுத்து தெரிஞ்சி பாத்து வாங்குவாரு. மஞ்சள் போஞ்சியக் காட்டிலும் பச்ச போஞ்சி நெல்லதாம். வீட்ருட்டுக் கெழங்கும் வாங்குவாரு.

செவப்பு நெறத்தில தோல் உரிஞ்சி வாற நுவரெலியா உருளக்கெழங்குதான் ருசி. எறச்சியோடக் கலந்து தாளிச்சி எறக்கினா நாலூட்டுக்கங்கால மணக்குமெண்டு வாயூறவெச்ச மனுசிய காணாம எப்பிடி இரிக்கிற.?

கடல்ல சாளமீன் படுகுது. வாங்கினா பாலாணம் காச்சலாம். புளி தேவப்படும். எலிமிச்சம் பழம் ப்ப செரியான வெல. அதான் விளிமாங்கா கொண்டந்த. விளிமாங்கா அஞ்சி ரூவாக்கித் தெரயா மன ண்டு கேப்பா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெராக்கருவாடு, காஞ்செறச்சி, தாமரக் கொட்ட, வத்தாளக் கெழங்கு என்னயும் வேணுமெண்டு கேட்டா வாங்கிட்டு வந்து தெருவா. ஒருநாள் நாடங்கா சாப்பிட சோட்டயா இரிக்கிண்டு சும்மா வாயத் தொறக்கயும் அடுத்தநாள் விடிய நாடங்காயோட மனுசி வந்தா. அவவக் காணெல்லெண்டா எப்பிடி இரிக்கும் அந்த மனுசனுக்கு?

முருங்கத் தடியொண்ட ஒருநாள் கொண்டந்து யாழ்ப்பாண முருங்க. நெல்லா காய்க்கும். ருசியும் ருசிதான். எங்கிட ஊட்டயும் ஒரு மரம் நிக்கி. மாத்தக்கி எப்பிடியும் ரெண்டாயிரம் மூவாயிரம் ரூவாய்க்கு மேலால காய்க்குமெண்டு வெளக்கம் தந்திட்டு முருங்கத் தடிய வாசல்ல முன்னுக்கு நாட்டாம ஊட்டுக்குப் பின்னால கோடிக்க ஒரு எடத்தில நாட்டுங்க ண்டா. மரம் முழுக்க மசுக்கொட்டிப் புழு. புள்ளகள் ஏறி வெளயாடினா லேசா முறிஞ்சிரும். அதாலதான் வாசல்ல முருங்க நாட்டப் பொடாண்டது. அது பொறகுதான் அவருக்கு வெளங்கிச்சி.

சனி ஞாயித்துக்கெழமகள்ள அவர்ர டீச்சர் மனுசி ஊட்டுல இரிக்கிறதால கெழவி மனுசி யாவாரம் முடிஞ்ச கையோட அங்க வந்து வெத்திலாக்குப் போட்டுக்கிட்டுப் போறதும் சந்தோசமா அவர்ர மனுசியோட அவ கதச்சிக்கிருக் கிறதும் அவருக்கு மறக்கேலா.

மரக்கறி வெசயத்தயெல்லாம் ஒருபக்கம் வெச்சிப் போட்டு சாப்பாட்டுக்கு புட்டு அவிக்கிறதப் பத்தியெல்லாம் அவர்ர மனுசியோட கதப்பா

அரிசி மாவ இரும்புச் சட்டில போட்டு அடிப்புடிக்காம பதமா வறுக்கணும். மாவு பவுண் நெறத்துக்கு வாற மாதிரித் தெரியும். நெல்லொரு மணமும் மூக்கில வெளங்கும். அன்னேரமாப் பாத்து மாவ சொளகில கொட்டி பரத்தி உடணும். புட்டுர ருசி மாவு வறுத்தெடுக்கிற பதத்திலதான் இரிக்கி ண்டெல்லாம் டீச்சருக்கு வெளக்கம் குடுப்பா.

ப்பிடி பழய நெனப்பெல்லாம் படம் மாதிரி அவர்ர மனசுக்குள்ள ஓடிச்சி.

அன்னேரம் கேத்தில ஆரோ கூப்பிட்டாக. போய்ப் பாத்தாரு. மரக்கறிச் செமயோட ஒரு பொம்புள நிக்கிறா. அவருக்கு மனசுக்குள்ள பல பல யோசின வந்திச்சி. உள்ள கூப்பிட்டாரு.

அவட மொகத்த நெல்லாப் பாத்தாரு. மரக்கறிக் கெழவிட மகள். கெழவிய உரிச்சி வெச்சாப் போல இருந்தா. சிரிச்சாப்போல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மொகம். கொஞ்சம் தூக்கலா வெள்ள நெறம். நாப்பத்தஞ்சி நாப்பத்தாறு வயசிரிக்கும். ஒடம்புல வயசி காட்டல்ல. ரெண்டு பொம்புளப்புள்ளகளும் இரிக்கிண்டு தாய்க்காரி சென்னவ. அப்பம், இடியப்பம் சுட்டு வித்து அடுப்படில நெருப்புக்க கெடந்து வேகாம ஊட்டுத் தோட்டம் செஞ்சி யாவாரம் பண்ணலாமெண்டு புரிசன் கண்ண மூடின பொறகு தாய்க்குச் சென்னவவாம். ப்ப கெழவிட வாரிசு மாதிரி வந்து மரக்கறிச் செமயோட நிக்கிறா.

அவருக்கு மனசு கொஞ்சம் கைட்டமா இருந்திச்சி.

அவ சென்னா. தாய்க்காரிக்கி மொட்டசயிக்கல் அடிச்சி காலொண்டு ஒடஞ்ச மாதிரி. முறிவு வைத்தியருக்கிட்ட பத்துப் போட்டுக்கிட்டு வந்து ஊட்டுல இரிக்கா. நெலம செரியாக எப்பிடியும் ரெண்டு மாசமாவது போகும். பொல்லில புடிச்சிக்கிட்டு நடக்கிற நெலமதான் தெரியிது ண்டு சென்னா.

விரும்பின மரக்கறி ரெண்ட வாங்கினாரு. ஊட்டயும் ஒருத்தரும் ல்ல. என்ன அவிசிரம். தண்ணியக் கிண்ணிய குடிச்சிட்டுப் போங்கண்டு சென்னாரு. சில்லறக் காசில்ல. இத வெச்சிக்கிங்க. மிச்சம் வேணாம் ண்டாரு. அவ ன்னொரு மரக்கறியக் குடுத்துக் கணக்கச் செரி செஞ்சா. செமயத் தூக்கிட்டு வெளிக்கிட்டா.

ரோட்டால போற வழில என்னடா மரக்கறிக் கெழவியக் காணல்ல. அவட இளந்தாரிய அனுப்பிரிக்கா ண்டு ஒரு வளிசல் சத்தம் போட்டது அவட காதுக்க வந்து ஏறுது. ன்னம் கொஞ்சம் தூரம் போனோடன ஆம்புள ல்லப் போல. நம்மள்ள ஒண்டக் கட்டிக்கிட்டு ஊட்ட இருந்திரிக்கலாம் ண்ட சத்தம் கேட்டிச்சி.

புரிசன் ல்லாத கன்பொஞ்சாதி. ரெண்டு கொமரு இரிக்கி. மூணு உசிரு சாப்புடனும். நான் வெட்டல வந்து தொழில் செய்யாட்டி சோறு தண்ணி தாற ஆரு ண்டெல்லாம் மனசுக்க நெனச்சிக்கிட்டு கைல இருந்த மரக்கறிகள வித்துப் போட்டு அவ ஊருக்கு திரும்பிப் போறா.

ரோட்டுல நிக்கிற ஆம்புளயள்ர கதயக் கேட்டா ஏழச்சனங்கள் வாழ ஏலா ண்டத காட்ரதுக்கு நாளக்கி மரக்கறிச் செமயோட அவ கட்டாயம் வருவா.

ஞானம் ஆகஸ்ட் 2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொண்டுகச் சட்டி

"மையறுக் கெழங்கு போட்டு மாட்டெறச்சி ஆக்கிறன். பகலைக்கி சாப்பிட வா. மறந்திராத"

மம்மவக்கனுக்கிட்ட ஆதம்காக்காவண்டி சென்னா.

அவட ஊட்ட அவன் கனக்கத் தெரம் சாப்பிட்டு இரிக்கான்.

"பாப்பம் வசதிண்டா வருவன்"

செல்லிட்டுப் போனான் .

ன்னம் அவன் சாப்பிட வெரல்ல.

மம்மவக்கன் ப்ப கொஞ்சம் வாற கொறச்சல். சாப்பிடக் கூப்பிட்டாலும் வாரெல்ல .ஏனெண்டு தெரியா.

ஆரு ந்த மம்மவக்கன்?

பள்ளில படிக்கிற காலத்தில வகுப்பு சேர் டாப்பு கூப்பிடக்கொள்ள முகம்மது அபூபக்கர் ண்டு பேர் கூப்பிடுவாரு. ஆனா புள்ளகள் அவன அவக்கன் ண்டுதான் கூப்பிர்ர. ஊரக்குள்ள மம்மவக்கன் ண்டாதான் தெரியும்.

மம்மவக்கன்ட குடும்பம் சின்னதா பெரிசா ண்டு செல்ல ஏலா. நடுத்தரம். அஞ்சி புள்ளகள். மூத்ததுகள் ரெண்டும் ஆம்புளப் புள்ள. படிச்சி பாசி பண்ணி தொழில் செய்யிதுகள். மம்மவக்கன் மூணாங்கால். நாலாவதா ஒரு கொமரு. கடசிப் புள்ளக்கி பன்னென்டு முடிஞ்சி

வாப்பாட ஒழப்பும் புள்ளகள்ர ஒழப்பும் ஒரு மாதிரியா குடும்பம் ஓட ஒதவுது.

மம்மவக்கன் பதினஞ்சி வயசி எளந்தாரி. ஆனா பொம்புளப்புள்ள மாதிரி குசினி வேலயில ம்மாக்கு நெல்லா ஒதவி செய்வான். அரிசி அரிக்க தண்ணி அள்ளி குடுப்பான். பிங்கான் கோப்ப கழுவிக் குடுப்பான். பச்ச கொச்சிக்காட காம்ப நோண்டி வெங்காயத்த உரிச்சி கழுவிக் குடுப்பான்.

அவன்ட தங்கச்சிமாரும் அப்பிடி ம்மாக்கு ஒதவி செய்யமாட்டாக.

"நீ ஆம்புளப் புள்ளலா. குசினிக்க வந்து கெடக்கிறென்ன.அந்த வேலகள நான் செய்வன்.நீ அங்கால போ"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்மா எத்தின தெரம் சென்னாலும் போக மாட்டான். அல்லயல்ல இரிக்கிற ஊடுகளுக்குப் போய் பொம்புளகளுக்கு ஒதவி செய்வான்.ஈக்கிக் கட்ட எடுத்து வாசல கூட்டுவான். படிக்கம் கழுவி கொடுப்பான்.பொம்புள புள்ளகளோட சேந்து சந்தோசமா கதச்சிக்கிரிப்பான்.

மம்மவக்கன் பள்ளில படிக்கிற காலத்தில பொம்புள வேசம் போட்டு நாடகம் நடிச்ச. இந்தியாவுல பெரிய படிப்பு படிச்சிட்டு வந்த சேர்தான் நாடகம் பழக்கின. நாடகத்துக்குப் பொறகு கூட்டாளிமாரு அவன பொண்டுகச் சட்டி ண்டு பட்டம் செல்லிக் கூப்பிடத் தொடங் கிட்டானுகள். அதால படிப்ப எடயில உட்டுட்டான்.

அவன்ட சேர் அவனோட நெல்ல விருப்பம். ஊட்ட வந்து படிப்ப உடாத பள்ளிக்கு வா ண்டு கூப்பிட்டாரு. அவன் பள்ளிக்குப் போகல்ல. ஆனா சேர்ர ஊட்ட அடிக்கடி போய் வந்தான்.

ண்டக்கி மம்மவக்கன்ட பொழுது நெல்லா விடியல்ல.

"ப்பிடி பொண்டுகளோட கூடிக்கிட்டு கெடந்தா ஒன்ன ஒருத்தியும் கலியாணம் முடிக்க மாட்டாளுகள்"

அவனப் பாத்து வாப்பா ஏசினாரு.

மொகத்த தொங்க போட்டுக்கு இருந்தான். பொறகு எழும்பி வெளிய போனான்.

அசறுக்கு வாங்கு பறிஞ்சிட்டு. ன்னம் அவன் ஊட்ட சாப்புட வெரல்ல. வழமயா அவன்ட பொழுது ஆதம்காக்காட பொம்புள புள்ளகளோடதான் கழியிற. தாய்க்காரி அங்க போய் வெசாரிச்சா.

"அவன பகலைக்கி சாப்புடக் கூப்பிட்டன்.ன்னம் சாப்புட வெரல்ல"

ஆதம்காக்காவண்டி கவலையோட பதில் சென்னா.

பதிலக் கேட்டு தாய் திரும்பி ஊட்ட போனா

அவ போனதுக்குப் பொறகு ஆதம்காக்காவண்டிக்கும் யோசின.

அவன் வந்தது பழகினது எல்லாம் அவட மனசுக்க கெடக்கு. அதுகள ஆதம் காக்காவண்டி நெனச்சிப் பாத்தா.

செவக்கிற மாதிரி வாய்நெறய வெத்திலாக்கு போடுவான். துப்பினா பொம்புளகளும் தோத்துப் போவாக. படிக்கத்துக்கு வெளியால ஒரு துளியும் பறக்க மாட்டா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவட பொம்புள புள்ளகளோட சின்ன வயசில கல்லுச் சொட்டி வெளயாடினது. சில்லிக்கோடு தெத்தினது. தலையில பேன் பாத்தது. இதெல்லாம் அவக்கு நெனப்பு வந்திச்சு

அவட ரெண்டு பொம்புளப் புள்ளகள் புசுபுசு ண்டு வளந்திட்டுதுகள். அதால அதுகள் பெரிசா பழகுற கொறய.

செல நேரத்தில அவக்கு குசினி வேலகள செஞ்சி குடுத்தது. பழகினது. குசினிக்க இருந்து சாப்பிட்டது எல்லாம் அவக்கு நெனப்புல வந்திச்சி

காலத்தால வந்து ம்மா கேட்ட ண்டு செல்லி அவக்கிட்ட ஆயிரம் ரூவா காசி கடனுக்கு வாங்கிட்டுப் போனவன்.எங்க போனானோ?

சொந்தப் புள்ளய தொலச்ச மாதிரி அவ கவலப்பட்டா.

தாய்க்காரி மம்மவக்கன தேடிக்கிட்டே இருந்தா.கடசி மகள அனுப்பி அல்லயல்ல போய் பாக்கச் சென்னா. ஒரு எடத்துலயும் மம்மவக்கன் ல்ல. ஊட்டுல எல்லாருக்கும் பயமும் கவலயும் புடிச்சிட்டு.

அவனுக்குள்ள ஏதோ ஒரு வெசயம் கொடஞ்சி கொடஞ்சி இருக்கிறது கிட்டத்துலதான் ம்மாக்காரிக்கு வெளங்கிச்சி

அவன்ட நடவடிக்ககள தாய்க்காரி மனசுக்குள்ள எடுத்து நெனச்சிப் பாக்கா.

தங்கச்சிர உடுப்ப போட்டு கண்ணாடில பாக்கிர. அவட பொடவய எடுத்து உடுத்துப் பாக்கிற.

அவன்ட மொகத்துல தாடி மீச மொளைக்கிற சாட தெரியயும் ல்ல. ஆம்புளப் புள்ள எளந்தாரியானா கொரல்வள முறியிர. அதுவும் ல்ல.

இதுகளெல்லாம் அவட மனசுக்க வந்திச்சி.

செல ஊட்டுல அவன இனி வரப்பொடா ண்டு தெரத்தினயாம். அதால அவன் கவலயோட இருந்ததும் அவக்கு நெனப்பு வந்திச்சி.

கொஞ்ச நாளக்கி முந்தி வகுத்து வலி ண்டு மம்மவக்கன அவ டாக்குத்தருக்கிட்ட கூட்டிக்கிப் போன. போன மாசமும் ஒருக்கா வகுத்துவலிக்கு மருந்து எடுத்தலா ண்டு டாக்குத்தரு கேட்டுட்டு அவவயும் நேசிப் பொம்புளய யும் வெளியே போகச் செல்லி மம்மவக்கன தனிய சோதிச்சாரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதப்பத்தி மகனுக்கிட்ட வெளக்கம் கேட்டா அவன் சிரிச்சி மழுப்பி வேற என்னவெல்லாமோ சென்னயாம்.

ஒவ்வொண்டா அதயெல்லாம் நெனச்சிப் பாத்தா.

முந்தானயால மொகத்தத் தொடச்சா.

மம்மவக்கன் எங்க போனானெண்டு ஆருக்கும் தெரியா.

"துபாய்க்கு வேலைக்கு போக ஒழுங்கு பண்ணி இருக்கன். எல்லாத்தயும் ஆறுதலாக கதைப்பன்"

ரெண்டு நாள் கழிச்சி தங்கச்சிக்கிட்ட போன்ல மம்மவக்கன் சென்னான்..

அதுக்குப் பொறகுதான் ஊடு நிம்மதியா இருந்திச்சி.

ரெண்டு மாசத்துக் கொருக்கா போண்ல மம்மவக்கன் கதைக்கிறதால கவல ல்லாத மாதிரி தெரிஞ்சிச்சி.

காலம் ஓடிச்சி. மூணு வரிசம் பொய்த்து. ப்பன்டாப் போல இரிக்கி.

அவனுக்கிட்ட இருந்து காசி வெரத் தொடங்கிச்சி.

"நான் துபாய்க்குப் போன ண்டு சும்மா ஒளிச்சி சென்ன. இப்ப இந்தியாவுல தான் இரிக்கன்"

"நான் நெல்லாரிக்கன்.காசி அடிக்கடி அனுப்புவன். அவிசிரமா காசி தேவப்பட்டா செல்லுங்க"

"தங்கச்சிர கலியாணத்த கெதியா பாத்து முடிங்க"

"கெதில ஊருக்கு வருவன்"

ப்பிடி போன்ல இருந்திருந்து அவன்ட வெசயம் வெரும்.

அஞ்சாறு வருசத்தில அவன்ட ஊட்டுப் பெரச்சினயெல்லாம் முடிஞ்சி.

போன கெழமதான் கடசிப் புள்ளட கலியாணமும் நடந்து முடிஞ்ச.

அவன்ட கடசி தங்கச்சிய கலியாணம் முடிச்ச புது மாப்பிள பெரிய டீவி பூட்டிரிக்காரு ஊடு கலகலப்பா இருக்கி.

பொண்ணும் மாப்புளயும் டீவி பாத்துக் கிட்டு இரிக்காக.

டீவில ஒரு பொம்பள கேள்வி கேக்கா. அதுக்கு தலயில மொக்காடு போட்ட நடிக துசாரா பதில் செல்ரா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாளொரு திருநங்க. ஸ்ரீலங்காவுல இருந்து வந்து சிக்ஸ் யியர்ஸ் ஆகுது.

மொதல் ரெண்டு வரிசம் பெரச்சின. அப்புறம் சினிமா சான்ஸ் கெடச்சி திருநங்க கரெக்டர்ல நடிச்சேன். படம் ஹிட்டு.தொடந்து சினிமா சான்சு கிடச்சது.இப்ப வெரி பிசி"

டீவிய பாத்த மம்மவக்கன்ட கடசித் தங்கச்சி ம்மாவக் கூப்புட்டு அந்த நடிகய பாக்கச் சென்னா.

மம்மவக்கன்ட சாங்கம்.அதே மொகம். ஆனா பொம்புள. ஒடம்பெல்லாம் ரோசாப்பூ மாதிரி. பளபளண்ட பொடவ. வடிவா கதைக்கா.

"ஸ்ரீலங்கா போற ஐடியா இரிக்கா"

மத்தக் கேள்வி.

மொக்காட செரி செஞ்சிக்கிட்டு நடிக துசாரா பதில் சென்னா.

"லாஸ்டு வீக்கிலதான் ஏன்ட கடசி சிஸ்டர்ர வெடிங் நடந்த. நான் இங்க சூட்டிங்ல பிசியா இருந்ததால ஸ்ரீலங்கா போகல்ல. ஆப்ர சிக்ஸ் யியர்ஸ் டே ஆப்ர ருமோரோ ஸ்ரீலங்கா போறன்"

நடிக துசாராட பதிலக் கேட்டு மம்மவக்கன்ட ஊடு பரபரப்பாகுது.

ம்மாக்காரிட கண்ணால தண்ணி வெருகுது.

அன்னேரம் மம்மவக்கனுக்கு பள்ளில நாடகம் பழக்கின சேர் வகுத்து வலிக்கு மருத்து குடுத்த டாக்குத்தரு ரெண்டுபேரும் காரில இருந்து எறங்கி மம்மவக்கன்ட ஊட்ட வாராக.

மம்மவக்கன துசாராவாப் பாக்க காத்துக் கெடக்குது அவன்ட குடும்பம்.

ஞானம் நவம்பர் 2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளப் பூச்சி

பள்ளிக்குப் போகமாட்டனெண்டு அவ ஒத்தக் கால்ல நிண்டா. அவவ பள்ளில புள்ளப்பூச்சி ண்டு பட்டம் செல்லிக் கூப்பிர்ராங்களாம். ஆரு என்ன செல்லியும் அவ கேக்கல்ல. படிச்சி பெரியாளாகினாத்தான் என்னென்டான தொழில கிழில எடுக்கலாமெண்டு தாய்க்காரி புத்திமதியச் சென்னாலும் அவக்கு மண்டைக்க ஏறெல்ல.

பாத்தும்மா ராசியா. பன்னெண்டு வயசி. ஏழாம் வகுப்பு படிக்கா. கெட்டிக்காரி. செரியான புடிவாதம். அவவத்தான் பள்ளில புள்ளப்பூச்சி ண்டு கூப்பிர்ராங்களாம்

அவவ ஏன் பள்ளிக் கொடத்தில புள்ளப்பூச்சிண்டு பட்டம் செல்லிக் கூப்பிர்ராக.

பள்ளிக் கொடத்திலயும்செரி ஊரிலயும்செரி சும்மா பட்டம் வெய்க்கிறெல்ல. அதுக்குப் பின்னால என்னென்டான ஒரு கத இல்லாட்டி காரணம் இரிக்கிம். புள்ளப்பூச்சி ங்கிற ராசியாட பட்டத்துக்குப் பின்னால என்ன இரிக்கிம். அத தெரிஞ்சிக்க என்னோட வாங்க.

புள்ளப்பூச்சி ண்ட பட்டப் பேரு அவக்கு வந்த கதய வெளங்கிற ண்டா புள்ளப்பூச்சியப் பத்தியும் கொஞ்சம் தெரியனும். அதப்பத்தி மொதல்ல செல்ரன் கேளுங்க.

புள்ளப்பூச்சி ப்ப பெரிசா ல்ல. அத லேசில காண ஏலா. ஆருத்துப் பொய்த்து. செல எடத்தில ஒண்டு ரெண்டு பூச்சிய பாக்கலாமெண்டு கேள்வி.

எண்ணெயும் மருந்தும் அடிச்சி அடிச்சி நெலத்தில இரிக்கிற மண்ணெல்லாம் நஞ்சாப் பொய்த்து. மண்ணுல வாழ்ர சின்னச் சின்ன பெராணிகளுக்கு அது ஒத்துக்க மாட்டா. அதால நெலத்தில வாழ்ர பூச்சி புழுக்கள் ப்ப கொஞ்சம் கொஞ்சமா ஒலகத்தில இருந்து மறஞ்சி போற நெலமதான் இரிக்கி. புள்ளப்பூச்சி எனமும் அழிஞ்சிக்கிட்டு வாற எனம் ண்டு படிச்சாக்கள் கதைக்காக. நம்முட தலமொற போய் ன்னொரு தலமொற வந்தா புள்ளப்பூச்சிய படத்தால கீறித்தான் காட்டணுமாம்.

புள்ளப்பூச்சி சின்னொரு பெராணி. நெலத்தத் தொளச்சி ஓட்ட போட்டு அதுக்கு உள்ளுக்குப் போய் வேரில இரிக்கிற தீன திண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவயான காத்து வெளிச்சத்த வேருக்குக் குடுக்கிற பூச்சிதான் இது. ஆருக்கும் தொல்ல தரமாட்டா.

ன்னங் கேளுங்க. புள்ளப்பூச்சியப் பத்தி காலங்காலமா கதச்சி வாற கனக்கக் கதைகள் இரிக்கி.

அந்தப் பூச்சிய அடிக்கிற பாவம். அப்பிடி அடிச்சா குடும்பத்தில புள்ள பொறக்க மாட்டா ண்டு செல்ர கத கனகாலமா இரிக்கி.

ன்னொரு கதயும் இரிக்கி. புள்ளப்பூச்சியப் புடிச்சி மல்லாக்கப் பெரட்டிப் போட்டா கால அசச்சி அசச்சி நம்மளப் பாக்கும். ஒண்டும் செய்யாம உசிரோட அத உடச் செல்ர மாதிரி இரிக்கும். பாக்கிறதுக்குப் பெரிய மனத்தாவமா இரிக்கும்.

நானும் புள்ளப்பூச்சிய பெரட்டிப் போட்டு மெய்யாண்டு பாத்திரிக்கன். ஒரு கொழந்தப்புள்ள மல்லாக்கப் படுத்துக்கிட்டு தாயக் கண்டு கொளறிக் கொளறி கையயும் காலயும் ஆட்டி ஆட்டி கத்துறாப் போல இரிக்கும். அதாலதான் அதுக்கு புள்ளப்பூச்சி ண்டு பேரு வந்தயாம்.

புள்ளப்பூச்சியப் பத்தி ன்னொரு கதயும் நான் கேள்விப்பட்டன். பொய் மெய் தெரியா. அந்தக் காலத்தில பொலிசிக்காரனுகள் கள்ளன் காவாலியப் புடிச்சா கூட்டுக்குள்ள போட்டு அவன்ட சேட்டக் களட்டுவானுகள்.பொறகு வெறும் ஒடம்பில பொக்கணிக்கு மேல புள்ளப்பூச்சிய மேய உட்டு ஒரு ஏனத்தால மூடிருவானுகளாம். புள்ளப்பூச்சி வெட்டல போக வழி ல்லாம அவன்ட மேல்ல அசெஞ்சி அசெஞ்சி காலால பொக்கணியச் சொரண்டுமாம். அது தாங்க ஏலாம கள்ளனுகள் ஒண்டயும் மறைக்காம நடந்ததச் செல்லிருவானுகளாம். ஆருக்குத் தெரியும் அப்பிடியும் நடந்திருக்கலாம்.

ராசியா கெட்டிக்காரி ங்கிறதால பள்ளிக் கொடத்தில எல்லாரும் அவள ஆரு ண்டு வெசாரிச்சி புள்ளப்பூச்சிர பேத்தி ண்டு வெளங்கிருப்பாக. ஊருக்குள்ளயும் புள்ளப்பூச்சிர பேத்தி ண்டுதான் தெரியும். அதால அவவ புள்ளப்பூச்சி ண்டு பள்ளிக் கொடத்தில கூப்பிர்ர

அதுசரி ஒவ்வொரு பட்டப் பேருக்கும் பின்னால ஒரு கத இரிக்கும் ண்டு சென்னலா. ராசியாட மூத்தப்பாட பட்டம் புள்ளப் பூச்சியெண்டு பேரு வந்த வரலாற ப்ப பாப்பம்.

புள்ளப்பூச்சி ங்கிற பட்டப் பேரு வாறதுக்கு முந்தி அவர அப்புராணியாத்தான் ஆக்களுக்குத் தெரியும். ஊருக்குள்ள ஆரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன ஒதவி கேட்டாலும் செஞ்சி குடுப்பாரு. கடைக்கிப் போற சந்தைக்கிப் போய் கறிபுளி வாங்கிக் குடுக்கிற. சொந்தக்கார ஆக்களுக்கும் நெல்லா ஒதவுவாரு. ஒருத்தரோடயும் சண்ட மண்ட சச்சரவு ஒண்டுக்கும் போகமாட்டாரு. நெல்ல மனுசன்.அப்பாவி.

ஒரு நாள் அவரு சொந்தக்கார ஆள்ர ஊட்டுக்கு பகல் சாப்பாட்டுக்குப் போனவரு. அங்க வேலவெட்டிகள செஞ்சி குடுத்திட்டு சாப்பாடு முடிஞ்சி திரும்பி வெரக் கொள்ள ரோட்டோரத்தில இருந்த வேலில இருந்து ஈக்கில் துண்டொண்ட முறிச்சி பல்லுக் குத்தினாரு.

அன்னேரம் வேலில ஈக்கில் முறிக்கிறதக் கண்ட ஊட்டுக்காரன் ஓடியந்து ஈக்கில் முறிச்ச ண்டு செல்லி அவனப் போட்டு வாரக்கட்டுப் பொல்லால அடிச்சான். கேக்கப் பாக்க ஆளில்லாத அப்பாவி மனுசன் ண்டு தெரிஞ்சிதான் அப்படிப் போட்டு அவன அடிச்ச. சத்தங் கேட்டு கூடின அல்லயல்கார சனங்கள் ஏண்டா அவனப் போட்டு அடிக்காய் ண்டு செல்லியும் அடிக்கிறத உடெல்ல. அவன் ஒரு புள்ளப்பூச்சி.பாவம். அவனப் போட்டு அடிக்கியே ண்டு செல்லி ஆக்கள் வெலக்கி உட்டாக.

அண்டயில இருந்து அவனுக்கு புள்ளப்பூச்சிங்கிற பட்டப் பேரு நெலச்சிட்டு. ஊர்ல புள்ளப்பூச்சி ங்கிற பட்டப் பேரால அவரு ஒரு ஆள்தான் இரிக்காரு. ஆரக் கேட்டாலும் புள்ளப்பூச்சி ண்டா அவருதான்.

நம்முட கதயில வாற ராசியாட வாப்பா ஒழவு மிசின் றைவரு. அவரு புள்ளப்பூச்சிர மகளத்தான் கலியாணம் கட்டின. ஊருக்குள்ள அவர புள்ளப் பூச்சிர மருமகன் ண்டாத்தான் ஆக்களுக்குத் தெரியும். அவருக்குப் பொறந்தவதான் பாத்தும்மா ராசியா. புள்ளப்பூச்சிர பேத்தி.

அவ வாப்பாட புத்தியக் கேட்டு நாளக்கி பள்ளிக்கி போறயாம்.

புள்ளப் பூச்சி ஈக்கில முறிச்சத்துக்கு ஒருவன் அடிச்சான்லா. அப்பிடி அடிச்சவன் கடலுக்கு மீன் புடிக்கப் போற. ஒருநாள் ப்பிடித்தான் கடலுக்கு மீன் புடிக்கப் போனவன்.

ண்டு வெரைக்கும் உசிரோட திரும்பி வெரல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளக் கொழுக்கட்ட

உள்ளூட்டுக்க கெடக்கிற கட்டில்ல அவ கெழிஞ்சி படுத்தா. ண்டைக்கி காலத்தால இருந்து வகுறு மப்பும் மந்தாரமுமா இரிக்கிற மாதிரி அவக்கு வெளங்குது.

அவதான் ந்தக் கதயில வாற முக்கியமான ஆள். பேரு தஸ்லீமா. கலியாணம் கட்டி ரெண்டு வரிசம். புரிசன் வெளியூர்ல தொழில். நேத்து வெளிக்கிட்டுப் போனவரு.கெழமைக்கி ஒருக்காத்தான் ஊட்ட வெருவாரு.

அவக்கு ப்ப மாசம்.தலப்புள்ள. நாலு முடிஞ்சி அஞ்சி தோங்கிட்டு. தலப்புள்ளத்தாச்சிமாருக்கு ந்தக் காலம் புள்ளக் கொழுக்கட்டக் காலம் ண்டு ம்மா செல்ரயாம்.

அவட ம்மா கதிசா நாச்சி. பழய காலத்து ஆள். கொள்க ஒண்டும் மாறெல்ல. அவ நொளம்புத் திரி பாவிக்கிற ல்ல. வேப்பம் சருகு, மாட்டுச் சாணம் இதுகளால பொக வெச்சி நொளும்பு கடிக்காம பாத்துக்கு வா. தலயிடி காச்சல் என்னயும் வந்தா சந்தணம் அரச்சிப் பூசுவா. பாட்டா செருப்பு பாவிக்கிறெல்ல. மிரிவடிக்கடடதான். அதுவும் ஓடாவிக்கிட்டக் குடத்து குதி வெச்சி செஞ்சி எடுப்பா. புடிவாதக்கார மனுசி.செரியான கட்டுப்பொட்டி. செல வெசயத்தில புள்ளகள் என்ன சென்னாலும் கேக்க மாட்டா .புள்ளகள் ஒண்டும் அவ மாதிரி ல்ல.

தஸ்லீமா கட்டில்ல கெடந்த தலவாணி ஒண்ட எடுத்து ரெண்டு காலுக்கும் கீழ வெச்சி ன்னொரு தலவாணிய தலைக்கிக் கீழ வெச்சி ஒருக்கணிச்சிப் படுத்தா.

ரெண்டு நாளக்கி முந்தி புள்ளக் கொழுக்கட்ட சுட்டு மாமி ஊட்டுக்கு அனுப்பணும் ண்டு தாய்க்காரி சென்னது தஸ்லீமாக்கு. நெனப்புல வருகுது. இதுமாதிரி கொழுக்கட்ட வெசயமெல்லாம் தஸ்லீமாக்குப் புடிக்கமாட்டா. கொழுக்கட்ட தேவல்ல ண்டு மறுப்புச் சென்னா.

ஒரு பொம்புள கலியாணம் முடிச்சி தாய்ம அடஞ்சாதான் முழு மனுசி. அந்தக் காலத்தில கலியாணம் முடிச்சி மொதல் புள்ள தரிச்சி தாய்ம அடஞ்சிட்டா ண்டத சொந்தக்கார ஆக்களுக்கு தெரியப்படுத்த மாமி ஊட்டுக்கு கொழுக்கட்ட சுட்டு அனுப்புற. மாமி அவட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தக்கார ஆக்களுக்கு கொழுக்கட்டய பகிருவா. அதால வெசயம் தெரியவரும். ப்ப ஆசுவத்திரிக்கி போய் படம் எடுத்து உண்டாகின புள்ள ஆம்புளயா பொம்புளயா ண்டு சனத்துக்கு தெரியிற காலம். கொழுக்கட்ட சுர்ரது தேவல்லாத வேல. ப்ப ஒருத்தரும் புள்ளக் கொழுக்கட்ட செய்றயும் ல்ல. மாமி ஊட்டுக்கு அனுப்புறயும் ல்ல.

மறுப்புக்கு வெளக்கம் சென்னா.

அடுப்படில ஆரவாரமா இரிக்கி.

அவகிட ஊட்ட ஒதவி செய்ய வாற ன்னொரு பொம்புளதான் பாத்தும்மா லாத்தா. அவவும் அடுப்படிக்க இரிக்கிற மாதிரி தெரியுது. புள்ளக் கொழுக்கட்ட சுடத்தான் பாத்தும்மா லாத்தா வந்திரிக்கனும்.

மூணு தேங்கா இரிக்கி.ஒடச்சித் திருகுங்க ண்ட கொரல் தஸ்லீமாக்குக் கேக்குது. எழும்பிக்கிட்டு அடுப்படிக்க வாறா. நடக்கிற வேலகளக் கவனிக்கா.

பாத்துமா லாத்தாட காலடிய மூணு உரிச்ச தேங்கா கெடக்கு. அவ மொதல்ல தேங்காச் செரட்டயில நீட்டிக்கிருந்த தும்பு துணி எல்லாத்தயும் புடுங்கி வெளிசாக்கினா. ரெண்டு உள்ளங்கைக்குள்ளயும் தேங்காய வெச்சி உருட்டி பெரட்டி நெல்லா தேச்சி எடுத்தா. நெல்ல சீருமயான ஆள் போல.

மூணு தேங்காயயும் சொட்டு நேரம் தண்ணில ஊற வெச்சா. பொறகு ஒவ்வொண்டா வெட்டல எடுத்து தேங்காட மூணு கண்ணுலயும் இருந்து

வாற நரம்புல கத்திர கூர்ப் பக்கத்தால மெளளத் தட்டினா. அளந்து வெச்சாப் போல தேங்கா பாதிபாதியா ஒடஞ்சி வந்திச்சி.திருவுலக் குத்தில சாவசமா இருந்து தேங்கா திருவுற படலம் தோங்குது.

அடுப்புல பாசிப்பயறு அவியிது. ரெண்டு பேரும் சேந்து கொழுக்கட்ட அவிக்க ந்த வேலகள செஞ்சிகிட்டு இரிக்காக.

தஸ்லீமா திரும்பப் போய் கட்டில்ல படுத்தா.

பாத்தும்மா லாத்தா திருவின தேங்காப் பூவ ஒரு தண்ணிக் கோப்பைக்க எடுத்து கதிசாநாச்சிர கைல குடுத்தா.

கதிசாநாச்சி அவிச்ச பாசிப்பயறு எல்லாத்தயும் தேங்காப்பூவோட போட்டு சீனியக் கொட்டிக் கலந்து பெனஞ்சி கொழுக்கட்ட பதத்துக்கு எடுத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தவ அரிசி மாவ கொழச்சி பெருவெரல் தடிப்புக்கு மாவுருண்டயா எடுத்து ஒரு கைல வெச்சி தட்டயாக்கி மறுகையால நசிச்சி வட்டமாக்கி குடுத்தா.

கதிசாநாச்சி ஒவ்வொண்டுக்குள்ளயும் பாசிப் பயிறுத் தொவயல வெச்சி பாதியா மடிச்சி ஓரத்த ஒட்ட வெச்சி ஒத்த வெரலால நசிக்கி பல்லுப் பல்லா எணக்கி கொழுக்கட்ட செஞ்சா.

தஸ்லீமா கஸ்ட்டப்பட்டு எழும்பி அடுப்படிக்க வந்து கதவு நெலயில சாஞ்சி பாத்துக்கிட்டு நிக்கா.

அடுப்புல ஒரு பானைக்க தண்ணி கொதிச்சிக்கிரிக்கி.

அஞ்சி கொழுக்கட்டய வண்டுல வெச்சி தண்ணி கொதிச்சி வாற ஆவில அவிக்கா. நெல்லா அவிஞ்ச பொறகு கொழுக்கட்டய எறக்கி சொளகுக்க வெய்க்கா.

தஸ்லீமா நிக்க ஏலாம ஊட்டுக்குள்ள போய் கட்டில்ல கெழிஞ்சா.

ம்மாக்கு ந்த பழய காலத்து வேலயெல்லாம் தேவயா ண்டு மனசுக்க நெனச்சிகிட்டா.

அன்னேரம் ஒரு பொம்புள அவட தாய்ர தங்கச்சி மொறக்காரி வந்தா

தஸ்லீமாட வாப்பா வந்து சாச்சி வாறா எழும்பிட்டு வா புள்ள ண்டு மகளுக்கிட்ட சென்னாரு.

சத்தம் கேட்டு கதிசா வந்தா. கைல வேல. கொழுக்கட்ட சுர்ரன். இரிங்க வாற னெண்டு செல்லி அடுப்படிக்க திரும்பிப் போனா.

வந்த மனுசி தஸ்லீமாகிட்ட கொழுக்கட்ட வெசயத்தக் கேட்டா.

தஸ்லீமா எல்லா வெளக்கமும் சென்னா.

சாச்சி சிரிச்சிக்கிட்டு அந்தக் காலத்தில கொழுக்கட்ட வெசயமெல்லாம் செரியாத்தான் செஞ்சாக. ப்ப தேவல்ல.

தொடந்து அவ கதச்சா.

எங்கிட காலத்தில மொதலாவது வேலயா கலியாணம் கேட்டு மாப்புள ஊட்டுக்கு செப்புக் கொண்டு போற. ரெண்டு மூணு சீப்பு நெல்ல சாதி வாழப்பழம், வெள்ளச் சீனி இதுகள அளவான பனஓலப் பொட்டிக்க வெச்சி வெள்ளச் சீலயால சுத்திக் கட்டி நெருங்கின சொந்தமாப் பாத்து நாலஞ்சி பொண்டுகளோட செப்புக் கொண்டு போவாக. பொறகு செலநாள் கழிச்சி மாப்புளட ஊட்ட இருந்து பொட்டி கொண்டருவாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிக்கார மாப்புள ண்டா பொட்டி கொஞ்சம் செலவு கூடினதா இரிக்கும். வெரலுக்கு தக்கின வீக்கம்.ஆனா எல்லாப் பொட்டிக்கயும் நெல்லா கமகம ண்டு மணக்கிற மொகப்பவுடரு, ரோசிப் பவுடரு, தலைக்கிப் போர்ர வாசமான எண்ண, மொகம் பாக்கிற வட்டக்கண்ணாடி ஒதட்டுப் பென்சில் நெகத்தில பூசிற மை குதி வெச்ச வடிவான செருப்புச் சோடி, பொம்புளக்கித் தேவயான ன்னம் சாமானுகள் எல்லாம் பொட்டிக்க இரிக்கும்.

இதுகளோட பழவக இனிப்புச் சாமானுகள் சேத்து பொட்டி கொண்டருவாக.

சாச்சிக்கி தேத்தண்ணி ஊத்த தஸ்லீமா அடுப்படிக்க போனா.

முப்பது நாப்பது கொழுக்கட்ட சொளகுக்க இருந்திச்சி.

வேறொரு தட்டுல சின்னதா செஞ்ச ஒரு கொழுக்கட்ட இருந்திச்சி. பாதி வெரல் மட்டுல அளவு.

தஸ்லீமாட தாய்க்காரி சின்னக் கொழுக்கட்டய பெரிய கொழுக்கட்டட வகுத்துக்குள்ள பாசிப்பயறுத் தொவலோட சேத்து வெச்சி பெரிசா ஒரு கொழுக்கட்ட செஞ்சா. இதான் புள்ளக் கொழுக்கட்ட ண்டு தாய்க்காரி தஸ்லிமாக்கிட்ட காட்டினா.

ன்னம் அஞ்சாறு பெரிய கொழுக்கட்ட சுட்டா வேல முடியிது ண்டு ம்மா சென்னா.

தஸ்லீமா தேத்தண்ணிய கொண்டந்து சாச்சிக்கு குடுத்தா.

மாப்புளயும் பொண்ணும் ப்ப போண்ல போட்டோவ அனுப்பி பாத்துக்கிறாக.அவங்களாக எங்கென்டான சந்திக்காக. ஒங்குட காலத்துல எப்பிடி? ண்டு தஸ்லீமா ஒரு கேள்வி கேட்டா.

சாச்சி சென்னா மாப்புளட தங்கச்சி, அக்கச்சா, ல்லாட்டி ம்மாக்காரி ஆரும் வந்து பொண்ணப் பாப்பாக .ஒங்கு சாச்சா சொந்தக்கார கலியாண ஊட்டுலதான் என்ன கண்டயாம்.

பொண்ணப் பாக்கணும் ண்டு மாப்புள ஒரே புடியா நிண்டா எப்பிடிண்டான பாக்க ஒழுங்கு பண்ணுவாக.

அடுப்படிக்க கொழுக்கட்ட வேல முடிச்ச ரெண்டு பேரும் வெறாந்தயில வந்து கதயில சேந்தாக. ஆளுக்கொண்ட கதச்சாக.

கொழுக்கட்ட சுட்ட மனுசி ஒரு வெசயம் சென்னா. கலியாணத்த ப்ப மண்டபத்துல, தொழுகிற பள்ளில, ல்லாட்டி எங்கெண்டான சனத்தக் கூட்டி செய்ராக. ஊட்டுல கலியாணம் நடக்கிற மிச்சம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொறய. ஒண்டு ரெண்டுதான் நடக்கிது.எங்கிட காலத்துல ஊட்டுலான் கலியாணம் நடந்த. உள்ளுட்டு அறைக்குள்ள குத்து வெளக்கு நெற கொடம், பூவரிச் செம்பு இரிக்கிம். கட்டில்ல ஏழு மாப்புளப் பாய் விரிச்சி அதுக்கு மேல வெள்ளப் பொடவ விரிப்பு போட்டிரிக்கும்.

வெள்ள விரிச்ச கொடைக்குள்ள மாப்புள வந்து வாசல்ல பந்தலுக்குள்ள இரிப்பாரு.

செம்பால செஞ்ச சேவரக்கால் உள்ளுட்டுக்க இரிக்கும். அதுல வெள்ள விரிச்சி பொண்ண இருப்பாட்டுவாக. பொறகு மாப்புளய கூட்டிக்கந்து கட்டில்ல வெய்ப்பாக. பொண்ண எழுப்பி கட்டில்ர கால்மாட்டுல இரிப்பாட்டுவாக.

காவின் எழுதுற லெப்ப தாலி கட்டி முடிஞ்ச ஒடன பாத்தியா ஓதுவாரு. பொறகு தேங்காப் பால்,வாழப்பழம், சீனிஎல்லாம். போட்டுக் கரச்ச பால்பழத்த மாப்புள பொண்ணுக்கு குடிக்கக் குடுப்பாக. ப்பிடித்தான் எங்கிட கலியாணம் நடந்த. ப்ப சோடா குடிக்கக் குடுக்காக. எல்லாம் மாறிப் பொய்த்து. ன்னொரு முக்கியமான வெசயமொண்டயும் அவ சென்னா.

கலியாணம் முடிச்சி ஏழாம் நாள் பொண்ணூட்டுக்கார ஆக்கள் ஏழுவகையான தீன் பண்டம் செஞ்சி ஏழாம் நாள் செப்பு மாப்புள ஊட்டுக்கு அனுப்புவாக.

ஏழாம் நாள் செப்புல கொழுக்கட்ட, சீனிமா, துதள், எள்ளுப் பணியாரம், புள்ளாட, வாரப்பம், தேன் கொழல் இதுமாதிரி சாப்பாட்டு வக ஏதாவது ஏழுவக செஞ்சி அனுப்புவாக ண்டு சென்னா.

தஸ்லீமா ஒரு கேள்வி கேட்டா.

ஒங்குட காலத்தில இருந்து ப்ப எங்கிட காலம் வெரயும் மாறாம கலியாண வெசயம் என்னயும் இரிக்கா ?

அவட சாச்சி சென்னா

தாலி கட்ர, மருதவண்டிக் கலியாணம், கால் மாறிப்போற, கூறப் பொடவ கொண்டு போற ண்டு செல வெசயம் இரிக்கி ண்டு சென்னா.

தூரத்தில இருந்து இதுகளக் கேட்டுக்கிருந்த தஸ்லீமாட வாப்பா வாயத் தொறந்து ஒரு வெசயம் சென்னாரு.

முந்தியெண்டா பொண்ணூட்டுல இருந்து தாலிச் சோறு போகும். இப்ப தாலிச்சோறு ல்ல. அதுக்கு பதிலா மாப்புளட ஊட்டால வலீமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடு கெடைக்குது.

ண்டைக்கி அசறுக்கு பொறகு புள்ளட மாமி ஊட்டுக்கு

புள்ளக் கொழுக்கட்ட அனுப்புற ண்டு தாய் சென்னா.

ன்னா வந்திரிக்கிற ஒண்ட தங்கச்சியயும் கூட்டிக்குப் போ ண்டு தஸ்லீமாட வாப்பா சென்னாரு.

எல்லாரும் வெத்திலாக்குப் போட்டுக்கிட்டு கலஞ்சி போறாக.

தாயும் மகளும் கொழுக்கட்ட எல்லாத்தயும் சொளகுக்க இருந்து எடுத்து புதிசா வாங்கின பேசனுக்குள்ள வெச்சாக புள்ளக் கொழுக்கட்டய பத்திரமா எடுத்து மத்தக் கொழுக்கட்டகளுக்கு மேல கண்ணுல நெல்லா தெரியிற மாதிரி வெச்சாக. வேறொரு பேக்குல கோழிச்சுடன் வாழப்பழம் ரெண்டு சீப்பு வெச்சாக. தஸ்லீமாட மாமி ஊட்டுக்கு புள்ளக் கொழுக்கட்டயும் பொட்டியும் பொய்த்துக்கிட்டிரிக்கி.

வகுத்து வலி தாங்க ஏலாம தஸ்லீமா தாயோட அவிசிர அவிசிரமா டாக்குத்தருக்கிட்ட பொய்த்துக்கிட்டிரிக்கா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய் யாவாரம்

ஞ்ச பாருங்க. ரோட்டால நைலோன் பாய் வித்துக்கிட்டு போறான். அவன கொஞ்சம் கூப்பிடுங்களன். ஊட்டுல பாவிக்கிறதுக்கு பாய் ல்ல. வாங்கணும்.

மனுசிட கொரல் என்ட காதுக்க வந்து ஏறுது.

நான் நெல்லாப் படிச்சி பாசி பண்ணினாலும் கவுண்மெந்துல தொழில் கெடைக்கல்ல.அதால சின்னச் சின்ன தொழில செஞ்சிகிட்டு இருந்தன். பொறகு கலியாணம் முடிச்சி கடல் தொழில் பாத்தன். அதயும் உட்டுப்போட்டு பொட்டணி யாவாரம் பண்ணினன்.

தமுள் ஊருக்குள்ள போய் துணிமணிகள கூறி விக்கிற தொழில். எப்ப எங்க சண்ட வரும் ண்டு தெரியாத காலம் ஒண்டு வந்திச்சி. பயத்தில அந்தத் தொழிலயும் உட்டன். வயசும் பொய்த்து.இப்ப ஊட்ட சும்மாதான் இரிக்கன். புள்ளகள்ர ஒழப்புல காலம் போகுது.

பாய்க்காரன கூப்பிட்டன்.

அவன் உள்ளுக்கு வந்தான்.

தலயில ஒரு பாய்க்கட்டு. மொகத்துல நரச்ச தாடி. கரண்டி காலுக்கு மேல சாறன உடுத்து இடுப்புல வார் போட்டு கட்டி இருந்தான். பழய காலத்து கறுப்பு வாரு.ரெண்டு பக்கத்திலும் காசி வெய்க்கிறதுக்கு ரெண்டு பக்கட்டு. அரக்கை சேட்டு போட்டிருந்தான்.சேட்ர ரெண்டு கைப்பகுதியும் மொழங்கைய தொட்டு வெளிய வந்திருந்திச்சி. சேட்டுக்கும் ரெண்டு பக்கட்டு.

பாய தலயில இருந்து கட்டோட கீழ எறக்கி வெச்சான். ஒவ்வொரு பாயும் பொலித்தீன் தாளால சுத்தி புழுதி படாம புதுசி மாதிரி இருந்திச்சி. பாய அவுட்டுக் காட்டினான்.

ஒவ்வொரு பாய்க்கும் ஒவ்வொரு வெளக்கம் வெச்சிருந்தான்.

அவன் யாவாரிதான. எப்பிடிண்டான சாமான விக்கத்தான் பாப்பான்.

இது சவ்வுப் பாய். கலியாண ஊடுகளுக்கு தேவப்பர்ரது. வெல கூட. பாத்துத் தெரலாம்.

இது கொஞ்சம் சின்னப்பாய். குடும்பத்தில ஆரும் ஊட்ட வந்தா கீழ போட்டு சாப்பிர்ரதுக்கு ராகத்தா இரிக்கும். வெலயும் கொறய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொழுகிற பாய். மக்கா படம் போட்டது. ந்தப் பாய விரிச்சி அதுக்கு மேல முசல்லாவ போட்டு தொழலாம். மக்காப் பாய் விக்கிற ஆளுக்கும் நலவு வாங்கிற ஆளுக்கும் நலவு ண்டு செல்லுவாக.

இது படுக்கிற பாய். கட்டில்ல விரிச்சி படுக்கலாம். தரயில விரிச்சிம் படுக்கலாம். எல்லாத்துக்கும் எணக்கமான பாய். வெல கூடயும் ல்ல கொறயயும் ல்ல. மத்திக்கமா தெரலாம்.

நேரம் போகுது.செல்லுங்க புள்ள. எது வேணும்.?

நானும் மனுசியும் அவன் கதைக்கிற மோடிய கேட்டுக்கிருந்தம். அவ ஒவ்வொரு பாயயும் விரிச்சிப் பாத்து ஒசத்திப் பாத்து பெரட்டிப் பாத்து தேவயான பாய தேடிக்கிருந்தா.

நைலோன் பாய் வாறதுக்கு முந்தி நம்முட ஆக்கள் பாவிச்ச பாய்கள பத்தின வெசயம் என்ட மனசிக்குள்ள ஒவ்வொண்டா ஓடிச்சி.

எங்கிட ஊட்டுக்குப் பக்கத்தில கொச்சிம்மா ண்டு ஒரு கெழவி மனுசி இருந்தா. ஒசரமான மனுசி.நல்ல தேகக் கட்டு. புரிசன் புள்ள குட்டி ஒண்டும் ல்ல. எல்லாத்தயும் எழந்து தனியாத்தான் இருந்தா.

எங்கிட குடும்பம் பெரிசு. அஞ்சாறு படிக்கிற புள்ளகள். வாப்பா எங்கள நெல்லா படிக்க வெச்சாரு.

பள்ளிக் கொடத்துக்குப் போக தண்ணி வாத்து வெளிக்கிட ஒரு கெணறு காணா. செரியா சொணங்கும்.கெதியா வெளிக்கிர்ரதுக்கு நான் பக்கத்து ஊட்டு கொச்சிம்மாட ஊட்ட போய்த்தான் கெணத்துல தண்ணி வாக்குற.

கொச்சிம்மா ஆத்தங்கரக்கிப் போய் பாயெழைக்கிறதுக்கு பன் புடுங்கிட்டு வருவா. சாம்பல் கரச்ச தண்ணில பன்ர அடிய நலச்சி வெயில்ல பன்ன காயப்போடுவா. அத வித்து வாற ஒழப்புலதான் சீவியம் நடத்தினா.

கொச்சிம்மாகிட்ட பன் வாங்கினா பொறகு சாயம் போட்டு காச்சணும். அத தொழிலா செஞ்சவதான் அச்சிமுத்து.

அச்சிமுத்து ஒருகடயும் வெச்சிருந்தா அது ஒரு சின்ன கட. மத்த கடைகளப்போல சீனி பருப்பு தேயிலத்தூள் சாமானெல்லாம் அங்க ல்ல. நூல்பந்து, தையல் ஊசி, சட்ட ஊசி,தல வார்ர சீப்பு, உடுப்புக் கழுவுற சன்லைட்டுக்கட்டி, கைப்பூரம், பன்னீர்ப் போத்தல், சாம்பிராணிக்குச்சி மல வெத்தில, நீர் வெத்தில.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணாம்பு, கைப்பு, போயில, மூக்குத்தூள், ப்பிடியான சாமான் விக்கிற புச்சிக்கட. இந்தக் கடயில விக்கிற முக்கியமான சாமான் பன்னுக்கு நெறம் பூசுற சாயக் கட்டி.சாயக் கட்டி செவப்பு, பச்ச நீலம் ண்டு மூணு கலர்ல இரிக்கும்.

அச்சிமுத்து கட வெச்சி சாயக்கட்டி விக்கிறத்தோட பன் கட்டுகள சாயம் காச்சி விக்கிற தொழிலையும் சேத்துச் செஞ்சா.

வெட்டல நெருப்பு மூட்டி அதுக்கு மேல பெரிய மொடாப் பானய வெச்சி அதுக்குள்ள தண்ணிய ஊத்தி நெல்லா கொதிக்க வெச்சி சாயக் கட்டிய போட்டா என்ன நெறத்தில சாயக் கட்டி போட்டமோ அந்த நெறத்தில தண்ணி வந்து கொதிக்கும்.

அகப்பக் கணயால வாட்டி எடுத்த பன் கட்ட அதுக்குள்ள போட்டு கொஞ்ச நேரம் ஊற வெச்சி வெட்டல எடுத்தா பன் கட்டுகளும் அந்த நெறத்துக்கு வந்திரும் .பொறகு அத வெயில்ல காய வெச்சி எடுத்தா பன் கட்டு பாயெழைக்கிற பதத்துக்கு வந்திரும்.

அச்சிமுத்துர கடயில பொண்டுகள் வந்து சாயக் கட்டி வாங்குவாக. ல்லாட்டி பாய் எழைக்கிறதுக்கு சாயங்காச்சின பன்ன கட்டுக் கணக்கில வாங்கிட்டு போவாக.

சாதாரணமா ஒரு பாய் எழைக்க மூணு குத்துப் பன் தேவப்படும். ஒரு கெழமைக்கு தேவயான பன்ன ஒண்டா வாங்குவாக. செலஆக்கள் ஒடன காசக் குடுத்து வாங்குவாக. செல ஆக்கள் கடனுக்கு பன்ன வாங்கிட்டுப் போய் பாயெழச்சி வித்து பொறகு கடன அடைப்பாக.

வருமானம் கொறஞ்ச ஊட்டுல கொமருப் புள்ளகள் பாய் எழைப்பாக. செல நேரத்துல ரெண்டு மூணு பொம்புளகள் ராச்சோறு திண்டதுக்குப் பொறகு பக்கத்து ஊட்டுல ஒண்டா சேந்து பாய் எழைப்பாக. எப்பிடியும் ஒரு ராவைக்கு ஒரு பாய் தலக்கட்டிருவாக.

ந்தப் பாய்கள யாவாரிமாரு வாங்கி தொழில் செல்வாக.

ஒண்டுக்குப் பின்னால ஒண்டா பாய் எழைக்கிற வெசயம் என்டமனசில வந்துக்கு இருந்திச்சி.

கெதியா பாத்து எடுங்க புள்ள ண்டு

பாய்க்காரன் சொன்னான்.

மனசில ஓடின படம் எடயில நிண்டுட்டு

பொஞ்சாதி நைலோன் பாய் எல்லாத்தயும் ஒவ்வொண்டா பாத்த பொறகு ஒரு பாய மட்டும் எடுத்து ஊட்டுக்குள்ள போனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுக்கு முந்தி என்ன தொழில் செஞ்ச ண்டு அவனுக்கிட்ட கேட்டன்.

முந்தியும் பாய் யாவாரம்தான் செஞ்ச ப்ப நைலோன் பாய் ண்டு சென்னான்.

அந்தக் காலத்து பாய் யாவாரம் கொஞ்சம் கைட்டம்.ஆனா நெல்ல வருமானம் ண்டும் சென்னான்.

தொடந்து கதச்சான்.

பாயெழைக்கிற பொண்டுகள எனக்கித் தெரியும். அவகிட ஊட்ட போய்

காசி குடுத்து பாய வாங்குவன். விரிச்சிப் போட்டு படுக்கிற பாயத்தான் அனேகமா எல்லாரும் எழைப்பாக. மூணு குத்துப் பன்னில ஆறடிப் பாய் எழைச்சி தலக்கட்டி வெச்சிருப்பாக.

ன்னா நைலோன் பாய ஊடு ஊடா கொண்டு போய் விக்கிற மாதிரி அந்தக் காலத்தில சோனக ஆக்கள்ர ஊட்ட போய் பாய் விக்கிறெல்ல.

வசதி ல்லாத கொமருப் புள்ளகள் ஊட்டுல பாயெழைக்கிறதால நம்முட பகுதில பாய் யாவாரம் பண்ண ஏலா. அத தொழிலா செய்யிர கைட்டம். ஊருக்கு வெளிலதான் பாய் விக்கிர தொழில செய்யலாம்.

நான் ஊருக்குள்ள போய் காசி குடுத்து பாய் வாங்குவன்.செல ஆக்களுக்கிட்ட முன்காசி குடுத்து பாய எழச்சி வாங்கிறதும்தான்.

ஊட்டுல அம்பது அறுபது பாய் சேந்தா அத ஒண்டுக்கு மேல ஒண்டா அடுக்கி பெரிய கட்டா கட்டி எடுப்பன். எனக்கிட்ட றளி சயிக்கல் ஒண்டு இருந்த. அதுர பின்னுக்கு மரத்தால செஞ்ச கரியல் ஒண்டு வாங்கி பூட்டி இருந்தன். அதுல பாய்க் கட்ட வெச்சி கவுத்தால நெல்லா இறுக்கிக் கட்டுவன். ஊர் ஊரா தமுள் ஊருக்குள்ள போய் விப்பன்.

பக்கத்தில பாண்டிருப்புல வரிசத்துக்கு ஒருக்கா தீப்பளயம் நடக்கும். அங்க கொண்டு போய் விப்பன். அங்க கொஞ்சம் வெல கூட்டி விக்கலாம். தீப்பளயம் இருந்து வரக் கொள்ள நெல் அவிக்கிற அலுமினியம் சட்டி ,நோம்புக் கஞ்சி காச்சிற கெடாரம், மொடாப்பான திருவுலக்குத்தி, செம்பு அரிக்கிமிலாய் மழைக்கிப் புடிக்கிற தளப்பத்து ப்பிடிச் சாமானுகள வாங்கிட்டு வந்து நம்முட சனங்களுக்கு விக்கிற வேலயும் செய்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சாமானயும் சயிக்கிள்ள ஒண்டா கொண்டர ஏலா. பெரிய பாரமா இரிக்கும். செல சாமான பாண்டிருப்புல தெரிஞ்ச தமுளாக்கள்ர ஊட்டுல வெச்சிப் போட்டு வந்து அடுத்த நாள் போய் எடுத்து வருவன்.

புளியந்தீவுல மாமாங்க கோயில் தீத்தம் நடக்கும். அங்கயெல்லாம் சயிக்கல்ல போறெல்ல. பஸ்ஸில வேன்ல தான் போற. சித்தாண்டிக் கோயில் கதிர்காமம் ப்பிடி மத்த மத்த ஊருகளுக்கெல்லாம் போய் பாய் யாவாரம் செஞ்சிருக்கன். மாத்தக்கி ஒருக்கா மாறிமாறி எப்பிடியும் ஒரு தீத்தம் வரும்.

யாவாரம் முடிஞ்சி வெரக் கொள்ள குட்டான் . பனங்கெழங்கு ஒடியல் . பொணாட்டு. பனஓல விசிறி. இதுகள வாங்கிட்டு வந்து ஊர்ல கடைகளுக்கு போடுவன்.

ப்பிடித்தான் பாய் யாவாரம் செஞ்சி பொழப்பு நடத்திக்கிட்டு இருந்தன்

ப்ப கொழும்பில இருந்து நைலோன் பாய் கட்டுகட்டா வெருகுது.. அத வாங்கி யாவாரம் செய்யிறன்

ஊட்டுக்காரி காசி எடுத்துக்கிட்டு வந்து குடுத்தா.

என்ன புள்ள ஒத்துக்கிட்ட வெலயிலயும் புடிச்சிக்கிட்டு தாறாய்.

செரி செரி காணும் எடுங்க ண்டு அவ சென்னா.

குடிக்கிறதுக்கு கொஞ்சம் தண்ணி தா புள்ள.

நைலோன் பாய் யாவாரத்துக்கு எப்ப மாறின ண்டு கேட்டன்.

வெயிலேறுது. போகணும். குடிக்கிற தண்ணி வாறதுக் கெடயில அதயும் செல்ரன் கேளுங்க.

நம்முட சனங்களும் தமுள் சனங்களும் நல்ல ஒத்துமயாத்தான் இருந்த. பொறகு பொறகு ரெண்டு சாதிக்கும் எடயில சின்ன சின்ன பெரச்சினகள் வந்த, தமுள் ஊருக்கும் முசிலிம் ஊருக்கும் எடயில சண்ட நடந்த இதுகள் ஒங்களுக்குத் தெரியும்தான.

செல ஊர்ல நடக்கிற கோயில் தீத்தம் ரெண்டு மூணு நாளைக்கு தொடந்து நடக்கும். அப்பிடியான தீத்தக்கரைக்கு பாய் கொண்டு போனா பிங்கான் கோப்ப யாவாரம் பண்ர ஒரு பழகின தமுளாள்ர ஊட்டான் நான் நிக்கிர. நெல்லா கவனிப்பாக. அதப்போல பிங்கான் கோப்ப யாவாரியும் அவர்ர மகனும் சாமானுகள பொட்டில கட்டி எடுத்துக்கிட்டு யாவாரத்துக்கு கல்முன கடக்கரப் பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியேத்தத்துக்கு வருவாக. பன்னெண்டு நாளும் எங்கிட ஊட்டான் நிக்கிற.

ப்பிடி ஒண்டுக்குள்ள ஒண்டா பழகினம். புதுநாணயமான புதுப்புதுக் கொள்க யெல்லாம் வந்ததால மனுசனுக்கெடயில பெரச்சினயும் கொழப்பமும்தான் மிச்சம்.

ப்பிடியான காலச் சூழ்நிலகளுக்குள்ள ஊருக்கு ஊரு போய் தங்கேலா, யாவாரமும் பண்ண ஏலா. என்ன பெரச்சின வந்தாலும் சாப்புடத்தான வேணும்.

அதால ப்ப நைலோன் பாய் யாவாரம். ஊரோட தொழில்.

பாவம் வசதி ல்லாம பாய் எழச்சித் திண்டதுகளுக்கு தொழில் ல்ல.

மனுசன் தண்ணியக் குடிச்சாரு. பாய்க் கட்ட தூக்கி தலயில வெச்சாரு பொய்த்தாரு.

தூரத்தில நைலோன் பாய் நைலோன் பாய் ண்டு கூவுற சத்தம் கேட்டு மறஞ்சிச்சி.

புதுநாணயமான புதுப்புதுக் கொள்கயெல்லாம் வந்ததால மனுசனுக்கெடையில பெரச்சினயிம் கொழப்பமும் தான் மிச்சம் கொமருகுட்டிகளுக்கு பாய் எழைக்கிற தொழிலும் ல்ல ண்டு அந்த மனுசன் சென்னது எண்ட காதுக்க தொடந்து ஒலிச்சிக்கிட்டு இருந்திச்சி

ஜீவநதி ஏப்ரல் 2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டக் கலியாணம்

"வானத்தில போய் நெலவுல மனுசன் கால வெச்சிட்டானாம். ரேடியோவில ஒரே கதயா கெடக்கு"

மூக்கில வெரல வெச்சி கங்காணிவண்டி கதைக்கா.

அவக்கு நாப்பது வயசி நடக்குது. ரெண்டு புள்ளகள். சடங்குகளுக்குப் போய் அவ வெச்ச காசி ஊருக்குள்ள போய் அப்பிடியே கெடக்கு. ந்த நேரமாப் பாத்து தென்னம்புள்ள பாள போட்டிச்சி.

மகள் பெராயப்பட்டு ரெண்டு வரிசம். பொடியனுக்கு சின்னத்து வெச்சி பொலிவு மாசம் பொறந்தா நாலு வரிசம் வரப்போகுது. புள்ளகள்ர சடங்குகள் எப்ப நடக்குமெண்டு ஆருக்குத் தெரியிம். அதால ஊருக்குள்ளயும் சொந்தபந்தங் களுக்கும் கலியாணச் சடங்குகளுக்குப் போய் நாம வெச்ச காச எடுக்கணும். அதுக்கு ஒரு வழி செல்லுங்களன்."

ஊட்டுக்கார ஆளுக்கிட்ட கங்காணிவண்டி கேட்டா

கோழி கூவுறதுக்கு முந்தி கண்முழிச்சி எழும்பி சாக்குக் கட்டில ஒழுங்கா மடிச்சி செவரு ஓரத்தில சாத்தி தலவாணியோட பாயச் சுருட்டி அதுக்கு மேல வெச்சி தொழுது முடிச்சாரு கங்காணியாரு. ஞ்சித் தேத்தண்ணி அவர்ர கொடலுக்க எறங்குது. அன்னேரம் கங்காணியார்ர காதுக்க பொஞ்சாதிர கத வந்து ஏறுது.

ரெண்டொரு வரிசத்துக்குள்ள புள்ளகளுக்கு கலியாணச் சடங்கு ஒண்டும் நடக்க மாட்டா. சடங்குகளுக்குப் போய் அவ வெச்ச காச எடுக்கணும். பாள போட்ட சாட்டுல தென்னம்புள்ளக்கி பட்டக் கலியாணம் செஞ்சா வெச்ச காசி வந்திரும் ண்டு பொஞ்சாதிர மனசில ஒரு படம் ஓடிக்கிரிக்கிறத அவர்ர மனம் வெளங்கி எடுக்குது.

ஆரும் படிச்சி முடிச்சிட்டு வந்தா ஊராக்கள் சேந்து அவருக்கு பட்டக் கலியாணம் நடத்துவாக. நோம்பு காலத்தில குடிலுக்குள்ள ஹதிசி செல்லக் கொள்ள ஒருக்கா ஆலிமுக்கு பட்டக் கலியாணம் நடக்கும். தென்னம்புள்ள கமுகம்புள்ள பாள போட்டா செல ஆக்கள் அதுக்கு பட்டக்கலியாணம் நடத்துவாக.

ஊர்ல நடந்த பட்டக் கலியாணங்களப் பத்தி நெனச்சிப் பாக்காரு..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூணு நாளயால கங்காணியார்ர ஊட்டுல தென்னம்புள்ளக்கி பட்டக் கலியாணம்.

"கலியாணத்துக்கு ஆலாத்தி வேணும். கிண்ணியானுக்கிட்ட செய்யக் குடுக்கனும். நான் போய் வாறன். நீங்க பொளக்கடப் பக்கமா குருத்து மண் கொஞ்சம் தோண்டியெடுத்து வாசல்லயும் கெணத்தடிய தென்னம்புள்ளட அடிலயும் போடுவீங்களா?"

கங்காணியாரு பொஞ்சாதி கீறின கோட்ட தாண்டமாட்டாரு. வேல செய்யத் தோங்கினாரு.

கங்காணியாரு திருக்கோணமலயில வெள்ளக்காரனுக்குக் கீழ கங்காணி வேல பாத்தவரு. ஊர்ல கங்காணியார் ண்டா அவருதான். வீடிஇசிக்கிரெட்டு ஒண்டும் குடிக்கிறெல்ல. சுருட்டு மட்டும்தான். நெல்ல மனுசன்.

ராவு பத்திப் போட்டு கொறயோட வெச்ச கனகலிங்கம் சுருட்டு அவர்ர கண்ணுல படுகுது.

சுருட்ட எடுத்து பல்லால கடிச்சி வாயால இறுக்கிப் புடிச்சி நெருப்புக் குச்சியொண்ட பத்திரமா வெளியால எடுத்து ஒரசிப் பத்த வெச்சி சுருட்டக் கொழுத்தினாரு. பொகய உள்ளுக்க ஊண்டி இழுத்து புகு புகு ண்டு அத வெட்டல உட்டாரு. சுருட்டுப் பொக வாசல்ல மணக்குது.

சாறனுக்கு உள்ளுக்கு சிறுவால உடுத்து குருத்து மண்ணெடுக்க மம்பெட்டிய எடுக்காரு.

அவர்ர ஊட்ட மூணு நாளயால பட்டக் கலியாணம் நடக்கப் போகுது.

ஊட்டுக்காரி கிண்ணியான்ட ஊட்ட போக வெளிக்கிர்ரா.

செம்புல செஞ்ச அரசெல வட்டாவ எடுத்து சீலம் பொடவயால நெல்லாத் தொடச்சா. பொட்டகத்துக்க இருந்து ஜோஜட்டுப் பொடவய எடுத்து உடுத்தா. ஒறுவா காசித்தாள் ரெண்ட கவனமா மடிச்சி வல்லுவத்துக்க வெச்சி அத சுருக்குப் போட்டு இறுக்கி பொடவயோடச் சேத்து இடுப்புல கொழுவினா. கதவத் தொறந்துக்கிட்டு வெட்டல வாறா.

வாசல்ல கால்ல கொழுவுற மிரிவடிக்கட்ட கெடந்திச்சி. அவ இஸ்ஸதீன் கட்ட மிரிவடிதான் பாவிப்பா. அது மரத்தில செஞ்சி நீலக் கலர் அடிச்சது. அத கால்ல கொழுவிக்கிட்டு கிண்ணியான்ட ஊட்ட வெளிக்கிட்டுப் போறா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ல ஆர்ர ஊட்டுல கலியாணம் சடங்கு என்ன நடந்தாலும் ஆலாத்திக்கார கிண்ணியான்ட ஒதவி தேவப்படும். வட்டாவ குடுத்தா மூணு நாளயால ஆலாத்தி செஞ்சி குடுப்பான். ஆலாத்தி செஞ்சா கிண்ணியான்தான் அதச் செய்யணும். அப்பிடி வேல.

கூப்பம் மாவ நெல்லாக் கொழச்சி வட்டா நெறய அப்பணும். பளபளப்புக் கடதாசியால தோறனக் கொடி செஞ்சி அத குருத்தோல ஈக்கில்ல கொழுவி வட்டாக்குள்ள குத்தி நிப்பாட்டணும். வட்டாவச் சூத்தி எல்லா நெறத்திலயும் குண்டுமணிக் கோர்வய தொங்க உடணும். ன்னம் ன்னம் கொள்ளயா வேல பாக்கணும். கிண்ணியானுக்கு ந்த மாதிரி வேல நெல்லா ஓடும்.

கிண்ணியானுக்கிட்ட வட்டாவக் குடுத்திட்டு அவ ஊட்ட திரும்பி வாறா.

முத்தத்தில குருத்து மண் பரப்பிக் கெடக்கு. கமுகம் புள்ளயிலயிருந்து களண்டு உழுந்த கோப்பத்த வேலில செருகி இருந்திச்சி. ஊடு முழுக்க குப்ப கூழன் ல்லாம வடிவா கூட்டி துப்பரவு செஞ்சிருந்தாரு. மூல முடுக்குல இருந்த புழுதி, ஒட்ற ஒண்டயும் காணல்ல. புல்லு, சருகு எல்லாத்தயும் கொத்தி வெளிசாக்கி இருந்திச்சி. கலியாண வேலயில அரக்கரவாசி முடிஞ்ச மாதிரி.

ரெண்டு நாள் கழிஞ்சா பட்டக் கலியாணம்.

கிண்ணியான்ட ஊட்ட போன பொஞ்சாதி சந்தோசமா வாறத கங்காணியாரு கண்டுட்டாரு. தென்னம்புள்ள பாள போட்டதால அவர்ர மனசிலயும் சந்தோசம். தென்னமரமும் ஒரு புள்ளதான.

ஒரு பக்கத்தில கடல். மத்தப் பக்கத்தில வயல். ப்பிடி ரெண்டு பக்கத்தால செல்வம் கொழிக்கிற கரவாகுப்பத்துங்கிற எடத்துல கங்காணியார்ர ஊட்ட பட்டக் கலியாணம்.

வேலயெல்லாம் முடிஞ்சி வேர்வயத் தொடச்சி சாய்மனக் கதிரயில வந்து றாகத்தா இருந்தாரு. மகனக் கூப்புட்டுகுடிக்கத் தண்ணி கேட்டாரு.

மகன் அவருக்கிட்ட ஒரு கேள்வி கேட்டான்.

“படிச்ச ஆக்களும் மத்த ஆக்களும் நம்முட ஊர சாய்ந்தமருது ண்டு எழுதுற. பேசுற. அப்ப ஏன் கரவாகு ண்டு செல்ர”

மகன் செரியான துண்டாக்காரன். ஆனா கெட்டித்தனம் இரிக்கி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளக்காரனுக்கிட்ட வேல பாத்த காலத்தில அவரோட ஒண்டா வேல செஞ்ச ஊர்க் கூட்டாளிமாரு இது மாதிரி கேள்விக்கு அங்க சென்ன வெளக்கம் அவருக்கு ஞாபகம் வந்திச்சி.

ந்த நாட்ட கஜபாகு ங்கிற மன்னன் ஆண்ட காலத்தில கெழக்குத் தெசயில கொஞ்சம் முசிலிம் ஆக்கள் இருந்த. யாவாரம் தான் அவங்கட தொழில். அவங்களுக்கு வெள்ளாமயும் செய்ங்க ண்டு மன்னன் அந்தப் பகுதில காணி குடுத்தான். ஆக்கள் அந்தக் காணி இருந்த எடத்துக்கு கஜபாகு வட்ட ண்டு அவன்ட பேர வெச்சாக. காலம் போகப் போக கஜபாகு வட்ட கரவாகு வட்டயாகி அதச் சுத்தி ஆக்கள் இருந்த எடத்தயும் சேத்து கரவாகு ண்டு பேர் வந்திட்டு. கவுண்மெந்து அவகளுக்கு வசதியா ன்னம் கொஞ்சம் பகுதியயும் சேத்து கரவாகுப்பத்து ண்டு பேர் வச்சிச்சி.

கங்காணியார்ர மனசில பழய கரவாப்பத்து இப்பத்தய கரவாப்பத்து வெசயமெல்லாம் ஒண்டுக்குப் பின்னால ஒண்டா நெனப்புல வருகுது.

ஒரு காலத்தில கரவாப்பத்து சொளகு மாதிரி பெரிசா இருந்த. வடக்குப் பக்கமா கல்லாத்து மொகத்துவாரத்தில தொடங்கி ஞ்சால ஒலுவில்ல இரிக்கிற களியோடப் பாலம் வெரையும் ஒம்பது கட்ட நீளமா இரிந்திச்சி. இதுக்கு எடயில தமுளாக்களும் முசிலிம் ஆக்களும் ஊர் ஊராக் கலஞ்சி கெடந்தாக.

ப்பிடி சடச்சிப் போய் இருந்த கரவாப்பத்து சுருங்கிச் சுருங்கி கங்காணியாரு சீவியம் நடத்துற சாய்ந்தமருது ங்கிற ஊரோட வந்து அடங்கிட்டுது. அயலூர்க்காரனுகள் கரவாகுக்க பொண்ணெடுத்த ண்டு சென்னா அத மகனுக்கு சாய்ந்தமருதுக்க கலியாணம் செஞ்ச ண்டுதான் கணக்கில போடனும்.

அவர்ர பழய நெனப்பு மனசில இருந்து உடுபடுகிது.

பாத்துக்கிரிக்க மூணுநாள் ஓடிட்டு.

கிண்ணியான் ஆலாத்திய குடுத்திட்டுப் போக வாறான்

ண்டக்கிப் பின்னேரம் பட்டக் கலியாணம்.

அல்லயல்கார ஆக்கள் வந்து நிண்டு குருத்தோல கிழிச்சி பந்தல் போட்டு வேல செய்யிறாக. பந்தலுக்கு விரிக்கிறதுக்கு மாத்துக் கொண்டந்து ஏகாலி காத்துக்கிட்டு இரிக்கான். கங்காணியார்ர தம்பி முத்தத்தக் கூட்டி தண்ணி தெளிக்கான்.

கங்காணியாரு கடைக்கிப் போய் சல்லி விசுக்கத்து, கொழும்புச் சோடா, வெள்ளச் சீனி, வெத்தில பாக்குச் சமானுகள், வெடில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு, பகல் வெத்தி மத்தாப்பு. ப்பிடிச் சாமானுகளோட பகல் சாப்பாட்டுக்குத் தேவயான காய்கறி பழவக வாங்கிட்டு வந்து ஊட்ட சேர்ர நேரத்தில மனுசிர தங்கச்சிக்காரி பணியாரம் சுட இரும்புத் தாச்சி, தேங்காண்ண கலன் எல்லாம் எடுத்துக்கிட்டு வாறா.

"மச்சானப் பாப்பமெண்டு சும்மாண்டான ஒரு நாளைக்கி வெரமாட்டாய்" கங்காணியாரு குத்துக் கத கதைக்காரு.

அதக் கேட்டு மதினி கொடுப்புக்குள்ளால ஒரு சிரிப்புச் சிரிச்சா.

"ராத்தா எண்ணப் பணியாரம் சுடனுமெண்டு ஒத்தக் கால்ல நிக்கா எண்ண செரியான வெல அத உட்டுட்டு வாடா இல்லாட்டி கல்கண்டுப் பணியாரம் சுடு"ண்டு சென்னாரு.

"ராத்தாக்காரி ஒன்னத்தான் காத்துக்கிட்டுக் கெடக்கா. இதுகளக் கொண்டு குடு"

வாங்கிட்டு வந்த சாமானுகள் கைமாறுது.

வேலகள முடிச்சி பந்தலுக்குக் கீழ பாய விரிச்சி வசதியான மாதிரி இருந்து ஆம்புளகள் சாப்பிட்ட பொறகு கலயிறாக.

கலியாண நேரம் நெருங்குது.

கங்காணிவண்டி உடுப்பு பொட்டகத்தத் தொறந்து தென்னம்புள்ளயச் சோடிக்க பொடவ எடுக்கா. அவ வாண்ட புதுசில வாங்கின தோம்புச் சோமன், பட்டுச் சோமன், மூங்கில் பட்டு, மோகினிப் பட்டு, ப்பிடிப் பொடவயெல்லாம் மடிச்சாப்போல அப்பிடியே இரிக்கி. அவக்கு மோகினிப் பட்டு புடிச்சிட்டு. பொடவய கைல எடுத்துக்கிட்டு அடுப்படிப் பக்கம் வாறா.

"தென்னம் புள்ளக்கி இதத்தான் உடுத்தாட்ர. பொடவ நெல்லாரிக்கா"

ண்டு கேட்டா.

"நெல்லாரிக்கி. கொசவம் வெச்சி உடுத்தாட்டினா ன்னம் நெல்லாரிக்கும்"

அடுப்படிக்க இருந்து அவட தங்கச்சி கதச்சா.

தங்கச்சியும் அவட கூட்டாளிப்புள்ள கொழும்பார்ர மகளும் பணியார வேலயில இரிக்காக. தங்கச்சிக்காரிக்கி புள்ளாட சுட விருப்பம். கொழும்பார்ர மகளுக்கு முறுக்குப் பணியாரம் செய்யனும். அவக நெனச்ச ஒண்டும் நடக்கல்ல. எண்ணெப் பணியாரம் சுட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன ஓலத் தட்டுல அடுக்கிறாக. பக்கத்தில ஒரு பொட்டி நெறய வாடா இரிக்கி.

கங்காணிவண்டியும் ன்னொரு பொம்புளயும் தென்னம்புள்ளக்கி பொடவய உடுத்தாட்ராக. கொமருப்புள்ள மாதிரி இரிக்கி ண்டு ரெண்டு பேரும் கதச்சிக்கிட்டாக. கங்காணியாரு தென்னம்பூ வெச்ச பூவரி செம்புக் கொடத்த தூக்கிட்டு வந்து தென்னம்புள்ளட அடில வெய்க்காரு.

பந்தலுக்குக் கீழ சவ்வுப் பாய விரிச்சி அதுக்கு மேல வெத்திலத் தட்டு, செம்புப் படிக்கம், தண்ணிக் கோப்ப எல்லாம் பரப்பி வெய்க்காக.

"பொண்டுகள் தத்தி வாற சத்தம் கேக்குது மகன். வெடிலக் கொழுத்து".

கங்காணியாருக்கிட்ட இருந்து கட்டள பறக்குது.

பொண்டுகள் கைவெரலச் சுருட்டி வாய மறச்சி கொரல ஒசத்தி ராகமெடுத்து சத்தம் போட்டு கொலவ உட்டுக்கிட்டு உள்ளுக்கு வாறாக.

கங்காணிவண்டி தத்தியோட வந்த பொண்டுகள கைல புடிச்சி பாயில இருப்பாட்ரா. தத்தியோட வெராம வேறயாவும் பொண்டுகள் தனித்தனிய வாறாக

"ஆலாத்திய கொண்டாங்க"

கொழும்பார்ர மகள் ஆலாத்திய கொண்டந்து சவைக்கு நடுவுல வெய்க்கா.

பொடியன் பகல் வெத்தியக் கொழுத்துறான். அது பொரிஞ்சி பொரிஞ்சி உழுகுது.கொஞ்ச தூரத்தில வெடில் பறியிது. பொண்டுகள் கொலவ உர்ராக. நாலு பொண்டுகள் தென்னம் புள்ளய சுத்தி நிண்டு ஆலாத்திய மூணுமொற சுத்தி சுத்தி எடுக்காக.

கங்காணிவண்டியும் தத்திக்காரியும் ஒருத்தர ஒருத்தர் கைல புடிச்சிக்கிட்டு பந்தலுக்க இரிக்காக.

தத்திக்காரி எழும்பி கல்ப் பன்னால மொடஞ்ச தட்டு ஒண்ட நீட்டயும் அவவோட வந்த எல்லாப் பொண்டுகளும் அதுக்குள்ள காசித் தாள வெய்க்காக. தனிய வந்த பொண்டுகள் வேறயா ஒரு தட்டுக்க காசி வெய்க்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியார வக, வாழப்பழம் விசுக்கத்து எல்லாம் குடுக்காக. தண்ணியும் சீனியும் போட்டுக் கரச்ச சோடாவ பூக்கௌாசில ஊத்தி குடிக்கக் குடுக்காக.

வெத்தில வட்டா பரிமாறுது.

செறப்பா நடந்திச்சி ண்டு கதச்சிக்கிட்டு பொண்டுகள் கலஞ்சி போறாக.

பட்டக் கலியாணம் முடிஞ்சி புரிசனும் பொஞ்சாதியும் தட்டுல சேந்த காச எண்ணிப் பாக்காக.

"நீ வெச்ச காசெல்லாம் வந்திட்டா"

கங்காணியாரு பொஞ்சாதியக் கேக்காரு.

"ரெண்டு பேரு வெரல்ல. பாப்பம்" ண்டு புரிசன்ட மொகத்தப் பாக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. கருதுகோள் (பாடநூல் க.பொ.த. உ.த)
2. அனுபவம் பெறுவோம் (பாடநூல் தரம் - 1)
3. கடல் ஒரு நாள் எங்கள் ஊருக்குள் வந்தது (சிறுவர் கவிதை)
4. விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் (வாழ்வியல் ஆய்வு)
5. திறன் நோக்கு (நூல் மதிப்பீட்டுக் கட்டுரைகள்)
6. ஒரு கிராமத்து சிறுவனின் பயணம் (எஸ்.எச்.எம். ஜெமீல் வாழ்வியல் ஆய்வு)
7. எஸ். பொன்னுத்துரை : முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் (வாழ்வியல் ஆய்வு)
8. இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான்: இருட்டடிப்புகளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தவர் (வாழ்வியல் ஆய்வு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைவிலேற்றிக் கூறப்படும் கதைகளில் அந்நினைவுகள் ஓரிடத்தில் நில்லாது அலைந்து கொண்டிருக்கின்றன. பெரு நினைவுகள் கிளைகளாகப் பிரிந்து ஆழவேர் விடுகின்றன. சில நினைவுகள் தொன்மத்தைத் தேடும் பயணத்திலும் சில ஆன்மீகப் பயணத்திலும் இன்னுஞ்சில இருப்பை நிலைநிறுத்தும் பயணத்திலும் அலைவுறுகின்றன. இவற்றில் இஸ்லாமியப் பண்பாட்டினை விளக்கும் தொன்ம நினைவுகள் பெரும்பாலான கதைகளை ஆக்கிரமித்துள்ளன. திருமணச் சடங்குகள், பிள்ளை பெறல், இத்தா இருத்தல், வியாபாரம் செய்தல், குடும்ப வாழ்க்கை என்று இவை காட்சி ரூபம் கொள்கின்றன.

இந்த மண் பொதிந்து வைத்திருக்கும் ரகசியங்கள் அனந்தம். அதுபோல மண்ணின் மனிதர்களிடமும் ஏராளமான ரகசியங்கள் உண்டு. அள்ள அள்ளக் குறையாத ரகசியங்களின் வாசனை கலைந்து விடாமல் அவற்றைக் கதைகளாக மீட்டெடுப்பதில் ஏ.பீர் முகம்மது வெற்றி பெற்றிருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும்.

**ஏ. அப்துல் றஸாக்**

விரிவுரையாளர்.

தென்கிழக்குப் பல்கலைக் கழகம்.

ஒலுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதைத் தொகுதியின் கதைமாந்தர்களும் சம்பவங்களும் இம்மண்ணிலிருந்தே பிறக்கின்றார்கள். வாழ்கின்றார்கள் மடிகின்றார்கள். ஆனால் அவர்களின் மொழியும் கதைகளும் அலைவுற்றபடியே இருக்கின்றன. அவற்றை கதைகளாக பீர்முகம்மது பத்திரப்படுத்தி இருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இன்றைய கதைகளின் முகங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. பாரம்பரிய கதை சொல்லல் முறையில் இருந்து பின் நவீனத்துவச் செல்நெறிவரை எத்தனையோ உருவ மாற்றங்களைக் கதைகளில் கடந்து விட்டோம். ஆனால் இதுதான் கதை வடிவம் என்று பிடித்து வைக்க முடியவில்லை. முடியும் வடிவங்களைப் பிடித்துக் கதை சொல்வதே உசிதம் என்று தோன்றுகிறது.

புழங்கு மொழியில் முழுக் கதையையும் சொல்வது எழுத்தாளன் ஏற்றுக் கொண்டுள்ள பெரும் சவால். இன்றைய நாட்களில் பழங்கால நினைவுகளை அசைபோடும் பீர்முகம்மது போன்ற அனுபவ பிராகிருதி ஒருவராலேதான் இது சாத்தியமாகும்.



**சிறுகதைகள்**

இலங்கை விலை - ரூ.470 இந்திய விலை - ₹100

ISBN 978-6-24-581624-8
9 786245 816248

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.gnazal.lk